இந்திய சுயராஜ்யம்

மகாத்மா காந்தி அவர்கள்

எழுதியது

கணேஷ் கம்பெனி,

சென்னை

அணா 8.

சூளாமணி வசனம்

ஜைன காவியங்களுள் ஒன்றாகிய சூளாமணி இனிய வசன நடையில் யாவரும் எளிதில் படித்து ஆனந்த மடையுமாறு, கடலூர் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், ந. பலராமையர் அவர்களால் இயற்றப் பட்டு உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களில் அரும்பத வகராதியுடன் பிரசுரிக்கப்பெற்றுளது.

"இதன்கண் நிகழும் சொற்றொடர்களும் அரும் பதங் களும் வர்ணனைகளும் மிகவும் சிறந்து பொலிவுற்றிருக் கின்றன. தமிழின் சிறப்பும், தமிழ்மொழியின் இனி மையும், மலரிடை மதுவெனச் சொறிந்துகிடக்கின்றன. இதில் கதாநாயகனை காயாம்பூமேனியனான கண்ணனு க்கு உவமைகாட்டியிருப்பது மிகப்பொருத்தமாகயிருக் கிறது. இதில் வரும் அரும்பதங்களை விளக்கும்பொரு ட்டு அரும்பத வகராதி ஒன்றும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. சமயத்திற்கேற்ப சூளாமணி காவியத்தி னின்று செய்யுள்களும் இடையிடையே முத்தும் பவ ழமும்போல் அலங்கரிக்கப்பெற்றிருக்கின்றன. இப் புத் தகம் தமிழ்கற்க விரும்பும் ஆடவருக்கும் மகளிருக்கும் ஓர் சிறந்த கைப்புத்தகமாகும்."—பெண் கல்வி மதிப் புரை.

1—0—0.

இந்திய சுயராஜ்யம்

11. 3. 39

இந்திய சுயராஜ்யம்

மகாத்மா காந்தி அவர்கள்

எழுதியது

அணா. 8.

கணேஷ் கம்பெனி, சென்னை

கேம்பிரிட்ஜ் பிரஸ், சென்னை

அட்டவணை

ஓம் சக்தி

மஹாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்க நீ! எம்மான், இந்த
 வையத்து நாட்டி லெல்லாந்
தாழ் வுற்று, வறுமை மிஞ்சி,
 விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ் பட்டு நின்ற தா மோர்
 பாரத தேசந் தன்னை
வாழ் விக்க வந்த காந்தி
 மஹாத்ம! நீ வாழ்க; வாழ்க. (1)

அடிமை வாழ் வகன் றிந் நாட்டார்
 விடுதலை யார்ந்து செல்வம்;
குடிமையி லுயர்வு, கல்வி,
 ஞான முங் கூடி யோங்கிப்
படி மிசைத் தலைமை யெய்தும்
 படிக் கொரு சூழ்ச்சி செய்தாய்;
முடி விலாக் கீர்த்தி பெற்றாய்;
 புவிக்குளே முதன்மை யுற்றாய். (2)

(வேறு)

கொடிய வெந் நாக பாசத்தை மாற்ற
 மூலிகை கொணர்ந்தவ னென் கோ?
இடி மின்னல் காக்குங் குடை செய்தா னென் கோ?
 என் சொலிப் புகழ்வ திங் குனை யே?

விடி விலாத் துன்பஞ் செய்யும் பராதீன
வெம் பிணி யகற்றிடும் வண்ணம்
படி மிசைப் புதி தாச் சாலவு மெளி தாம்
படிக் கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்! (3)

தன் னுயிர் போலே தனக்‘கழி வெண்ணும்
பிற னுயிர் தன்னை யுங் கணித்தல்;
மன் னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்;
கடவுளின் மக்க ளென் றுணர்தல்;
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற் றுங்
கிழி படு, போர், கொலை, தண்டம்
பின்னி யே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத் திடத் துணிந்தனை பெருமான்! (4)

பெருங் கொலை வழி யாம் போர் வழி யிகழ்ந்தாய்;
அதனி லுந் திறன் பெரி துடைத் தாம்
அருங் கலை வாணர், மெய்த் தொண்டர் தங்கள்
அற வழி யென்று நீ யறிந்தாய்;
நெருங்கிய பயன் சேர் “ஒத்துழையாமை”
நெறியினால் இந்தியாவிற்கு
வருங் கதி கண்டு, பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே. (5)

ஸி. சுப்பிரமணியபாரதி.

இந்திய சுயராஜ்யம்

முதல் அத்தியாயம்

காங்கிரஸும் அதன் பரிபாலகர்களும்

படிப்பவர்:—இப்பொழுது சுயராஜ்ஜியக் கிளர்ச்சி ஒன்று கிளம்பியிருக்கிறது. நமது தேசத்தாரெல்லோரும் நம் தேசத்தின் விடுதலையில் பேரவாக்கொண்டிருத்தல்போல் காணப்படுகிறது. இத்தகைய உணர்ச்சி தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்குள்ளும் பரவிவிட்டது. இந்தியர்களுக்கு சுதந்தர ஆசை (தாகம்) ஏற்பட்டுவிட்டதுபோலத் தோன்றுகிறது. இந்த விஷயத்தைப்பற்றி தமது அபிப்பிராயத்தைச் சற்று விவரிப்பீரா?

பத்திராதிபர் :—நீர் கேள்விகேட்டது சரியே; ஆனல் அதற்குப் பதில் சொல்லுவது கஷ்டமாயிற்றே. ஒரு பத்திரிகையின் நோக்கங்களிலொன்று யாதெனில், பொது ஜன உணர்ச்சியையறிந்து அதை வெளியிடுவதேயாம். மற்றென்று, ஜனங்களிடம் சில விரும்பத்தக்க குணங்களை உண்டாக்குவது. மூன்றுவது, ஜனங்களின் குற்றங்களை பயமின்றி எடுத்துரைப்பது. கேள்விக்குப்பதில் சொல்லுவதென்றால், இந்த மூன்று

கடமைகளையும் செலுத்தி நாள் முடிவில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். கொஞ்ச தூரம்வரையில் பொது ஜன நோக்கத்தை வெளியிடுவது அவசியந்தான். சில குணங்களை வளர்க்கவேண்டும்; குற்றங்களையும் "வெட்டவெளி" யாக்கவேண்டும். ஆனால் நீர், கேள்விகேட்டுவிட்டீர். அதற்குப் பதில் சொல்லுவது எனது கடமை.

படிப்பவர்:—அப்படியானல் சுயராஜ்ஜிய விருப்பம் நம்மிட த்தில் பிறந்துவிட்டதென்று நினைக்கிறீர்?

இந்திய தேசீய மகாநாடு

பத்திராதிபர் :—அந்த விருப்பந்தான் இந்தியன் நாஷனல் காங்கிரஸின் பிறப்புக்குக் காரணமாயிற்றே. "தேசீய" என்ற வார்த்தையைத் தேர்ந்தெடுத்ததனலேயே, அந்த ஆசை உண்டு என்று விளங்குமே.

படிப்பவர் :—கண்டிப்பாய், இல்லை. இந்திய வாலிபர்களுக்கு காங்கிரஸ் அவ்வளவு மதிப்புள்ளதாய்த் தோன்றவில்லை. ஆங்கில அரசை நம் தேசத்தில் சாசுவதமாக்கத்தோன்றிய ஒரு கருவியென்று அதை நினைக்கிறார்கள்.

பத்திராதிபர் :—அப்படி எண்ணுவது சரியன்று, (மகாத்மா) தாதாபாய், அஸ்திவாரம் போட்டிராவிடில், நமது இளைஞர்கள் சுயராஜ்ஜியத்தைப்பற்றிப் பேசக்கூட முடியாமற்போயிருக்கும். காங்கிரஸ் கோரின பலன்களையடைய, ஹியூம் அவர்கள் எழுதியவை, எவ்வளவு முயற்சிகொண்டு நம்மைத்தட்டி எழுப்பினதையும், நம்மை வேலைக்கு முற்படச்செய்ததையும் நாம்

எவ்வாறு மறக்கலாகும்? இந்த விஷயத்துக்கு வெட்டர்பர்ன், தம் உடல், பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தார். அவர் எழுதினயாவும் இன்றைக்கும் படிக்கத்தக்கவை. நமக்குள், தேசீய உணர்ச்சி உண்டாக்க, கோக்கலே வறுமை விரதம் பூண்டு, தம் ஆயுளில் இருபது வருஷகாலம் தேசத்தொண்டு செய்தார். இப்பொழுதும் அவர் ஏழைதான், காலஞ்சென்ற தியாப்ஜியும் காங்கிரஸ் மூலமாய் சுயராஜ்ஜியவிதை தெளித்தார். இப்படியே இந்தியாவின் மற்றைய பாகங்களிலும் இந்தியரிலும் சரி, ஆங்கிலேயரிலும் சரி, நம் தேசத்துக்கே உழைத்தவர்கள் அநேகர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள்.

படிப்பவர் :— சற்று நிதானித்துக்கொள்ளும். நிரம்ப வேகமாய்ப் போகிறீரே! நான் கேட்ட கேள்வியிலிருந்து நிரம்பதூரம் சென்றுவிட்டீர். நான் உம்மைக்கேட்டது சுயராஜ்யத்தைப்பற்றி, நீர் அன்னிய அரசாட்சியைப்பற்றி மிக விஸ்தாரமாகப் பேசுகிறீர். ஆங்கிலப்பெயரைக் கேட்பதில் எனக்கு இஷ்டமில்லை. அத்தகைய பெயர்களை நீர் சொல்லிக்கொண்டு வருகிறீர். ஆகையால் நீரும் நானும் ஒரு முடிவுக்கு வர முடியாது என்று நான் நினைக்கிறேன். சுயராஜ்ஜிய சங்கதியில்மாத்திரம் உம்முடைய கவனத்தை செலுத்துவீரானால், எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கும். வேறெந்தப்பேச்சும், ஞானம் படைத்ததாயிருப்பினும், எனக்கு ருசிக்காது.

பத்திராதிபர்:—நீர் அவஸரப்படுகிறீர். அந்தமாதிரி இருப்பது எனக்குக்கட்டாது, சற்றுநேரம் பொறுத்துக்

கொண்டால், உமக்கு வேண்டியது கிடைக்கும். ஒரு நாளிலே மரமாகாது என்ற பழைய சங்கதி உமக்கு ஞாபகமிருக்குமே. என் பேச்சிலே குறுக்கிட்டீர். நம் தேசத்தைப்பற்றி நல்ல எண்ணங்கள் கொண்டவர்களை ப்பற்றிக் கேட்க உமக்கு இஷ்டமில்லை. இதனாலேயே, உமக்கு சுயராஜ்ஜியம் வருவதற்கு அதிக நாள்பிடிக்கும். உம்மைப்போல வெகுபேர் இருப்பின், முன்னே அடி எடுத்துவைக்க நம்மால் ஒருநாளும் ஆகாது. இந்த விஷயம் நீர் கவனிக்கத்தக்கது.

படிப்பவர் :—வளைத்து வளைத்துப்பேசி என்னை சும்மா கடத்தப்பார்க்கிறீர்போலத் தோன்றுகிறது. யாரெல்லாம் இந்தியாவுக்கு நல்லவர்கள் என்று உமக்குத் தோன்றுகிறதோ, அவர்கள் எல்லாரும் அப்படிப்பட்டவர்கள் என்று என் மனதிலே படவில்லை. ஆகையால், நான் ஏன் ஐயா, இவர்களைப்பற்றிக் கேட்க வேண்டும்? நம் ஜாதிக்கெல்லாம் தகப்பன் என்று சொன்னீரே, அவர் அதற்கு என்னசெய்துவிட்டார்? "ஆங்கில அதிகாரிகள் நமக்கு நியாயமாய் நடப்பார்கள்; நாம் அவர்களுடன் ஒத்து வாழவேண்டும்" என்று அவர் சொல்லுகிறார்.

பத்திராதிபர் :—மிகவும் சாந்தமாய் சொல்லுகிறேன், கேளும். அந்த மாகானைப்பற்றி அவமரியாதையாக நீர் பேசுவது நமக்கெல்லோருக்கும் பெருத்த அவமானம். அவர்செய்த வேலையைப் பார்ப்போம். தேசத்தொண்டுக்கு அவர் ஆயுளை அர்ப்பணம் செய்தார். நாம் அறிந்தவையாவும் அவரிடமிருந்து, ஆங்கிலேயர்கள் நம்முடைய இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள்

என்று நமக்குக் கற்பித்தது அந்த மகானுபாவன் தாதாபாய். இன்றைக்கும் அவர் ஆங்கிலேய ஜாதியாரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார். அதனால் என்ன பாதகம்? (தோஷம்)? வாலிபமுறுக்கினால் நாம் அவரைவிட ஓர் அடி முன்செல்லத் தயாராயிருப்பதன் காரணமாக, அவரை மரியாதைக்குறைவாய் எண்ணலாமா? அப்படிச் செய்வதனால் நாம் அவரைவிட மேதாவிகளாய் விடுவோமா? எந்தப் படிவழியே நாம் மேலே வந்தோமோ அந்தப்படியைத் தட்டிவிடாமலிருப்பது தான் புத்திமான்களுக்கு அடையாளம். படிக்கட்டு ஒரு படிபோனால், முழுதும் இடிந்துபோகும். குழந்தையாயிருந்து பெரியவனானால், குழந்தைப்பருவத்தை நாம் இகழ்ந்து பேசுவதில்லை. ஆனால் நாம் குழந்தையாயிருந்தகாலத்தை எவ்வளவு சந்தோஷத்துடன் நோக்குகிறோம். நிரம்ப சிரமப்பட்டுப்படித்து ஒரு குரு எனக்கு சிலவற்றைக் கற்பித்து, அதற்குமேலே நான் சிலசங்கதிகள் தெரிந்துகொண்டால், அதனாலே அவரைக்காட்டிலும் நான் புத்திமான் என்று எண்ண முடியாது. அவரிடத்திலே எனக்கு எப்பொழுதும் மரியாதை யிருந்துகொண்டேயிருக்கும். இப்படித் தான் தாதாபாய் விஷயத்திலும், தேசிய உணர்ச்சிக்கு அவர்தான் காரணம் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

படிப்பவர் :— நீர் சொன்னது சரியே. தாதாபாயிடம் மரியாதையாகத்தா னிருக்கவேண்டும் என்று எனக்கு இப்பொழுது தெரிகிறது, அவரும் அவரையொத்தவர்களும் இல்லாவிடில், நம்மைக்கொளுத்தும்

இந்த ஆத்திரம் நமக்கு அனேகமாய் வந்திராது. இவ்விதம் கோக்கலேயைப்பற்றி எப்படிச்சொல்லலாம்? தன்னை ஆங்கிலேயர்களுக்கு அருமை நண்பராய் ஆக்கிக்கொண்டார். அவர்களிடமிருந்து நாம் மிகுதியும் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும், சுயராஜ்ஜியத்தைப் பற்றிப் பேசுவதற்குமுன் அவர்களுடைய ராஜீயஞானம் நாம் பெறுதல்வேண்டும் என்றும் அவர் சொல்லுகிறாரே! அவர் பேச்சை வாசிப்பதில் எனக்கு வெறுப்புண்டாகிவிட்டது.

பத்திராதிபர் :—நீர் சோர்வடைந்தால், அது உம்முடைய அவசர குணத்தைக் காண்பிக்கும். தாய் தந்தையர்களின் தாமதத்தை நொந்துகொண்டு, தங்களுக்குச் சரியாய் அவர்கள் ஓடவில்லை என்று கோபமடைபவர்கள் தாய்தந்தையர்களை அவமதிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். கோகலே நம் தந்தை ஸ்தானத்தை வகிக்கிறார். அவர் நம்மோடுகூட ஓடிவர முடியாவிட்டால் என்ன? சுயராஜ்ஜியம் வேண்டும் ஜாதியார் தங்களுடைய மூதாதைகளை இகழ்ந்து பேசலாகாது. நம்முடைய பெரியவர்களிடம் நமக்கு பக்தி குறைந்தால் நாம் ஒன்றுக்கும் பயன்படோம். பக்குவமடைந்த எண்ணங்களுள்ளவர்தாம் தங்களை அடக்கிக் கொள்ளலாம்; அவஸரகுணமுள்ளவர்களால் ஆகாது. மேலும், இந்தியர்களின் படிப்புக்காக கோகலே தன்னை அர்ப்பணம் செய்கையில் அவரைப்போல எத்தனை பேரிருந்தார்கள்? என்னவெல்லாம் கோகலே செய்கிறாரோ அவைகளை அவர் பரிசுத்த எண்ணங்களுடன் செய்கிறார் என்றும், தேசசேவைக்காகச் செய்கிறார் என்

றும் நான் உறுதியாய் நம்புகிறேன். அவசியமானால் தன் உயிரையும் கொடுத்துவிடக்கூடியபடி அவருக்குத் தாய் நாட்டினிடம் அவ்வளவு பக்தியிருக்கிறது. அவர் சொல்லுவதெல்லாம் பிறரை ஸ்தோத்திரம் செய்யும் பொருட்டல்ல. ஆனால் அவர் உண்மையென்று நம்பு வதனாலேதான். ஆகையால் அவருக்கு மிக்க மரியாதை காட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

படிப்பவர் :—அப்படியானால், எல்லாவிதத்திலும் அவரைப் பின்பற்றி நாம் நடப்பதா?

பத்திராதிபர் :—அப்படியொன்றும் நான் சொல்ல வில்லை. மனப்பூர்வமாய் நமக்கும் அவருக்கும் வித்தி யாஸமிருப்பின், நம்முடைய மனச்சாட்சியின்படி நம் மை நடக்கச் சொல்லுவாரேயொழிய, தன்னைப் பின் பற்ற அவர் சொல்லமாட்டார். அவர்செய்த வேலை யைக்குறைத்துப் பேசாமல், நம்மைவிட எவ்வளவோ அவர் உயர்ந்தவரென்றும், அவரைக்கண்டு, நம்முடைய வேலை எவ்வளவோ சிறிதென்றும் எண்ணுவதுதான் நம்முடைய முக்கியமானவேலை. அநேக பத்திரிகை கள் அவரை இகழ்ந்து எழுதுகின்றன. இவை யெல் லாவற்றையும் மறுத்துரைப்பது நமது கடமை. கோக லேயைப் போன்றவர்கள் சுயராஜ்ஜியத் தூண்கள் என்று நாம் கருதுதல் வேண்டும். பிறருடைய எண் ணங்கள் கெட்டவையென்றும், நம்முடையதுமாத்திரம் நல்லவையென்றும் ; நமக்கு மாறான எண்ணங்களுள்ள வர்களெல்லாரும், தேசவிரோதிகள் என்றும் நினைப்பது ஒரு கெட்டவழக்கம்.

படிப்பவர் :—உம்முடைய கருத்து இப்பொழுது

எனக்குக்கொஞ்சம் அர்த்தமாகிறது. இந்த விஷயத்தைப்பற்றி நான் யோசிக்கவேண்டும். ஹியூமைப் பற்றியும் வெட்டர்பர்ணைபற்றியும் சொல்லுகிறீரே, அது என்னறிவுக்கு எட்டவில்லை.

பத்திராதிபர் :—இந்தியர்களுக்கு எந்த விதியோ அதேவிதிதான் ஆங்கிலேயர்களுக்கும், ஆங்கிலேயர்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்பதை நான் ஒருபோதும் ஒத்துக்கொள்ளமாட்டேன். இந்தியா சுயராஜ்ஜியம் பெறுவது அநேக ஆங்கிலேயர்களுக்கு இஷ்டந்தான். மற்றவர்களைப் பார்க்கிலும் ஆங்கிலேயர்கள் சற்று அதிக சுயநலம் கருதுபவர்கள் என்பது உண்மையே என்றாலும் அதிலிருந்து ஒவ்வொரு ஆங்கிலேயனும் கெட்டவன் என்பது ருசு ஆகாது. பிறரிடமிருந்து நியாயத்தை விரும்பும் நாம் அவர்களைப்பற்றும் நியாயமாயிருக்கவேண்டும். இந்தியாவுக்குக் கேடு உண்டாகவேண்டும் என்று வெட்டர்பர்ன நினைத்ததில்லை ; இந்த சங்கதியே நமக்குப் போதும். நியாயமாய் நாம் நடந்தால் அதிவிரைவிலே இந்தியா சுதந்தரம் பெறும் என்பதை நீர் போகப்போகக் கண்டுகொள்ளுவீர். ஒவ்வொரு ஆங்கிலேயனும் நமக்கு விரோதி என்றெண்ணி விலக்கிவிட்டால், சுயராஜ்ஜியம் வருவதற்குத் தாமதமாகும் என்பதையும் நீர் தெரிந்துகொள்ளுவீர். ஆனால் அவர்களிடம் நாம் நியாயமாயிருந்தால், நம்முடைய இலக்ஷியத்தை அடைவதற்கு வேண்டிய ஆதரவை அவர்களிடமிருந்து நாம் பெறுவோம்.

படிப்பவர் :—எனக்கு இதெல்லாம் இப்பொழுது தப்பிதமாகத் தோன்றுகிறது. சுயராஜ்ஜியம் பெறுவ

தும் ஆங்கிலேயர்களின் உதவியும் ஒன்றுக்கொன்று விரோதமானவை. நாம் சுயராஜ்ஜியம் அடைகிற சங்கதியை ஆங்கிலேயர்கள் எவ்வாறு சகிக்கமுடியும்? இந்தக்கேள்விக்குச் சமாதானம் எனக்கு இப்பொழுது நீர் கொடுக்கவேண்டியதில்லை. அதிலே காலம் செலவழிப்பது வீண். நாம் எவ்விதம் சுயராஜ்ஜியம் பெறக்கூடும் என்பதை எனக்குக்காட்டும்பொழுது, உம்முடைய அபிப்பிராயங்களை ஒருக்கால் நான் தெரிந்துக்கொள்ளுவேன். ஆங்கிலேயர்களின் உதவியைப்பற்றிப் பேசினதினாலே, உம்மிடத்தில் எனக்கு வெறுப்புண்டாகிவிட்டது. இந்தச் சங்கதியைத் தொடர்ந்து பேசாதிருக்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

பத்திராதிபர் :—அவ்வித ஆசை எனக்கு இல்லை. என்னிடத்தில் வெறுப்புண்டாகிவிட்டது என்றீரே—அது நிரம்பக் கவலைக்கிடமான சங்கதியல்ல, துவக்கத்திலேயே பிரியமில்லாத சங்கதிகளைச் சொல்லுவது நல்லது. இனி மெதுவாய் உம்முடைய வெறுப்பைப் போக்க முயலுவது என்னுடைய கடமையாகும்.

படிப்பவர் :—அந்தக் கடைசிவார்த்தை எனக்குப் பிடித்திருக்கிறது. நான் இஷ்டப்பட்டதைச் சொல்ல எனக்குத் துணிவு கொடுத்துவிட்டது. இன்னும் ஒரு விஷயம் தெரியவில்லை. சுயராஜ்ஜியத்திற்கு அஸ்திவாரம் காங்கிரஸ் போட்டது என்றீரே, அது அர்த்தமாகவில்லை.

பத்திராதிபர்:—நல்லது, பார்ப்போம். காங்கிரஸ், இந்தியாவின் எல்லாப் பாகங்களினின்றும் இந்தியர்களைக் கூட்டி, அவர்களுக்குத் தேசீய உணர்ச்சியைப் புகட்டி

விட்டது. அரசாங்கத்தார் அதை அதிருப்தியுடன் நோக்குவது வழக்கம். வரிபோடுவதும் செலவழிப்பதும் ஜனங்கள் கையிலிருக்கவேண்டுமென்று காங்கிரஸ் எப்பொழுதும் வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறது. கானடா ஆட்சியைப்போன்ற சுய ஆட்சி நமக்கு வேண்டும் என்று எப்பொழுதும் அதற்கு விருப்பமுண்டு. நமக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ, நாம் ஆசைப் படுகிறோமோ இல்லையோ, நாம் அதிகத்துக்கு ஆசைப் படவேண்டுமல்லவா? இவையெல்லாம் வேறு சங்கதிகள். சுயராஜ்ஜிய ருசி காங்கிரஸ் கொடுத்தது என்பதைத்தான் உமக்கு நான் சொல்லவேண்டும். அதற்கு அந்த கௌரவத்தைக் குறைத்துவிடுவது சரியன்று அப்படிச் செய்தோமானல் நாம் நன்றிகெட்டவர்கள்; அதுவுமன்றி நாம் கோரினபலனை அடைவதற்குத் தடையாக நிற்கும். நாம் ஒரு ஜாதியாய் அமைக்கப் படுவதற்குக் குறுக்கே நிற்பது என்று காங்கிரஸைக் கருதிவிட்டால், அந்தக் கூட்டத்தாரை நமக்கு உபயோகமுள்ளவர்களாய் ஆக்கிக்கொள்ள முடியாது.

அத்தியாயம் 2

வங்காளப்பிரிவினை

படிப்பவர் :—நீர் சொல்லுகிறபடி விஷயத்தை யோசித்துப்பார்த்தால், சுயராஜ்ஜிய அஸ்திவாரத்துக்கு காங்கிரஸ்தான் காரணம் என்று சொல்லுவது சரியென்று தோன்றுகிறது. ஆனல் அது உண்மை

யான விழிப்பு எனக்கருதுதல் முடியாது என்று நீரே ஒப்புக்கொள்ளுவீர். எப்பொழுது எந்தவிதமாய் உண்மையான உணர்ச்சி உண்டாயிற்று?

பத்திராதிபர் :—விதை காணப்படுவதில்லை. அது பூமிக்குள்ளேயே வெடித்து முளைத்து அழிகின்றது. மண்ணின்மேல் தோன்றும் மரந்தான் கண்ணுக்குத் தெரிகிறது. காங்கிரஸ் சங்கதியும் இதைப்போலத் தான். எனினும், உண்மையான விழிப்பு என்றீரே அது வங்காளப்பிளப்பினால் ஏற்பட்டது. இதனிமித்தம் கர்ஸன் பிரபுக்கு நாம் வந்தனமளிக்கவேண்டும். பிளப்பின்காலத்தில், வங்காளிகள் கர்ஸன் பிரபுவிடம் வாதாடிப்பார்த்தனர். அவர் அதிகாரச் செருக்கினால் அவர்களின் வேண்டுகோள்களை அவமதித்துவிட்டார். இந்தியர்களினால் சத்தந்தான் போடமுடியுமென்றும், பலன் தரக்கூடிய வழிகளை அவர்கள் பின்பற்றமுடியாதென்றும், அவர் நினைத்துக்கொண்டார். அவர் இந்தியர்களை அவதூறாய்ப் பேசினார். வங்காளத்தைப் பிரித்தார். அந்நாளை ஆங்கில ஏகாதிபத்தியத்தியம் பிளந்த நாளென்றே கருதலாம். அப்பிளவினால் ஆங்கில அதிகாரத்துக்கு அதிர்ச்சியைப்போல வேறெந்தச் செயலினாலும் உண்டானதில்லை. அதனால், பிளவினால் உண்டான அனியாயத்தைவிட இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட மற்றைய தீங்குகள் குறைந்த தெளிவுள்ளவைகள் என்று எண்ணுதல் ஆகாது. உப்புவரி ஒரு சிறிய தீங்கு அன்று. இம்மாதிரி அநேக சங்கதிகள் உப்பினாலே பார்த்துக்கொள்ளலாம். ஆனால் இந்த வங்காளப்பிரிவை எதிர்த்துநிற்க ஜனங்கள் தயாரா

யிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் இரத்தம் கொதித்தது, நரம்பு துடிதுடித்தது. தங்களுக்குள்ள வைகளையெல்லாம் இழக்க அநேக வங்காளிகள் தயாராயிருந்தனர். தங்கள் சக்தியை அவர்கள் தெரிந்து கொண்டார்கள்; அதனாலேதான் இத்தீ எழுச்சி; இது இனிமேல் அடங்காது. இதை அணைக்கவும் வேண்டியதில்லை. பிளவு போய்விடலாம்; வங்காளம் திரும்பவும் சேர்ந்துவிடலாம். ஆனால் ஆங்கிலப்படகில் (ஏகாதிபத்தியத்தில்) ஏற்பட்டுவிட்ட பிளவு தினமும் விசாலப்பட்டுக்கொண்டே வரும், விழித்துக்கொண்ட இந்தியா இனிமேல் அநேகமாய் தூங்கப்போவதில்லை. பிளவை ரத்துச்செய்யக் கேட்பது, சுயராஜ்ஜியம் கேட்பதற்கு சரியே. வங்காளத் தலைவர்களுக்கு இது தெரியும்; ஆங்கில அதிகாரிகளும் இதை உணர்ந்துகொண்டார்கள். அதனாற்றான் பிரிவு இன்னும் ரத்தாகவில்லை. காலம் செல்லச்செல்ல தேசமும் ஒன்றுபட்டு விடும். தேசம் ஒரு நாளில் ஒன்று பட்டதில்லை; ஒன்றுபட வருஷக்கணக்கிலே ஆகும்.

படிப்பவர் :—இந்தப்பிரிவினையால் ஏற்பட்ட பலன்கள் யாவையென்று நீர் நினைக்கின்றீர்.

பத்திராதிபர்:—நம்முடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ள அரசனிடம் செல்லவேண்டும் என்றும், நம்முடைய குறைகள் அவ்விதம் நீங்காமற் போனால், மனுப்பண்ணிக்கொள்ளலாம் அல்லது சும்மாவிருத்தல்தான் கூடும், என்று எண்ணியிருந்தோம். பிரிவினைக்குப் பிறகு பக்கபலமிருந்தாலொழிய மனுக்களுக்கு மதிப்பில்லையென்றும் கஷ்டங்களையனுபவிக்கத் தயாராயிருக்கவேண்

டுமென்றும் ஜனங்கள் தெரிந்துகொண்டார்கள் இந்தப் புதிய மனோபாவந்தான் பிரிவினையினால் நாம் அடைந்த முக்கிய பலன். பத்திரிகைகளில் கபடின்றி எழுதின எழுத்தினின்றும் இந்த மனோபாவம் தெரியவந்தது இரகசியமாயும் நடுக்கத்துடனும் இதுவரையிலும் ஜனங்கள் சொல்லிவந்தவை யெல்லாம் மிகவும் பகிரங்கமாய் எழுத்தில் வெளிவர ஆரம்பித்தன. சுதேச இயக்கம் பிறந்தது. வாலிபர், கிழவர் எல்லோரும் ஆங்கில முகத்தைக்கண்டு பயந்து ஓடுவது வழக்கம். இதனின்று அந்த பயம் பறந்தே போய்விட்டது சச்சரவுக்காவது ஜயிலுக்குப்போவதற்கும் அவர்கள் பயங்கொள்ளவில்லை- இந்தியமாதாவின் சில அருமைப்புதல்வர்கள் தேசப்பிரஷ்ட மாகி யிருக்கிறார்கள். மனுப்பண்ணிக் கொள்ளுவதைக்காட்டிலும் இது எல்லாம் சற்று வித்தியாஸமல்லவா? இவ்விதம் ஜனங்கள் உணர்ச்சியடைந்தார்கள். வங்காளத்தில் பிறந்த மனோபாவம் வடக்கே பஞ்சாப் வரையிலும் தெற்கே கன்னியாகுமரி வரையிலும் எட்டியது.

படிப்பவர் :—இதைத்தவிர வேறு திருஷ்டபலன் ஏதாவது உண்டா?

பத்திராதிபர் :—பிரிவினை ஆங்கிலக் கப்பலில் விரிசல் உண்டாக்கினதல்லாமல் நமக்குள்ளும் வேற்றுமையுண்டாக்கி விட்டது. பெருத்தசெயல்கள் பெரும் பயன்களைப் பயக்கும். நமது தலைவர்கள் இரண்டாகப்பிரிந்து கொண்டார்கள். மிதவாதிகள், அமிதவாதிகள். இதை நாம் தாமதக்கட்சி, அவஸரக்கட்க்ஷி என்று வைத்துக் கொள்ளுவோம். மிதவாதிகளை பயங்காளிக்கக்ஷி யென்

றும் அமிதவாதிகளை தைரியஸ்தர்கள் கக்ஷியென்றும் சிலர் சொல்லுகின்றனர். தங்களுடைய மனப்போக்குக்குத் தக்கபடி இந்த வார்த்தைகளுக்கு எல்லோரும் அர்த்தம் கற்பிக்கிறார்கள். இவ்விருவருக்கும் விரோதம் உண்டாகிவிட்டது என்பதுமாத்திரம் உண்மை. ஒருவர் மற்றவரிடம் நம்பிக்கை யிழந்து ஒருவர் மற்றவருக்குத் துரெண்ணம் இருப்பதாக ஸ்தாபிக்கின்றனர். சூரத்து காங்கிரஸ் சமயத்தில், சண்டையே வந்துவிட்டது ; ஆனால் இந்தப்பிளவு நீடித்திராது என்றே நான் நினைக்கிறேன். எத்தனைகால மிருக்குமென்பது தலைவர்களைப் பொறுத்தது.

அத்தியாயம் 3

அதிருப்தியும் இயக்கமும்

படிப்பவர் :—வங்காளப் பிரிவினையா நமது விழிப்புக்குக் காரணம் என்று நினைக்கிறீர்? அதினின்று வந்த இயக்கத்திலே உமக்கு சந்தோஷந்தான்.

பத்திராதிபர் :—தூக்கத்திலிருந்து ஒரு மனிதன் எழுந்திருந்தால் கைகால்களை முறுக்கிக்கொண்டு அங்குமிங்கும் புரளுவான். அவன் சரியாய் விழித்துக்கொள்ளக் கொஞ்ச நாழிகை செல்லும். பிரிவினை யினால் விழிப்பு வந்த போதிலும், தூக்கமயக்கம் இன்னும் தெளியவில்லை. இன்னும் கைகால்களை முறுக்கிக்கொண்டு புரண்டுகொண்டிருக்கிறோம். விழிப்புக்கும் தூக்கத்துக்கும் நடுவே யுள்ளநிலை அவசியமானதுபோல தற்

காலத்தில் இந்தியாவிலுள்ள இயக்கமும் அவசியந்தான் அப்படி இருப்பதும் சரியே, தேசத்தில் அமைதியின்மை இருக்கிறது என்ற அறிவே நம்மை அதினின்றும் அனேகமாய் விடுவித்துவிடும். தூக்கத்திலிருந்து விழித்தபிறகு, எப்பொழுதும் மயக்கத்திலிருப்பதில்லை, நம்முடைய சக்திக்குத் தக்கபடி, தாமதமாகவோ சீக்கிரமாகவோ முழுவதும் விழித்துக் கொள்ளுகிறோம்.

படிப்பவர் :—கலக்கத்தின் வேறு உருவம் யாது?

பத்திராதிபர்:—உண்மையிலே அமைதியின்மை (கலக்கம்) என்பது அதிருப்திதான். இப்பொழுது அந்த அதிருப்திக்குக்கலக்கம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ்காலத்தில் அதை அதிருப்தியென்று முத்திரையடித்தார்கள். இந்தியாமுழுவதும் அதிருப்தி பரவ வேண்டுவது அவசியம் என்று ஹியூம் எப்பொழுதும் சொல்லிவந்தார். இந்த அதிருப்தி மிகவும் உபயோகமுள்ள வஸ்து. ஒரு மனிதனுக்கு தன் தற்கால நிலைமையில் திருப்திவிழுந்துவிட்டால், அதினின்றும் அவனை உயர்த்துவது மிகக்கடினமை. அதனாலேதான் ஒவ்வொரு சீர் திருத்தத்துக்கு முன்னும் அதிருப்தி இருத்தல் வேண்டும். நம்மிடமுள்ள சாமான்களைப் பிடிக்காத காலத்திலேதான், நாம் விசிறி எறிகிறோம். இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் எழுதிய அருமையான நூல்களை படித்த பின்னர் நமக்கு இத்தகைய அதிருப்தி உண்டாகிவிட்டது. அதிருப்திகலக்கத்துக்குக் காரணமாயிற்று, அதினின்றும், அனேக சாவுகள், காவல்கள்' தேசப்பரஷ்டங்கள் முதலியன விளைந்தன, இப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டே

யிருக்கும், இருந்துகொண்டேதானிருத்தல் இவையெல்லாவற்றையும் நற்குறிகளென்று கருதலாம், ஆனால் இவை கேடான பலன்களையும் விளைவிக்கும்.

அத்தியாயம் 4

சுயராஜ்ஜியம் என்பதுயாது?

படிப்பவர்:—இந்தியாவை ஒன்று படுத்தும்பொருட்டு காங்கிரஸ் செய்தவேலையும், பிரிவினையினால் ஏற்பட்ட விழிப்பும், நாடு முழுதும் அதிருப்தியும் கலக்கமும் பரவியவிதமும் நான் இப்பொழுது தெரிந்துகொண்டேன் சுயராஜ்ஜியத்தைப் பற்றி தங்கள் எண்ணங்களைக் கேட்க நான் விரும்புகின்றேன், இந்த சங்கதியில் நம்மிருவர் மனமும் வேருபட்டிருக்கிறதேன்றே நான் எண்ணுகிறேன்.

பத்திராதிபர்:—சுயராஜ்ஜியம் என்ற வார்த்தைக்கு நம்மிருவர் அருத்தமும் வெவ்வேறாயிருக்கலாம். நீர், நான், இந்தியரெல்லோரும் சுயராற்ஜியம் பெற ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம்; ஆனால் அது என்னவென்று நமக்குள் ஒரு நிச்சயம் ஏற்படவில்லை. ஆங்கிலேயர்களை இந்தியாவைவிட்டு துரத்தவேண்டுமென்று அனேகர் சொல்லுகின்றனர், ஆனால் அது ஏன் அப்படியாக வேண்டுமென்று அனேகர் யோசித்ததாகத்தெரியவில்லை. நான் உம்மையொன்று கேட்கவேண்டும். நமக்கு வேண்டியதெல்லாம் கிடைத்துவிட்டால், ஆங்கிலேயர்களை

துறத்தவேண்டியது அவசியம் என்று நீர் நினைக்கிறீரோ?

படிப்பவர் :—“ எங்கள் தேசத்தை விட்டுவிடுங்கள் ” என்ற ஒரே ஒரு கேள்விதான் அவர்களை நான் கேட்பேன். அவர்கள் இந்த வேண்டுகோளுக்கு இணங்கிய பின்னர், இன்று இந்தியாவில் அவர்களிருப்பினும் நான் பெரிதும் ஆட்சேபிக்கமாட்டேன். அப்பொழுது நம்முடைய பாஷையில் போனார் என்பதற்கு இருந்தார் என்று பொருள் என நான் தெரிந்துகொள்ளுவேன்.

பத்திராதிபர்:—நல்லது, ஆங்கிலேயர்கள் போய்விட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே நீர் என்ன செய்வீர்.

படிப்பவர்:—அந்த கேள்விக்கு இந்த இடத்தில் பதில் சொல்லமுடியாது. அவர்கள் போன பிறகு உள்ள நிலைமையைப் பொறுத்தது. நீர் சொல்லுகிறபடியே அவர்கள் போய் விட்டார்கள் என்று வைத்துக் கொண்டால் அப்பொழுதும் அவர்களின் அரசாட்சி முறையைப் பின் பற்றி சுயராஜ்ஜியம் நடத்துவோம். சொன்னவுடனே அவர்கள் போய் விட்டால் நம் கையில் சேனை தயாராயிருக்கும். ஆகையினால் நமக்கு ராஜ்ஜியம் நடத்துவதில் கஷ்டமேயிருக்காது.

பத்திராதிபர் :—நீர் அவ்விதம் நினைத்துக் கொள்ளலாம், என்னால் முடியாது. ஆனால் அதைப்பற்றி இப்பொழுது விஸ்தாரமாய்ப் பேச எனக்கு இஷ்டமில்லை. உம்முடைய கேள்விக்கு பதில் சொல்லவேண்டும்; அதற்காக, உம்மைச்சில கேள்விகள் கேட்டுவிட்டால்,

தீர்ந்துபோய்விட்டது. ஆங்கிலேயர்களைத்துறத்த நாம் ஏன்விரும்புகிறோம்?

படிப்பவர் :—ஏனென்றால் அவர்கள் அரசாட்சியினால் இந்தியா ஏழையாகிவிட்டது. வருஷந்தோறும் நம்முடைய பணத்தை அவர்கள் வாரிக்கொண்டு போகிறார்கள். முக்கியமான உத்தியோகங்களையெல்லாம் அவர்களுக்கென்றே வைத்துக்கொள்ளுகிறார்கள். நாம் அடிமைத்தனத்தில் வைக்கப் பட்டிருக்கிறோம். நம்மிடத்தில் மரியாதைக் குறைவாய் நடந்து கொள்ளுகிறார்கள். நம்மை அவர்கள் சற்றேனும் மதிப்பதில்லை.

பத்திராதிபர் :—நம்முடைய பணத்தை எடுத்துக் கொண்டுபோகாமல், சாந்தமாகி நமக்கு பொருப்புள்ள உத்தியோகங்கள் கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுதும் அவர்கள் இங்கேயிருப்பது நமக்குக் கெடுதல் என்று நீர் நினைப்பீரா?

படிப்பவர்:—இந்தக்கேள்வி பயனற்றது, தன்னியற்கையை மாற்றிக்கொண்டால் புலியுடன் பழகலாமா என்று கேட்பதுபோலவிருக்கிறது இந்த கேள்வி, இப்படிப் பட்ட கேள்வி, வெறும் கால ஹரணம். புலி எப்பொழுது தன்னியற்கையை மாற்றிக்கொள்ளுமோ அப்பொழுது தான் ஆங்கிலேயர்கள் தங்கள் இயல்பை மாற்றிக்கொள்ளுவார்கள். இது சாத்தியமல்ல; சாத்தியமென்று நம்புதல் நம் அனுபவத்துக்குப்பொருந்தாது.

பத்திராதிபர் :—கானடியர்களுக்கும் தென் ஆப்ரிக்காக்காரர்களுக்கு மிருப்பதைப் போலொத்த சுயராஜ்ஜியம் நமக்கும் கிடைத்தால், அதுபோதுமா?

படிப்பவர் :—இந்தக்கேள்வியும் பயனற்றது. அவர்

களிடமிருப்பதுபோல நம்மிடமும் குண்டு துப்பாக்கி கள் இருந்தால் நமக்குக்கிடைக்கும். ஆனால் அவர்க ளிடமிருக்கும் சக்தி நமக்கும் இருந்தால் நம்முடைய கொடியை நாம் உயர்த்திக் கொள்ளுகிறோம். ஜப்பானி ருப்பது போல, இந்தியாவும் இருக்கவேண்டும். நமக்கு நம்முடைய கடற்படை, நம்முடைய சேனை இருக்க வேண்டும். நம்முடைய சொந்தப்பெருமை நம்மிட மிரு த்தல் வேண்டும். அப்பொழுது இந்தியாவின் தொனி உலகமெங்கும் கேட்கும்.

பத்திராதிபர் :—நன்று கூறினீர். ஆங்கிலேயர்கள் இல்லாமல் அவர்களின் அரசாட்சி முறையை மாத்தி ரம் விரும்புகிறீர் என்பது அதன் சாரம். புலியினு டைய சுபாவம் வேண்டும்; ஆனால் புலி வேண்டாம். அதாவது இந்தியாவை ஆங்கில இயற்கை உள்ளதாய்ச் செய்வீர். அப்படிச் செய்த பிறகு, அதற்கு இந்துஸ்தா னம் என்ற பெயரில்லை; ஆனால் ஆங்கிலஸ்தானம் என்ற பெயர் வரும். நான் கோரும் சுயராஜ்ஜியம் இதல்ல.

படிப்பவர் :—சுயராஜ்ஜியம் எப்படியிருக்க வேண்டு மென்று என் அபிப்பிராயத்தை உமக்குத் தெரிவித்து விட்டேன். நாம் அடைந்தபடிப்பு எதற்கேனும் பிரயோ ஜனமாயின், ஸ்பென்ஸர், மில் முதலியவர்களின் நூல் களுக்கு ஒரு யோக்கியதை யிருப்பின், எல்லா மகா சபைகளுக்கும் ஆங்கிலப் பார்லிமெண்டு தாய் என்பது உண்மையாயின், நாம் ஆங்கிலேய ஜனங்களை பின்பற்றி நடக்கவேண்டும் என்று உறுதியாய்ச்சொல்லுவேன். இதுவரையிலும் பின்பற்றலாம். அதாவது பிறரை அவர்கள் தங்கள் தேசத்தில் காலடி வைக்கவிடுவதில்லை

என்பதைப்போல, நாமும் அவர்களையும் மற்றவர்களையும் நம் தேசத்தில் அடிவைக்கவிடக்கூடாது. அவர்கள் தேசத்தில் என்ன செய்திருக்கின்றனரோ அது வேறெந்த தேசத்திலும் செய்யப்பட்டதில்லை. ஆகையால் அவர்களின் அரசாட்சிமுறையை நம் தேசத்துக்குக் கொண்டுவருதல் சரியாகும், ஆனால் உம்முடைய அபிப்பிராயம் என்ன ?

பத்திராதிபர்:—சற்றுப் பொறுத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பேச்சுப்போக்கிலேயே என் அபிப்பிராயங்கள் தாமாகவே வெளிவரும். சுயராஜ்ஜியத்தின் உண்மையான இயல்பையறிவது உமக்கு இலகுவாயிருக்கின்றது; ஆனால் எனக்கு மிகக்கடினமாய்த் தோற்றுகிறது. எதை சுயராஜ்ஜியம் என்கின்றீரோ அது உண்மையிலே சுயராஜ்ஜியமல்லவென்று மாத்திரம் இப்பொழுது காண்பித்துவிட்டு நான் நிருத்திக் கொள்ளுகிறேன்.

அத்தியாயம் 5

இங்கிலாந்தின் நிலைமை?

படிப்பவர்:—நீர் சொல்லுவதினின்றும் இங்கிலாந்தின் அரசாட்சி முறை விரும்பத்தக்கதல்லவென்றும் அதை நாம் அனுசரிக்கத்தக்கதல்லவென்றும் ஊகித்துக்கொண்டேன்.

பத்திராதிபர்:—நீர் ஊகித்தது சரியே. தற்காலம் இங்கிலாந்து பரிதபிக்கத்தக்க நிலைமையிலிருக்கிறது.

அந்நிலைக்கு இந்தியாவும் வரக்கூடாது என்று கடவுளை நான் வேண்டுகிறேன். மகா சபைகளுக்கெல்லாம் தாய் என்று நீர் சொன்ன ஆங்கிலப் பார்லிமெண்டு சபை மலடியைப்போலவும் கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீயைப் போலவுமிருக்கிறது. இவ்விரண்டும் கடுமையான பதங்கள்தான், என்றாலும் பொருந்தும். பார்லிமெண்டு சபை இதுவரையிலும் தானாக ஒரு நல்ல காரியமும் செய்ததில்லை. அதனாலேதான் அதை மலடிக்கு ஒப்பிட்டேன். வெளியினின்றும் நெருக்கடி வந்தாலொழிய அது ஒன்றும் செய்வதில்லை. பார்லிமெண்டினுடைய இயல்பேயிது. அடிக்கடி மாறக்கூடிய மந்திரிகளின் ஆளுகைக்குட்பட்டிருப்பதால் அதை கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீக்கு ஒப்பிட்டேன். இன்றைக்கு மிஸ்டர் ஆஸ்குவித்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது; நாளைக்கு பால்பருக்கு அடங்கினதாகும்.

படிப்பவர் :—இதை கேலியாய்ப் பேசியிருக்கிறீர். மலடி என்ற பதம் பொருந்தாது. ஜனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையாதலின் பொது ஜன அபிப்பிராயத்துக்குப் படிந்து நடக்கவேண்டும். இது அதன் குணமாகும்.

பத்திராதிபர் :—உமது கருத்துத் தவறு. கிட்ட நெருங்கி அதைச்சற்று சோதிப்போம். உயர்ந்த மனிதர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது பாவனை, அங்கத்தினர்கள் சம்பளமில்லாமல் உழைக்கிறார்கள் ஆகையினால் பொது நலத்துக்குத்தான் என்று எண்ணுதல் வேண்டும். ஓட்சுதந்திரமுள்ளவர்கள் படிப்பாளிகள் என்று கருதப்படுகின்றனர்; ஆகையி

ளுல் அங்கத்தினர்களை பொறுக்கியெடுப்பதில் அவர்கள் தப்பிதம் செய்வதில்லை என்று வைத்துக்கொள்ளு வோம். மனுவின் பேரிலோ அல்லது வேறெந்த நெருக்க டியின் பேரிலோ தான் இந்த சபை காரியம் செய்ய வேண்டுமென்பதில்லை. தங்கு தடையில்லாமல் அந்தச் சபையார் செய்யும் வேலையினின்றும் அதன் பலன் நாளுக்கு நாள் எளிதில் புலப்படவேண்டும். ஆனுல் அங்கத்தினர்கள் கபடிகளென்றும் சுய நலமுள்ளவர்க ளென்றும் பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்ளு கிருர்கள். ஒவ்வொருவரும் தம் சிறிய லாபத்தையே கவனிக்கின்றனர். காரியமெல்லாம் பயத்தின்பேரில் நடக்கிறது. இன்றைக்குச் செய்தது நாளைக்கு ரத்து ஆகி விடலாம். கடைசியாய் ஒரு சங்கதி முடிந்துவிட்டது என்று ஒரு காரியத்தைப் பற்றியும் சொல்லமுடியாது. முக்கியமான விஷயங்களை வாசித்துக்கொண்டிருக்கை யில், சபையில் அநேகர் காலை நீட்டித் தூங்கிக்கொ ண்டிருப்பதை பார்த்திருக்கின்றனர். சில சமயங்களில் கேட்பவர் காது கொப்பளிக்கும் வரையில் பேசிக் கொண்டிருப்பார்கள். இதற்கு உலகத்தின் "பேச்சுக் கடை" என்று கார்லைல் பெயர்வைத்திருக்கிருர். அங் கத்தினர்கள் ஒரு யோசனையுமில்லாமல் தங்கள் கட்சி க்கு சீட்டுப் போடுவார்கள். சுயேச்சையுடன் ஒருவர் தன் சீட்டைப் போடுவாரானுல் அவர் தன் ஜாதியை இழந்தவராகின்றனர். பார்லிமெண்டு சபையாரால் செலவழிக்கப்பட்ட காலத்தையும் பணத்தையும் நல்ல வரான சிலரிடம் ஒப்புவித்துவிட்டால், ஆங்கில ஜாதி யார் இன்றைக்கு இன்னும் அதிக உன்னத நிலையி

விருப்பார்கள். பார்லிமெண்டு சபை, ஜனங்களின் விலை பெற்ற ஒரு விளையாட்டு சாமான் ஆகும். இந்த எண்ணங்களெல்லாம் என்னுடையது மாத்திரமல்ல. உண்மையான கிருஸ்தவன் அந்த சபையின் அங்கத்தினராகலாகாது என்று பார்லிமெண்டு அங்கத்தினர்களில் ஒருவர் கொஞ்சகாலத்துக்கு முன் சொன்னார். அது ஒரு குழந்தை என்று மற்றொருவர் சொன்னார். எழு நூறு வருஷகாலத்துக்குப் பிறகு இன்னும் அது குழந்தையாயிருப்பின், என்றைக்கு அதற்கு குழந்தைப் பருவம் நீங்கும்.

படிப்பவர் :—என்னை யோசிக்கும்படியாய்ச் செய்து விட்டீர். நீர் சொல்வதையெல்லாம் உடனே நான் ஒப்புக்கொள்ள, நீர் என்னை எதிர்பார்க்கமுடியாது. முற்றிலும் புதிய சங்கதிகளாய்ச் சொல்லிக்கொண்டு வருகின்றீர். இதையெல்லாம் பற்றித்தீர யோசிக்கவேண்டும். இப்பொழுது "கெட்ட ஸ்திரீ என்ற பதத்துக்கு சமாதானம் சொல்லும்.

பத்திராதிபர் :—என்னுடைய அபிப்பிராயங்களை நான் சொன்னவுடனே நீர் ஒப்புக்கொள்ளமுடியாது என்பது சரியே. இந்த சங்கதியைப்பற்றிய நூல்களை நீர் படிப்பீரானால், உமக்கு விஷயம் சற்றுத் தெரியும். பார்லிமெண்டு சபை உண்மையான நாதன் (நாயகன்) இல்லாமலிருக்கிறது. பிரதம மந்திரியின் கீழ் அந்தசபை நடுக்கத்துடன் நடக்கிறது; கெட்டஸ்திரீயைப் போல அங்குமிங்கும் தள்ளப்படுகின்றது. முதல் மந்திரி, பார்லிமெண்டின் க்ஷேமத்தைக்காட்டிலும் தன்னுடைய அதிகாரத்தில் கருத்துக் கொண்டவரா யிருக்கின்றனர்.

அவருடைய கக்ஷியார் வெற்றிபெறுவதிலேயே அவர் குறியாய் நிற்கின்றனர். பார்லிமெண்டு நல்லது செய்ய வேண்டுமே என்ற கவலை அவருக்கில்லை. வெறும் கட்சி இலாபத்துக்காக, முதல் மந்திரிகள் பார்லிமெண்டை அநேக காரியங்களை செய்யச்செய்தது எல்லோருக்கும் தெரியும். இவையெல்லாவற்றையும் பற்றியோசிப்பது நலம்.

படிப்பவர்:—யோக்கியர்களென்றும் தேசபக்தர்கள் என்றும் இதுவரையில் நாங்கள் எண்ணியிருந்த மனிதர்களை எதிர்த்துப்பேசுகின்றீரே?

பத்திராதிபர்:—ஆமாம். அது உண்மையே. பிரதம மந்திரிகளிடம் எனக்கு ஒரு விரோதமுமில்லை; நான் பார்த்தவையினின்றும் அவர்களை தேசபக்தர்கள் எனக்கருதுதல் முடியாது. இலஞ்சம் வாங்குவதில்லை என்பதனுல் மாத்திரம் அவர்களை யோக்கியர்கள் என்று எண்ணினுல் எண்ணலாம்; ஆனுல் சூட்சுமமான சில சக்திகளுக்கு அடங்கினவர்கள். தங்கள் நோக்கங்களை முடித்துக்கொள்ளும் பொருட்டு, ஜனங்களுக்கு பட்டங்கள் மூலமாய் இலஞ்சம் கொடுக்கிருர்கள். உண்மையிலேயே யோக்கியர்கள் என்ருவது, அல்லது நிலையான மனச்சாட்சியுள்ளவர்கள் என்ருவது சொல்ல நான் பெரிதும் தயங்குவேன்.

படிப்பவர்:—பார்லிமெண்டு சபையாரைப் பற்றிச் சொல்லிவிட்டீர். ஆங்கில ஜனங்களைப்பற்றி உமது அபிப்பிராயங்களை அறிந்துகொண்டால், அதினின்றும் அவர்களுடைய அரசாட்சியைப்பற்றிய உமது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளுவேன்.

பத்திராதிபர் :—இங்கிலாந்தில் ஓட் சுதந்திரமுள்ளவர்களுக்கு, அவர்களின் பத்திரிகை அவர்களுக்கு வேதம். அவர்களின் பத்திரிகைகளினின்றும் தங்கள் அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றனர் ; ஆனால் பத்திரிகைகளெல்லாம் யோக்கியதை உள்ளதல்ல. அந்தந்தக் கட்சி லாபத்துக்குத் தக்கபடி பத்திரிகைகள் ஒரே விஷயத்திற்குப் பல பொருள்கள் உண்டாக்குகின்றன. ஒரு உயர்ந்த ஆங்கிலேயரை, நேர்மையின் அவதாரம் என்று ஒரு பத்திரிகை கூறும். மற்றொன்று அவரை அயோக்கியர் என்று கருதிவிடும். இம்மாதிரி பத்திரிகைகளுள்ள ஜனங்களின் நிலைமை எப்படியிருக்கும் ?

படிப்பவர் :—நீர் தான் விவரமாய்ச் சொல்லுமே.

பத்திராதிபர்:—இந்த ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளுகின்றனர். ஏழு வருடங்களுக்கு ஒரு தரம் இப்படி மாற்றிக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லுவது வழக்கம். அவர்களின் அபிப்பிராயங்கள் கடிகார யந்திரத்தின் பெண்டுலத்தைப்போல் அசைந்துகொண்டிருக்குமேயல்லாமல் நிலை உள்ளதல்ல. ஜனங்கள் நன்றாய்ப்பேசுபவரை பின்பற்றி நடப்பார்கள், அல்லது கச்சேரி, விருந்து முதலியவைகள் கொடுப்பவர்களுக்குப் பின் செல்லுவார்கள். ஜனங்கள் எப்படியோ, அப்படித்தான் பார்லிமெண்டு சபையும், ஆனால் ஒருகுணத்தை நன்றாய் விருத்திசெய்து வைத்திருக்கிறார்கள். தங்கள் தேசத்தை இழப்பதற்கு ஒரு நாளும் இடங்கொடார்கள். யாராவது அதிலே குறிவைத்தால் அவன் கண்கள் போய்விடும். ஆனால், இதனால் மற்றெல்

லா நல்ல குணங்களும் அவர்களிடம் இருக்கிறதென்றும் அவர்களைப் பார்த்து நாம் நடக்கலாம் என்றும் சொல்லமுடியாது. இங்கிலாந்துமாதிரி இந்தியா நடக்க முயன்றால், நாம் பாழாய்ப் போய்விடுவோம் என்பது என் உறுதியான நம்பிக்கை.

படிப்பவர் :—இங்கிலாந்து இந்த நிலைக்கு வந்தது எதனாலே என்று நீர் எண்ணுகிறீர் ?

பத்திராதிபர் :—ஆங்கில ஜனங்களின் ஒரு பிரத்தியேகமான குறைவினால் இது வந்ததல்ல ; இந்த நிலைமை புதியநாகரீகத்தினால் வந்துள்ளது. இது பெயருக்குமாத்திரம் நாகரீகம், அதன்பலனாக, ஐரோப்பியஜாதியார் நாளுக்கு நாள் தாழ்வுற்றுக் கேடு அடைந்து வருகிறார்கள்.

அத்தியாயம் 6

நாகரீகம்.

படிப்பவர்:—நாகரீகம் என்பது யாது! அதைப்பற்றி உம்முடைய அபிப்பிராயத்தை எனக்குத் தெளிவாகச் சொல்லும்.

பத்திராதிபர் :—நான் என்ன நினைக்கிறேன் என்பது முக்கியமல்ல. நாகரீகம் என்று பெயர் பூண்டிருப்பதை நாகரீகம் என்று பெயரிட்டு அழைக்க, அனேக ஆங்கில நூலாசிரியர்கள் இஷ்டப்படுவதில்லை. இவ்விஷயத்தைப் பற்றி அனேக நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நாகரீகத்தினின்றும் விளைந்த கேடுகளை நீக்க அனேக சபை

கள் ஏற்பட்டுள்ளன. நாகரீகம் அதன் காரணமும், நிவர்த்தியும் என்று ஒரு நூலை பெரிய ஆங்கில நூலாசிரியர் ஒருவர் எழுதியிருக்கின்றனர். இங்கே அவர் நாகரீகத்தை ஒரு வியாதி என்று கூறியுள்ளார்.

படிப்பவர் :—பொதுவாய் நமக்கு என் இது தெரிவதில்லை ?

பத்திராதிபர்:—பதில் மிக எளிது. ஜனங்கள் தங்களுக்கு விரோதமாய் வாதம் பண்ணுவதை நாம்கண்டதில்லை. புதியநாகரீகத்தால் மயக்கங் கொண்டவர்கள் அதற்கு விரோதமாய் எழுதமாட்டார்கள். அதற்கு அனுஸரணையாய் விஷயங்களையும் வாதங்களையும் கண்டுபிடிப்பதில் அவர்கள் கவலை செல்லும். இதை உண்மையெனக் கொண்டு தங்களை மறந்தே செய்கிறார்கள். ஒரு மனிதன், கனவு கண்டு கொண்டிருக்கையில், அதை நம்புகிறான். தூக்கத்திலிருந்து விழித்தபிறகுதான், அதனுடைய ஏமாற்றம் தெரிகிறது. நாகரீகத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிப்பவனும் மனிதன் கனவு காணுபவனைப் போலத்தான். புதிய நாகரீகத்தின் கக்ஷியை எடுத்துப் பேசுபவர்களின் நூற்களைத்தான் பொதுவாக நாம் படிக்கிறோம். இந்த நாகரீகத்தின் பக்தர்களில் அனேகர் புத்திமான்கள். சிலர் மிகவும் நல்லவர்கள். அவர்களின் நூல்கள் நம்மை மயக்கி விடுகின்றன. ஆகையால் ஒவ்வொருவராய் சுழலில் அகப்பட்டுக்கொள்ளுகிறோம்.

படிப்பவர் :—இது நம்பத்தக்கதாயிருக்கிறது. இந்த நாகரீகத்தைப்பற்றி படித்திருப்பீர், யோசித்திருப்பீர் ; அதைக்கொஞ்சம் விவரமாய்ச் சொல்லுங்கள்.

பத்திராதிபர் :—நாகரீகம் என்ற வார்த்தையிலே

எவ்வித நிலைமை அடங்கியிருக்கிறது என்று முதலிலே கவனிப்போம், அதில் வாழும் ஜனங்கள் தேக சுகத்தை, ஆயுளின் நோக்கமாகப் பாராட்டுகிறார்கள். சில உதாரணங்கள் எடுத்துக் கொள்ளுவோம். ஐரோப்பா ஜனங்கள், நூறுவருஷங்களுக்குமுன் இருந்ததைவிட இப்பொழுது நல்லவீடுகளிற் குடியிருக்கிறார்கள். இது நாகரீகத்தின் ஒருகுறியெனவே கருதப் படுகின்றது. தேக சௌளக்கியத்தை விருத்தி செய்யும் சங்கதி கூட பண்டைக்காலத்தில் அவர்கள் தோலைத்தரித்துக் கொண்டு, ஈட்டிகளை ஆயுதங்களாய்த் தாங்கினார்கள். இப்பொழுது நீண்டகாலுடைகளைத் தரித்துக் கொள்ளுகின்றனர்; உடம்பை அலங்கரித்துக்கொள்ள அனேகவித ஆடைகள் போட்டுக்கொள்ளுகிறார்கள். ஈட்டிகளுக்குப் பதிலாய் ஐந்தாறு அறைகளுள்ள கைத்துப்பாக்கிகளை வைத்துக்கொள்ளுகிறார்கள். அதிக உடைகளும் கால்ஜோடுகளும் போட்டுக்கொள்ளும் வழக்கமில்லாத ஜனங்கள், ஐரோப்பிய உடை தரித்துக்கொண்டால் அநாகரிகத்திலிருந்து விடுபட்டார்கள் என்று கருதப்படுகின்றனர். முற்காலத்தில் ஐரோப்பாவில் ஜனங்கள் கையினால் உழுது பயிர் செய்தார்கள்; இப்பொழுது ஒரு மனிதன் விஸ்தாரமான பூமியை இயந்திரங்களைக்கொண்டு உழுது, பெருத்த பணம் சம்பாதிக்கின்றான். இதை நாகரீகத்தின் ஒரு அடையாளம் என்று சொல்லுகின்றனர். பண்டைக்காலத்தில் ஒரு சிலர் நூல்கள் எழுதினர். அவைகள் மதிப்புள்ளதாயிருந்தன. இப்பொழுது கண்டவர்களெல்லாம் தங்களுக்குத் தோன்றியதை எழுதியும் அச்சிட்டும் ஜனங்களின் மனதில் நஞ்சை

ஊட்டுகின்றனர். முற்காலத்தில் மனிதர்கள் கட்டை வண்டிகளிற் போய்க்கொண்டிருந்தனர். இப்பொழுது ஆகாய மார்க்கமாயும் புகை வண்டிகளிலும் நாளுக்கு நானூறு மைல் வீதம் செல்லுகின்றனர். இது நாகரீகத்தின் உச்சிநிலை என்று எண்ணப்படுகிறது.

செல்லச்செல்ல, மனிதர்கள் ஆகாயக் கப்பல்களில் உலகத்தில் எந்தவிடத்துக்கும் ஓரிரண்டு நாழிகைகளிற் சென்றுவிடலாம் என்றும் சொல்லுகிறார்கள். மனிதர்களுக்கு இனிமேல் அவர்களின் கைகால் உபயோகமே வேண்டியதில்லை. ஒருபொத்தானை அமுக்குவார்கள்; உடனே அவருடைய ஆடைகள் அவருக்குமுன் வந்து நிற்கும். இன்னொருபொத்தானை அமுக்குவார்கள்; உடனே பத்திரிகைவரும்; மூன்றாவது பொத்தான், உடனே மோட்டார்வண்டி காத்துக்கொண்டிருக்கும். அனேகவித நாஜூக்கான, உருசியுள்ள ஆகாரம் கிடைக்கும். இனிமேல் எல்லாம் இயந்திரவேலை. பண்டைக் காலத்தில் ஜனங்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டால் உண்மையாகவே அவர்கள் பலப் பரீட்சை செய்துகொண்டனர். இப்பொழுது ஒரு மனிதன் ஒரு குன்றிலிருந்து ஒரு பீரங்கியின் மூலமாய் ஆயிரக் கணக்கானவர்களைக் கொல்லலாம். இது நாகரீகம். முற்காலத்தில் மனிதர்கள் எவ்வளவு கஷ்டமோபட்டு அவ்வளவு வரையில் திறந்தவெளியில் வேலைசெய்தார்கள். இப்பொழுது ஆயிரக்கணக்கான கூலிகள் ஒன்றாய்க்கூடி, வயிற்றின் பொருட்டு, தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் உழைக்கின்றனர். மிருகங்களைக்காட்டிலும் அவர்களின் நிலை கேடுகெட்டது. உயிருக்கபாயமிருப்

பினும், ஆபத்துள்ள தொழில்களில், பணக்காரர்களுக்காக அவர்கள் பாடுபடவேண்டியிருக்கிறது. முந்தி கட்டாயத்தினால் அடிமைகளானார்கள். இப்பொழுது, பணத்தாசையினாலும் பணத்தினால்வரும் சுகங்களுக்காகவும் அடிமைகளாக்கப்படுகின்றனர். கனவிலேகூட கண்டிராத வியாதிகள் இப்பொழுது உண்டாயிருக்கின்றன. அவைகளுக்கு மருந்துதேடுவதில், ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் அமர்ந்திருக்கிறார்கள்; வைத்திய சாலைகளும் பெருக்கமடைந்துவிட்டன. இது நாகரீகத்தின் ஒரு அடையாளம். முன்காலத்தில் பிரத்தியேகமான தூதர்கள் அமர்த்தவேண்டியிருந்தது. கடிதங்களை அனுப்புவதில் விசேஷபணம் செலவழியவேண்டியிருந்தது. இப்பொழுது காலணா செலவழித்துவிட்டு காகிதத்தின் மூலமாய் ஒருவன் எவனையும் வையலாம். இதேபணம் செலவிட்டு, ஒருவன் தன் வந்தனத்தையும் அனுப்பலாம் என்பதும் உண்மையே. முன்னே வீட்டிற்செய்த ரொட்டியும் காய்கறிகளும் நாளைக்கு மூன்று வேளைகள் சாப்பிட்டுக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது இரண்டு நாழிகைக்கு ஒருதரம் ஏதாவது சாப்பிடவேண்டியிருக்கிறது; அதனாலே வேறு அலுவலுக்கு அவர்களுக்கு சாவகாசமிருப்பதில்லை. நான் இன்னும் என்னசொல்லட்டும்? பிரமாணமாயிருக்கும் அநேக நூல்களினின்றும் இதையெல்லாம் நீர் நிச்சயித்துக்கொள்ளலாம். இவைகள்யாவும் நாகரீகத்தின் உண்மையான உருசுக்கள். இதற்கு மாறாக வேறேதேனும் பேசின், அவர் அறியாதவர் என்று தெரிந்துகொள்ளும். இந்த நாகரீகம் தர்மத்தை

யும் மதத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுவதில்லை. மதத்தைக் கற்பிப்பது தங்கள் பொறுப்பல்லவென்று இதன் பக்தகோடிகள் சாந்தமாய்ச் சொல்லுகின்றனர். இதைச்சிலர் மூடபக்தியின் பலன் என்றும் எண்ணுகிறார்கள். வேறு சிலர் மதம் என்று பாவனைபேசி, தர்மத்தைப்பற்றிப் பிதற்றுகின்றனர். ஆனால், தர்மத்தின் பெயரைவைத்து அனேக சமயங்களில் அதர்மத்தைக் கற்பிக்கின்றனர் என்ற முடிவுக்கு என்னுடைய இருபது வருஷத்து அனுபவத்தைக்கொண்டு, வந்திருக்கிறேன். நான் மேலேசொல்லிவந்த தெல்லாவற்றிலும் தருமத்துக்கு தூண்டுகோலாய் ஒன்றுமே யில்லையென்று ஒரு குழந்தைக்கும் விளங்கும். நாகரீகம் தேக சுகங்களைப்பெருக்க முயல்கின்றது. ஆனால் அப்படிச் செய்வதிலும் அது தவறிப்போகின்றது. இந்த நாகரீகம் நாஸ்தீகமயம்; ஐரோப்பிய ஜனங்களிடம் வேறூன்றிவிட்டது; இதனடியிலிருப்பவ ரெல்லோரும் பாகித்துக் கொண்டவர்களென்றே தோன்றுகிறது. உண்மையான தேகபலமாவது தைரியமாவது அவர்களுக்கு இருப்பதில்லை. மயக்கத்தினால் தங்கள் வலுவைக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றனர். தனிமையில் அவர்களுக்குச் சந்தோஷம் ஏற்படுவதில்லை. கிருகிணிகளாயிருக்கத்தக்க ஸ்திரீகள், ஒன்று தெருவில் திரிகிறார்கள் அல்லது தொழிற்சாலைகளில் அடிமைப்பட்டு உழைக்கிறார்கள். கொஞ்சத் துகையின்பொருட்டு இரண்டரை இலக்ஷம் ஸ்திரீகள் இங்கிலாந்தில் மிகுந்த கஷ்டதிசையில் தொழிற்சாலைகளிலும் மற்றும் இதையொத்த இடங்களிலும் உழைத்து வருகின்றனர். ஸ்திரீகளுக்கு

அதிகாரம் வேண்டும் என்ற இயக்கம் நித்தமும் வளர்வதற்கும் பெருக்கடைவதற்கும் இந்த பயங்கரமான விஷயம் ஒரு காரணமாகும்.

ஒருவன் பொறுமையுள்ளவனு யிருந்தால்போதும் ; இந்த நாகரீகம் தானுகவே அழிந்துபோகும். மகம்மது போதித்தபடி இது அசுர நாகரீகமாகும். ஹிந்து மதத்தில் இதற்கு கலிகாலம் என்று பெயர். இந்த நாகரீகத்தை நான் சரியாக வர்ணிக்க முடியாது. இது ஆங்கிலேய ஜாதியாரின் உடலை விழுங்கிக்கொண்டு வருகின்றது. இதை ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும். பார்லிமெண்டு சபைகளெல்லாம் அடிமைத்தனத்தின் அடையாளங்களேயாகும். இதைத் தீரவிசாரிப்பீரேயானுல், இதே எண்ணம் உமக்கும் வரும் ; அப்பொழுது ஆங்கிலேயர்களைக் குறைகூறமாட்டீர். அவர்கள் நம்முடைய அனுதாபத்துக்குப் பாத்திரமாவர். ஆங்கிலேயர்கள் யுக்தியுள்ள ஜாதியார் ; ஆகையால் இந்தக்கேட்டை உதறி எரிந்துவிடுவார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் ஊக்கமும் உழைப்புமுள்ளவர்கள். அவர்கள் எண்ணம் இயற்கையிலேயே அதர்ம நோக்கமுள்ளதல்ல ; கெட்ட சித்தமுள்ளவர்களுமல்ல. ஆகையால் அவர்களிடம் எனக்கு மதிப்பு உண்டு. நாகரீகம் குணப்படக்கூடாத ஒரு வியாதியல்ல ; ஆனுல் ஆங்கில ஜனங்கள் இந்த நோயால் வருந்துகின்றனர் என்பதை மறக்கலாகாது.

அத்தியாயம் 7

ஏன் இந்தியாவை இழந்தோம்?

படிப்பவர்:—நாகரீகத்தைப்பற்றி மிகுதியும் சொன்னீர். நானும் யோசிக்கும்படியான ஸ்திதியில் கொண்டு வந்து வைத்துவிட்டீர். ஐரோப்பிய ஜாதியாரிடமிருந்து எதைக்கொள்வது, எதை நீக்குவது, என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு கேள்வி, என் நாக்கின் நுனியில் நிற்கிறது. நாகரீகம் என்பது ஒரு வியாதியாயின், அது ஆங்கில ஜாதியாரைப் பிடித்துக் கொண்டதென்றாலும், இந்தியாவை அவர்கள் எப்படி கைப்பற்றிக்கொண்டார்கள்? எவ்விதம் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்?

பத்திராதிபர்:—உம்முடைய கேள்விக்கு பதில்சொல்லுவது கஷ்டமல்ல; இப்பொழுது சுயராஜ்ஜியத்தின் உண்மையான இயல்பை, நாம் அறிந்து கொள்வோம். ஏனென்றால், அந்தக் கேள்விக்கு, நான் இன்னும் பதில் சொல்ல வேண்டும், என்பது ஞாபகமிருக்கிறது. ஆனாலும் உம்முடைய முந்திய கேள்வியை எடுத்துக்கொள்வேன். இந்தியாவை ஆங்கிலேயர்கள் பிடுங்கிக்கொள்ளவில்லை; நாம் அதை அவர்களுக்குக் கொடுத்தோம். நாம் அவர்களை வைத்திருப்பதினால் அவர்கள் இங்கே இருக்கிறார்களே யொழிய, தங்கள் பலத்தைக்கொண்டு அவர்கள் இருக்கவில்லை. இந்த வாக்கியங்களை ருசுப்படுத்தக்கூடுமா, என்று இப்பொழுது பார்ப்போம். ஆதியில் அவர்கள் நம்முடைய தேசத்துக்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தனர். கம்பனி பகதூர் என்பதை

ஞாபகப்படுத்திக் கொள்ளும். யார் அதை பகதூர் ஆக்கினுர்கள்? அந்தக் காலத்தில் இராஜ்ஜியம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் சிறிதுகூட அவர்களிடம் இருந்ததில்லே. கம்பனி உத்தியோகஸ்தர்களுக்கு யார் ஒத்தாசை செய்தார்கள் ? அவர்களின் பணதனைதக் கண்டு யார் மயங்கினுர்கள்? யார் அவர்களின் சரக்குகளே வாங்கினுர்கள் ? இதை யெல்லாம் நாம் தான் செய் தோம் என்று சரித்திரம் கூறுகின்றது. வெகு சீக்கிரத் தில் பணக்காரர்கள் ஆகும் பொருட்டு, கம்பனி உத்தி யோகஸ்தர்களே மிக்கசந்தோஷத்துடன் வரவேற்ருேம். அவர்களுக்கு உதவியாயிருந்தோம். நான் பங்கி அடிக் கிற பழக்கத்திலிருப்பின், அதை எனக்கு எவரேனும் விற்ருல், அந்தப்பழி என் பேரிலா அல்லது விற்றவன் பேரிலா ? விற்பவன் பேரில் பழிசுமத்துவதனுல் அந்தப் பழக்கம் என்னிடமிருந்து ஒழிந்து விடுமா? ஒரு வியாபாரியைத் துறத்திவிட்டால், அவனிருந்த இடத்துக்கு வேருெருவன் வரமாட்டானு ? உண்மை யான தேச ஊழியன், விஷயத்தின் மூலகாரணத்துக்குச் செல்ல வேண்டும். அதிகச்சாப்பாட்டினுல் எனக்கு அஜீர்ணம் நேர்ந்தால், தண்ணீரைக் கோபிப்பதனுல், என் அஜீர்ணம் ஒழிவதில்லே. வியாதியின் மூலத்தை சோதித்துப் பார்ப்பவனே உண்மையான வைத்தியன். இந்தியாவின் நோய்க்கு வைத்தியன் என்று உம்மைப் பாவித்துக்கொண்டால் அதன் உண்மைக் காரணத்தை நீர் கண்டு பிடித்தல் வேண்டும்.

படிப்பவர் :—நீர் சொல்லுவது சரி. உம்முடைய முடிவுகளே எனக்கு எடுத்துரைக்க அதிக வாதம்

வேண்டியதில்லை. மேலே உம்முடைய நோக்கங்களைக் கேட்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன். இனிய பேச்சினிடையே இருக்கின்றோம், ஆகையால் நீர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு வருகிறேன், சந்தேகமிருந்தால் உம்மை நிறுத்துகிறேன்.

பத்திராதியர்:—உமக்கு உற்சாகமிருப்பினும், மேலே செல்லச் செல்ல, நம்மிருவருக்குள் அபிப்பிராய வித்தியாசமிருக்கும் என்ற பயம் எனக்கு உண்டு. இருந்தபோதிலும், எப்பொழுது என்னை நிறுத்துகிறீரோ அப்பொழுது உம்முடன் தர்க்கம் செய்வேன். நாம் தைரியம் கொடுத்ததனாலேதான், ஆங்கில வியாபாரிகளுக்கு இந்தியாவிலே இருக்க இடம் கிடைத்தது என்று ஏற்கனவே அறிந்துகொண்டோம். இந்திய மன்னர்கள் தங்களுக்குள் சண்டை செய்த பொழுது கம்பெனி பகதூரின் ஒத்தாசையை வேண்டினர். அந்தக் கூட்டத்தார், வியாபாரத்திலுஞ் சரி, யுத்தத்திலுஞ் சரி, நன்றாய்ப் பயின்றவர்கள். அவர்கள் தர்ம சாஸ்திரத்தினால் பாதிக்கப்பட்டதில்லை. வியாபாரத்தைப் பெருக்கிப் பொருள் தேடுவது அவர்களின் கருத்து. நமது உதவியை அங்கீகரித்து தங்கள் பண்டசாலைகளைப் பெருக்கிக் கொண்டனர். பண்டசாலைகளைக்காப்பாற்றும் பொருட்டு, ஒரு சேனை வைத்துக்கொண்டார்கள்; அது நமக்கும் உபயோகமாயிற்று. நாம் அந்தக் காலத்தில் செய்ததற்கு ஆங்கிலேயர்களின் பேரில் பழிசுமத்துவது பயனற்றதல்லவா? (ஹிந்துக்களும் மகமதியர்களும் குத்தும் கொலையுமாய் நின்றனர்) ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒருவர் மற்றவர் பேரில்

ஈட்டி உருவிய வண்ணமாயிருந்தனர். இதுவும் கம்பனிக்கு நல்ல தருணமாயிற்று. நாம் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொடுத்தோம். அதனால் அவர்களுக்கு இந்தியாவின் பேரில் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இந்தியா இழக்க பட்டது என்பதைக் காட்டிலும் இந்தியாவை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தோம் என்பது பொருந்தும்.

படிப்பவர் :—இந்தியாவை தங்கள் வசம் எப்படி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு நீர் சொல்லுவீரா ?

பத்திராதிபர்:-எந்தக்காரணங்களினால் அவர்கள் இந்தியாவை அடைந்தார்களோ, அதே காரணங்கள்தான் அவைகளை வைத்துக் கொள்ளும்படி செய்கின்றன. அவர்கள் கத்தி முனையில் இந்தியாவைப் பிடுங்கி அதனாலேயே காப்பாற்றி வருகின்றனர் என்று சில ஆங்கிலேயர்கள் சாதிக்கின்றனர். இந்த இரண்டு சொற்களும் தவறாகும். இந்தியாவை வைத்துக் கொள்வதற்கு கத்தி வேண்டுவதேயில்லை. நாமே அவர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலேயர்களை ஒரு வியாபாரஜாதி என்று நெப்போலியன் சொன்னதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பெயர் முற்றிலும் பொருந்தும். எங்கெந்த ராஜ்ஜியங்கள் அவர்களுக்குண்டோ, அவை யெல்லாவற்றையும் தங்கள் வியாபாரத்தின் பொருட்டு வைத்துக் கொண்டிருக்கின்றனர். அதைக் காப்பாற்றுவதற்குத் தான் அவர்களின் சேனையும் கடற்படையுமிருக்கின்றன. டிரான்ஸ்வாலில் இத்தகைய கவர்ச்சிகள் இல்லாததனால், காலஞ் சென்ற கிளாட்ஸ்டன் ஆங்கிலேயர்

களுக்கு இதை வைத்துக் கொள்ள யாதொரு பாத்திய முமில்லை என்று கண்டு பிடித்தார். அது இலாபம் கிடைக்கிற சங்கதியாய்ப் போன பொழுது, யுத்தத்துக்கு கொண்டுவந்து விட்டது. இங்கிலாந்துக்கு டிராஸ்சுவாலின்மேல் ஆதிபத்திய பாத்திய முண்டென்று சேம்பர்லேன் உடனே கண்டு கொண்டார். சந்திர லோகத்தில் தங்கமிருக்குமா என்று காலஞ்சென்ற பிரெஸிடெண்டு க்ரூகரை யாரோ கேட்டார்களாம். அனேகமாயிருக்காது, இருந்தால் ஆங்கிலேயர்கள் அதையும் தங்கள் ராஜ்ஜியத்தோடு சேர்த்துக் கொண்டிருப்பார்கள் என்று அவர் பதில் சொன்னாராம். பணம் ஆங்கிலேயர்களின் தெய்வமென்று ஞாபகம் வைத்துக் கொண்டார் போலும். அனேக கேள்விகளுக்குத் தானகவே சமாதானம் ஏற்பட்டு விடும். நம்முடைய அற்பமான சுய நலத்தின் பொருட்டே நாம் ஆங்கிலேயர்களை இந்தியாவிலே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பது விளங்கும். அவர்களின் வியாபாரத்திலே நமக்கு இஷ்டமிருக்கிறது. அவர்கள் தங்கள் சமத்காரமுள்ள வழிகளினுல் நம்மை திருப்திசெய்து, தங்களுக்கு வேண்டியவற்றை நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்களின் பேரில் இதற்குப் பழிசுமத்துவதினுல் அவர்களின் அதிகாரத்தை நாம் ஸ்திரப்படுத்துகின்றோம். நமக்குள் சண்டைசெய்து கொள்ளுவதனுல், அவர்களின் படியை வலுப்படுத்திக் கொடுக்கிறோம். மேலே சொன்னவைகளை நீர் ஒப்புக்கொண்டால் ஆங்கிலேயர்கள் வியபாரத்தின் பொருட்டு இந்தியாவுக்கு வந்தார்கள் என்பது ருசுவாகின்றது. அதேகாரியத்துக்குத்

தான் அவர்கள் இங்கே இருக்கின்றனர். அந்த விஷயத்தில் நாம் அவர்களுக்கு உதவி புரிகின்றோம். அவர்களின் குண்டு துப்பாக்கிகள் முற்றிலும் பயனற்றவை. இந்த சமயத்தில் ஒன்று ஞாபகப் படுத்துகிறேன். ஜப்பான் தேசத்தில் பறப்பது ஆங்கிலக் கொடி, ஜப்பானியக் கொடியல்ல. வியாபாரத்துக்காக ஆங்கிலேயர்கள் ஜப்பானியர்களுடன் உடன் படிக்கை செய்து கொண்டிருக்கின்றனர்; சரியாய் நடத்தினால், அவர்களின் வியாபாரம் அந்த தேசத்தில் மிகுதியும் விருத்தியடையும் என்று நீர் தெரிந்துகொள்வீர். இந்த உலக முழுவதையும், தங்கள் சரக்குகளுக்கு ஒரு சந்தையாய் மாற்றிவிட எண்ணங் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் அப்படிச்செய்ய முடியாது என்பது உண்மைதான்; தவறினால் அந்தப்பழி அவர்களைச் சேர்ந்ததல்ல. தாங்கள் கோறின பலனை அடைய, எந்த முயற்சியினின்றும் அவர்கள் பின் வாங்கமாட்டார்கள்.

அத்தியாயம் 8

இந்தியாவின் நிலைமை

படிப்பவர்:—ஆங்கிலேயர்கள் இந்தியாவைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டேன். நமது தேச ஸ்திதியைப் பற்றி உமது அபிப்பிராயங்களை அறிய விரும்புகிறேன்.

பத்திராதிபர்:—அது ஒரு விசனிக்கத் தக்க

நிலைமை. அதை நினைக்குங்கால் என் கண்களில் நீர் ததும்புகிறது; எனது தொண்டை வரட்சி யடைகிறது. என் ஹிருதயத்திலிருப்பதை விவரமாய் எடுத்துரைக்க என்னாலாகுமோ வென்று சந்தேகப் படுகிறேன். ஆங்கிலேயர்களின் கால்களின் கீழ் அல்ல. ஆனால் புதிய நாகரீகத்தின் அடியில் இந்தியா நசுக்குண்டு கிடப்பதாக நான் உறுதியாய் நம்புகிறேன். அந்த நாகரீக இராக்கதனுடைய கோரமான பாரம் தாங்க முடியாமல் தவிக்கின்றது. இன்னமும் தப்பித்துக் கொள்ளக் காலம் போய் விடவில்லை; ஆனால் நாளேற ஏற கஷ்டமதிகம். மதம் எனக்கு மிக்க அருமையுள்ளது; இந்தியா நாஸ்திகமாய்க் கொண்டு வருகின்றது என்பது எனது முதற் குறை. இப்படிச் சொல்லுங்கால், தனியே, ஹிந்து, மகம்மதிய, பார்ஸிமதங்களைப் பற்றி நினைத்துக் கொள்ளவில்லை ; ஆனால் எல்லா மதங்களுக்கும், அடிப்படையான மதத்தை மனதில் எண்ணிக் கொண்டேன். நாம் கடவுளைவிட்டு விலகிக்கொண்டு வருகின்றோம்.

படிப்பவர் :—அது எப்படி.

பத்திராதிபர்:— நாம் சோம்பேரி ஜாதியார் என்றும் ஐரோப்பியர்கள் ஊக்கமும் உழைப்பு முள்ளவர்கள் என்றும் சிலர் கூறுவதுண்டு. நாம் அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டோம்; ஆகையால் நமது நிலைமையைமாற்ற விரும்புகிறோம். உலகப்பற்றை ஒழித்து, ஈசுவரனிடம் பக்தி செலுத்தவேண்டுமென்றும், உலக ஆசைக்கு ஒரு எல்லை யிடவேண்டும் மென்றும், ஈசுவர பக்திக்கு அளவு கிடையாதென்றும் ஹிந்து, முஸ்லீம், பார்ஸீ கிருஸ்தவ மற்றுமுள்ள எல்லா மதங்களும் நமக்குப் போ

திக்கின்றன. நம்முடைய கவனமெல்லாம் கடவுளிடம் செல்லவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

படிப்பவர் :—மதப்பாசாங்குகளுக்கு நீர் இடங்கொடுப்பீர்போலத் தோற்றுகிறதே. அநேக போக்கிரிகள் இவ்விதம் பேசி ஜனங்களைக் கெடுத்திருக்கின்றனர்.

பத்திராதிபர்:—சட்ட முறைப்படியல்லாத குற்றத்தை மதத்தின் பேரில் சுமத்துகின்றீர். எல்லா மதங்களிலும் பாசாங்கு நிச்சயமாய் உண்டு. வெளிச்சமிருக்கிற இடத்தில் நிழலுமுண்டு. உலக விஷய சம்பந்தமான போக்கிரிகள் மதசம்பந்தமான போக்கிரிகளைவிடக் கேடானவர்கள் என்று சாதிக்க நான் தயாராயிருக்கிறேன். நான் உமக்குக் காண்பிக்கமுயலும் நாகரீகத்தின் போக்கிரித்தனத்தை மதத்தில் காணமுடியாது.

படிப்பவர் :—அது எவ்விதமாய்ச் சொல்லலாம் ? மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு, ஹிந்துக்களும், மகமதியர்களும் ஒருவரோடொருவர் சண்டை போட்டார்கள். அதே காரணத்தைக் கொண்டு கிருஸ்தவர்கள் கிருஸ்தவர்களுடன் சண்டை செய்தார்கள். ஆயிரக் கணக்கில் குற்றமற்ற மனிதர்கள் கொலை செய்யப்பட்டார்கள்? ஆயிரக் கணக்கில் கொளுத்தப் பட்டார்கள். ஆயிரக்கணக்கில் வதை செய்யப்பட்டார்கள். நிச்சயமாகவே, இது நாகரீகத்தை விடக்கேடானதே.

பத்திராதிபர் :—நாகரீகத்தின் தீமைகளைவிட மேலே சொன்ன கஷ்டங்கள் சகிக்கக்கூடியவை என்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். அதன் பேரை வைத்துச் செய்தபோதிலும், மேற்சொன்ன கொடுமைகள் மதத்திலடங்கியவையல்ல என்று ஒவ்வொருவருக்கும்

தெரியும். ஆகையால் இக்கொடுமைகளுக்குப்பின்னே ஒன்றுமில்லை. மூடபக்தியுள்ள அறிவிலிகள் இருக்குமளவும் இத்தகைய சங்கதிகள் எப்பொழுதும் நேரும்? நாகரீகத்தீயில் அதிகப் பட்டவர்களின் எண்ணிக்கைக்கு ஒரு முடிவு இல்லை. ஜனங்கள் அதை நலமென்று எண்ணியே, அந்தக் கொளுத்தும் தீய்க்குள் பிரவேசிக்கின்றனர். அவர்கள் நாஸ்திகர்களாகி, உண்மையிலேயே உலகத்தினின்று யாதொரு பயனையும் பெருவதில்லை. நமக்கு ஆறுதலளிக்கையிலேயே அறுக்கும் சுண்டெலியை ஒத்தது நாகரீகம். அதன் முழுப்பலனும் கைக்கு வந்தபொழுது, புது நாகரீகத்துடன் ஒப்பிடின், மதசம்பந்தமான மூடபக்திகள் வளர வேண்டு மென்பது என் கட்சியல்ல. அதை வேரோடு அறுக்க முயல்வோம். ஆனால் மதத்தை அவமதித்து அந்தக் காரியத்தை முடிக்க முடியாது. மதத்தை மதித்து பத்திரப் படுத்தினாற்றான் மூடபக்தியை அழிக்க நம்மால் ஆகும்.

படிப்பவர் :—ஆங்கிலேய ஆதிபத்தியம் ஒரு உபயோகமற்ற தடையென்று நீர் எண்ணுவீர் போலும்.

பத்திராதிபர் :—அதனால் அமைதி உண்டாயிருக்கிறது என்று நீர் எண்ணலாம்; ஆனால் அப்படி யொன்றும் எனக்குத் தெரியவில்லை.

படிப்பவர் :—தக்கர்கள், பிண்டாரிகள், பீல்கள் இந்தியாவுக்குச் செய்த கொடுமைகளை மிகவும் குறைத்துப் பேசுகின்றீரே.

பத்திராதிபர் :—இந்த விஷயத்தைச் சற்று யோஜித்துப் பார்த்தால், அந்தப் பயம் அவ்வளவு பெரிய சங்கதியல்ல என்று உமக்குத் தெரியும். அது அவ்வளவு

உண்மையான சங்கதியாயிருப்பின், மற்றைய ஜனங்கள் ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன் செத்திருப்பார்களே; மேலும் நமது தற்கால அமைதி, பேருக்கு மாத்திரந்தானே; ஏனென்றால் இதன் மூலமாய் நமது ஆண்மைத்தனத்தை இழந்து பேடிகளாய் விட்டோம். பிண்டாரிகள், பீல்கள் இவர்களின் சுபாவத்தை ஆங்கிலேயர்கள் மாற்றி விட்டார்கள் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. வேறு யாரோ ஒருவர் நம்மை காப்பாற்றி, அதனால் நம்மைப் பேடிகளாக்குவதைக் காட்டிலும், அந்தப் பிண்டாரி அபாயத்தை சகிப்பது நலம். மனிதத்தனமற்று, பாதுகாப்புக்குப் பிறனிடம் சரண்புகுவதைவிட, பிண்டாரியின் அம்பினால் கொல்லப்படுவது நலமெனவே நினைப்பேன். இந்தப் பாதுகாப்பின்றி இந்தியா விருந்தபொழுது, இந்தியா வீரமுள்ளதாயிருந்தது. பொதுவாய் இந்தியர்கள் பேடிகள் என்று மெக்காலே சொன்ன பொழுது, தன் அறியாமையைப் பெரிதும் வெளிக் காண்பித்து விட்டார். அந்தக் குற்றம் அவர்களுக்கு ஏற்காது. முரட்டு மலை வாசிகளும், ஓநாய்களும் புலிகளும் மிகுதியுமுள்ள தேசத்திலிருப்பவர்கள் பயங்காளிகளாயிருப்பின், அவர்கள் சீக்கிரம் மரணமடைய வேண்டும். நம்முடைய கழனிகளை எப்பொழுதேனும் போய்ப் பார்த்திருக்கிறீரா? நம்முடைய விவசாயிகள் சிறிதும் பயமின்றி தங்கள் கழனிகளில் இன்றைக்கும் தூங்குகின்றனர் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஆங்கிலேயர்களும், நீரும், நானும், அவர்கள் தூங்குகிற இடத்தில் தூங்கத் தயங்குவோம். பலம், பயமின்மை இவை இருக்கிறதேயொ

ழிய தேசத்தில் கொழுப்புச்சதை இல்லே. மேலும், சுயராஜ்ஜியம் வேண்டுமென்கிற உமக்கு ஒன்று ஞாபகப் படுத்த வேண்டும். எப்படியிருந்தபோதிலும் பீல்கள், பிண்டாரிகள், அஸ்ஸாம்காரர்கள், தக்கர்கள் எல்லோ ரும் நம்முடைய தேசத்தவர்கள். அவர்களை ஜயிப்பது உம்முடைய வேலை. என்னுடைய கவலே, நம்முடைய சகோதரர்களுக்கு நாம் பயப்பட்டுக் கொண்டிருக்கிற வரையில், நம்முடைய நோக்கத்தைப் பெறத் தகுதியற் றவர்களாவோம்.

அத்தியாயம் 9

இந்தியாவின் நிலமை (தொடர்ச்சி)
இருப்புப்பாதைகள்

படிப்பவர் :—இந்தியாவிலே அமைதியிருக்கிறதெ ன்று எண்ணிய எனது ஆறுதலே நீர் ஒழித்து விட்டீரே?

பத்திராதிபர்:—மத நோக்கத்தின்படி எனது அபி ப்பிராயத்தை வெளியிட்டேன், ஆனல் இந்தியாவின் ஏழ்மைத் தனத்தைப் பற்றி எனது எண்ணங்களேச் சொன்னுல், ஒருக்கால் என்னை வெறுத்தாலும் வெறுப் பீர்; ஏனென்ருல் இதுவரையிலும் எவை எல்லாம் இந் தியாவுக்கு நலம் என எண்ணியிருந்தேனே அவை யாவும் எனக்கு இனி அவ்விதம் இருப்பதாகத் தோற் றவில்லே.

படிப்பவர்:—எதுவாயிருக்கலாமோ?

பத்திராதிபர் :—இருப்புப் பாதைகளாலும், வக்கீல்

மார்களினாலும், வைத்தியர்களாலும் நமது தேசம் ஏழ்மை அடைந்து விட்டது; அது எவ்வளவு தூரம் சென்றிருக்கிற தென்றால், நாம் சமயத்தில் விழித்துக் கொள்ளாவிடின் நாம் அழிந்தே போவோம்.

படிப்பவர் :—நம்மிருவருக்கும் ஒற்றுமை ஒருக்காலும் ஏற்படாது என்ற பயம் எனக்கு உண்டாகி விட்டது. இதுவரையிலும் நன்மை பயக்கக் கூடியவை யென்று நாம் எண்ணியவைகளை யெல்லாம் நீர் தாக்கிக் கொண்டிருக்கிறீர்.

பத்திராதிபர் :—பொருமையைக் கையாள வேண்டியது அவசியம். நாகரீகத்தின் கேடுகளின் உட்கருத்தை கஷ்டப்பட்டுத்தான் நீர் அறிவீர். கொடியரோகக்காரன் சாகுந்தருவாயிற் கூட உயிருடன் ஒட்டிக் கொள்ளுகிறான் என்று வைத்தியர்கள் நமக்குச் சொல்லுகிறார்கள். ஆகிலும் வெளிப்படையில் யாதொரு தீங்குமிழைப்பதில்லை—எல்லாம் சரியாயிருக்கிறது என்ற நம்பிக்கையை உண்டாக்கக்கூடிய அளவு, நோயாளியின் முகத்தில் ஒரு மயக்கும் வர்ணத்தை உண்டாக்குகிறது. நாகரீகம் இத்தகைய நோய்; நாம் வெகு ஜாக்கிறத்தையாயிருக்கவேண்டும்.

படிப்பவர் :—சரி, இருப்புப் பாதைகளைப்பற்றிச் சொல்லும், நான் கேட்கிறேன்.

பத்திராதிபர் :— இருப்புப் பாதைகளில்லாவிடில், ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவிலே இவ்வளவு பிடி அகப்பட்டிருக்காது என்று உமக்குத் தெளிவாய்த் தெரியும். இருப்புப் பாதைகளினாலே, பிளேக் பரவி விட்டது. அவைகளின்றி ஜனங்கள் ஒரு இடத்திலிரு

ந்து மற்ருெரு இடத்திற்கு நகரமுடியாது. அவைகள் பிளேக்பூச்சிகளை எடுத்துக் கொண்டு செல்பவை, முன்னே இயற்கையாகவே ஒதுக்கமிருந்தது. பஞ்சங்கள் அடிக்கடி வரும்படி இருப்புப்பாதைகள் செய்துவிட்டன; ஏனென்ருல் சுலபமாய்ப் பெயர்தலுக்கு வழி ஏற்பட்டு விட்டபடியால், ஜனங்கள் தங்கள் தானியத்தை விற்க, கிராக்கியுள்ள சந்தைகளுக்கு அனுப்புகின்றனர். ஜனங்கள் அஜாக்கிரதையுள்ளவர்களாகி விடுகின்றனர்; ஆகையால் பஞ்சத்தின் வருத்தம் அதிகமாய்த் தெரிகிறது. அவைகள் மனிதருடைய கெட்டசுபாவத்தை அதிகரிக்கிறது. வெகுசீக்கிரத்திலே கெட்டவர்கள் தங்கள் கெட்டநோக்கங்களை பூர்த்திசெய்துக் கொள்ளுகிருர்கள். இந்தியாவிலே க்ஷேத்திரங்களெல்லாம் தூய்மையற்றுப் போய்விட்டன. முற்காலங்களில் சிலர் மிகுந்த கஷ்டப்பட்டு இந்த இடங்களுக்கெல்லாம் போய்க் கொண்டுவந்தார்கள். ஆகையால் உண்மையான பக்தர்கள்தான் இந்த இடங்களுக்குச் சென்றனர். இப்பொழுது போக்கிரிகள் தங்கள் அயோக்கியத்தைக் காட்ட அவ்விடங்களுக்குச் செல்லுகின்றனர்.

படிப்பவர்:—இது ஒருதரப்பு வாக்குமூலம். நல்லவர்கள், கெட்டவர்கள் எல்லோரும் இவ்விடங்களுக்குச் செல்லலாம். இருப்புப்பாதைகள் இருப்பின் அவைகளை ஏன் பூராவும் உபயோகப் படுத்திக்கொள்ளக்கூடாது.

பத்திராதிபர் :— ஒட்டை தேசத்திலே நல்லது செய்யும் ஆகையினுல் அதற்கும் இருப்புப்பாதைகளுக்கும் யாதொருசம்பந்தமும் வேண்டியதில்லை. நல்

லது செய்பவர்கள் சுயநல முள்ளவர்களல்ல; அவர்கள் அவசரப் படமாட்டார்கள்; ஜனங்களிடத்தில் நல்லதின் விதைதெளிக்க நாளாகும் என்று அவர்களுக்குத் தெரியும்; ஆனால் கெடுதிக்கு இறக்கைகளுண்டு. வீடு கட்ட வெகுகாலம் பிடிக்கும், அதை இடிப்பதற்கு ஒரு நிமிஷம் கூடவேண்டாம். கெடுதியை பரப்புவதற்குத் தான் இருப்புப்பாதைகள் உபயோகப்படும். இருப்புப் பாதைகள் பஞ்சத்தைப் பரவச்செய்கின்றன என்பதில் வாதத்துக்கு இடமுண்டு. ஆனால் அவைகள் தீமையே என்பதில் சந்தேகமில்லை.

படிப்பவர்:—அது எப்படியிருப்பினும், நாம் இந்தியாவில் காணும் தேசீய உணர்ச்சியெல்லாம் இருப்புப்பாதைகளினால், ஆகையால் அவைகளினின்று எழும் தீமைகளெல்லாம் அடிபட்டுப் போகின்றன.

பத்திராதிபர்:—இதை ஒரு தவறு என்று கொள்கிறேன். நாம் ஒரு ஜாதியல்லவென்றும் அப்படியாவதற்கு அனேக நூற்றாண்டுகள் பிடிக்கும் என்றும் ஆங்கிலேயர்கள் நமக்குப் போதித்தார்கள். இதற்கு ஆதாரமில்லை. அவர்கள் இந்தியாவுக்கு வருமுன்னம் நாம் ஒருஜாதியாராயிருந்தோம்; ஒரே எண்ணம் நமதனைவர்க்கும் ஆவேசமுண்டாக்கிற்று. நமது வாழ்க்கையின் முறை ஒரேவிதம். நாம் ஒரு ஜாதியாராயிருந்த படியினாலேதான் அவர்களால் ஒரு இராஜ்யம் ஏற்படுத்த முடிந்தது. பிறகு நம்மைப் பிரித்தார்கள்.

படிப்பவர்:—இதற்கு ஒரு சமாதானம் வேண்டும்.

பத்திராதிபர்:—நாம் ஒரு ஜாதியாயிருந்ததனாலே, நமக்குள் சச்சரவு இருந்ததில்லை என்று சொல்லுவது

எனதிஷ்டமில்லை; ஆனால் நமது பெரியவர்கள் கால் நடையாகவோ அல்லது மாட்டுவண்டிகளிலோ, தேச முழுதும் சுற்றியிருக்கிறார்கள் என்று சொல்லுவேன். ஒருவர் மற்றொருவர் பாஷைகளைக் கற்றுக்கொண்டனர். அவர்களுக்குள் வேற்றுமையில்லை. தெற்கே இராமேசுவரத்தையும், வடக்கே ஹரித்துவாரத்தையும், தென் கிழக்கே ஜகன்னாதத்தையும் க்ஷேத்திரங்களாய் உண்டாக்கின நமது தீர்க்கதரிசிகளான மூதாதைகளினுடைய எண்ணம் என்ன என்று நீர் நினைக்கிறீர். அவர்கள் மூடர்கள் அல்லவென்று நீர் ஒப்புக்கொள்ளுவீர். வீட்டிலேயே நன்றாய்க் கடவுளைத் தொழுதிருக்கலாம் என்று அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். யாருடைய ஹிருதயம் பரிசுத்தமாயிருக்கின்றதோ, அவர்களுடைய வீட்டிலேயே கங்காதேவி யிருக்கின்றாள் என்று நமக்குக் கற்பித்திருக்கின்றனர். இயற்கையாகவே இந்தியா பிளவுபடாத ஒரேபூமி என்று அவர்கள் கண்டுகொண்டனர். ஆகையால் எல்லோரும் ஒரு ஜாதியாகவே இருக்கவேண்டுமென்றும் வாதித்தனர். இவ்விதம் வாதித்து இந்தியாவின் அநேக இடங்களில் க்ஷேத்திரங்கள் உண்டாக்கினார்கள்; உலகத்தில் வேறு பாகங்களிற் கண்டறியாதவிதம், நம் ஜனங்களிடத்தில் தேசீய உணர்ச்சி உண்டாக்கினார்கள். சமுதாயமாய்ப் பார்த்தால், எதாவது இரண்டு ஆங்கிலேயர்கள் ஒத்திருப்பதில்லை; ஆனால் எந்த இரண்டு இந்தியர்களும் ஒரேவிதம். நாகரீகமடைந்து உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொள்ளும் உம்மை என்னைப்போலொத்தவர்கள்தான், நாம் பல ஜாதியார்கள் என்று எண்ணுகிறார்கள். இருப்புப்பாதைகள் வந்

தபிறகுதான் வேற்றுமைகளில் நம்பிக்கைவைக்க ஆரம்பித்தோம்; அந்த வித்தியாஸங்களை இருப்புப்பாதைகளின் மூலமாய் ஒழிக்க ஆரம்பித்திருக்கிறோம் என்று நீர் இப்பொழுது தாராளமாய்ச் சொல்லலாம். கஞ்சா குடித்தபிறகுதான் அந்தப்பழக்கத்தின் கேடுகளை அறிந்தான். ஆதலின் கஞ்சா குடிப்பது நலம் என்று ஒருவன் வாதிக்கலாம். இருப்புப்பாதைகளைப்பற்றி நான் சொன்னதைச் சற்று கவனிக்க நான் உம்மை வேண்டிக்கொள்வேன்.

படிப்பவர் :—அப்படியே சந்தோஷமாய்ச் செய்கிறேன். ஆனால் இப்பொழுதே என்மனதில் ஒரு கேள்வி தோன்றுகிறது. நீர் மகம்மதியர்களுக்குமுன் இருந்த இந்தியாவைப்பற்றி வர்ணித்தீர்; ஆனால் இப்பொழுது, மகம்மதியர்கள் இருக்கிறார்கள்; பாரஸீகர்கள், கிருஸ்தவர்கள் இவர்களெல்லோரும் எப்படி ஒரு ஜாதியாராக முடியும். ஹிந்துக்களும் மகம்மதியர்களும் பழைய விரோதிகள். நமது பழமொழிகளே அதை ருசுப்படுத்துகின்றன. மகம்மதியர்கள் தொழுவதற்கு மேற்கே திரும்பிக்கொள்ளுகின்றனர்; ஹிந்துக்கள் கிழக்கை நோக்குகின்றனர். மகம்மதியர்கள் ஹிந்துக்களை விக்கிரக ஆராதிகள் என்று இகழ்கின்றனர். ஹிந்துக்கள் பசுவுக்குப்பூஜை செய்கின்றனர்; மகம்மதியர்கள் அதைக்கொல்லுகிறார்கள். ஹிந்துக்கள் கொல்லாவிரதத்தில் நம்பிக்கைகொண்டவர்கள்; மகம்மதியர்கள் அந்நம்பிக்கையற்றவர்கள். ஒவ்வொரு அடியிலும் நம்மிருவருக்கும் வேற்றுமைதான். எப்படி இந்தியா ஒரு ஜாதியாயிருக்கக்கூடும்?

அத்தியாயம் 10

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

ஹிந்துக்களும் மகம்மதியர்களும்

பத்திராதிபர் :—உம்முடைய கடைசிக்கேள்வி, கடினமான கேள்வி; எனினும் ஜாக்கிரதையாய்க் கவனித்தால், சமதானம் மிக எளிது என்று தெரியும். இருப்புப்பாதைகளும், வக்கீல்களும், வைத்தியர்களும் இருப்பதனுலே இந்தக்கேள்வி பிறக்கின்றது. இப்பொழுது பின் சொன்ன இரண்டையும் சோதிப்போம். ஏற்கனவே இருப்புப்பாதைகளைப்பற்றி விசாரித்து ஆய்விட்டது. மனிதன், தன் கைகளும், கால்களும் எவ்வளவு தூரம் எடுத்துச் செல்லக்கூடுமோ, அவ்வளவு தூரம் செல்லுவதற்குத்தான், இயற்கையிலேயே அமைக்கப்பட்டிருக்கிறுன், என்பதைமாத்திரம் நான் சேர்த்துச் சொல்லுகிறேன். இருப்புப்பாதைகளினுலோ, அல்லது வேறெந்த வாகனங்கள் மூலமாயோ, நாம் இடம்விட்டு இடம் ஓடாவிட்டால், வரக்கூடிய குழப்பமெல்லாம் நிவர்த்தியாகிவிடும். நமது கஷ்டங்கள் யாவும் நாமே உண்டாக்கிக்கொண்டவை. கடவுள் மனிதனுடைய தேக அமைப்பிலேயே,அவனுடைய சலன ஆசைக்கும் அளவு ஏற்படுத்திவிட்டார். இந்த அளவைக் கடப்பதற்கான வழிகளைத்தேட மனிதன் உடனே புறப்பட்டுவிட்டான். கடவுள் தன்னை யறியும்பொருட்டு, மனிதனுக்கு புத்தியைக் கொடுத்தார். கடவுளை மறக்கும்பொருட்டு, அதைக் கெட்டவழியில், மனிதன் உபயோகப்படுத்தி

ஞன். அக்கம்பக்கத் தவர்களுக்குமாத்திரம் உபயோகப்படும்படி, நான் அமைக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் எனது செருக்கினால் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் என் தேகத்தைக்கொண்டு உழைக்கவேண்டுமென்று, கண்டுபிடித்து விட்டதாகப் பாசாங்கு செய்கிறேன். முடியாத காரியத்தில் முயற்சி எடுத்துக்கொள்ளுவதனாலே, மனிதர் பல வேற்றுமைகளுள்ள சுபாவங்கள், மதங்கள் இவைகளினிடையேவந்து, முற்றிலும் குழப்பமெய்துகின்றனர். இந்தத் தர்க்கத்தின்படிக்கு, இருப்புப்பாதைகள் வெகு அபாயகரமானவை என்று உமக்குப் புலப்படும். இதனால் மனிதன் தன்னைப் படைத்தவனின்றும், வெகுதூரம் சென்றுவிட்டான்.

படிப்பவர் :—என் கேள்விக்கு உம்முடைய பதிலைக் கேட்க நான் ஆவலுள்ளவனாயிருக்கிறேன். மகம்மதிய மதம், இந்த தேசத்துக்கு வந்ததனாலே, நாம் ஜாதிக் கட்டுக் குலையவில்லையா ?

பத்திராதிபர் :—அநேக மதஸ்தர்கள் இந்தியாவிலேயிருப்பதன் காரணமாய், அது ஒரு ஜாதியாய் இல்லாமலிருக்கமுடியாது. அன்னியர்கள் வருவதனால் ஜாதி அழியாது. அவர்கள் அதிலே சேர்ந்து கலந்துகொள்ளுகின்றனர். இந்த நிலை வந்தாற்றான், ஒரு தேசம் ஒரே ஜாதி யாகும். அந்த தேசத்தாருக்குக் கலந்து கொள்ளும் சக்தி இருத்தல் வேண்டும். இந்தியா எப்பொழுதும் இத்தகைய சக்தியுள்ள தேசமாயிருந்தது. வாஸ்தமாகவே எத்தனை மனிதர்கள் இருக்கின்றனரோ, அத்தனை மதங்கள் உண்டு; ஆனால் தேசீய உணர்ச்சியுள்ளவர்கள்

பிறர் மதங்களில் தலையிடார்கள். அப்படித்தலையிட்டால் அவர்கள் ஒரே ஜாதி என்று அழைக்கப் படுவதற்கு அருகரல்ல. இந்தியாவிலே ஹிந்துக்கள் மாத்திரம் வசிக்க வேண்டும் என்று ஹிந்துக்கள் நம்பியிருந்தால், அவர்கள் கனவுஉலகத்தில் வசித்துக்கொண் டிருக்கிறவர்கள். ஹிந்துக்கள், மகமதியர்கள், பாரஸீகர்கள், கிருஸ்தவர்கள் இந்த தேசத்தை தங்கள் தேசமாக்கிக் கொண்டார்கள். அவர்க ளெல்லோரும் சகோதரர்கள்; அவர்கள் எல்லோரும் தங்கள் சொந்த லாபத்தின் பொருட்டாவது ஒற்று வாழவேண்டும். உலகத்தில் எந்த விதத்திலும் ஒரு ஜாதி என்பது, ஒரு மதம் என்ற பொருள் கொடுப்பதில்லை. இந்தியாவிலும் அப்படியிருந்ததில்லை.

படிப்பவர் :—ஹிந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் உடம்போடு பிறந்த பகைமையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்?

பத்திராதிபர் :—அந்தப்பதம், நம் பொது விரோதியால் கண்டு பிடிக்கப்பட்டது. ஹிந்துக்களும் மகமதியர்களும், சண்டை போட்டுக் கொண்டபொழுது, இந்த ரீதியில் பேசிக்கொண்டிருந்தனர். தங்களுக்குள்ள சண்டையை நிறுத்தி வெகு நாளாயிற்று. அப்படியிருக்கையில், இனி விரோதமேது. ஆங்கிலேயர்களின் ஆதீனத்துக்குப் பிறகுதான், நம்முடைய சண்டையை நிறுத்தினோம் என்று நீர் எண்ணிவிடாதேயும். ஹிந்துக்கள், மகமதிய அரசர்களின்கீழ் புகழ்பெற்று வாழ்ந்தனர். அப்படியே மகம்மதியர்களும் ஹிந்து மன்னர்களின் கீழ் வாழ்ந்துவந்தனர். பரஸ்பர சண்டை, தற்கொலை என்றும் கேவலம் ஆயுத பலத்தைக் கொண்டு ஒருவருடைய

மதத்தை மாற்ற முடியாதென்றும், இரு கக்ஷிக்காரர்களும் தெரிந்து கொண்டனர். ஆகையால் இருவரும் சமாதானத்துடன் வாழத் தீர்மானித்து விட்டனர். ஆங்கிலேயர்கள் வரவே, இச்சச்சரவுகள் மறுபடியும் ஆரம்பமாயின.

நீர் கூறின பழமொழிகள் அவர்களிருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்த பொழுது உண்டாக்கப்பட்டவை. அவைகளை இப்பொழுது திரும்பச் சொல்லுதல் கேட்டை விளைவிக்கும். அனேக ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் ஒரே மூதாதைகள் என்பதையும் அவர்களின் தேகத்தில் ஒரே இரத்தம் ஓடுகின்றதென்பதையும், நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டாமா? மதத்தை மாற்றிக் கொண்டதால், ஜனங்கள் விரோதிகள் ஆய்விடுகிறார்கள்? இந்துக்களின் கடவுளும் மகம்மதியர்களின் கடவுளும் வெவ்வேறானதா? மதங்கள் ஒரே முனைக்குச் செல்லும் அனேக வழிகள். ஒரே முடிவையடையும் பக்ஷத்தில் அனேக வழிகளிற் செல்லுவதால் என்ன பாதகம். சச்சரவுக்கு இடம் எங்கேயுளது?

மேலும் விஷ்ணு சிவபக்தர்களுக்குள்ளும் கொடிய பழமொழிகளிருக்கின்றன. எனினும் அவ்விருவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களல்ல வென்று ஒருவரும் சொல்வதில்லையே. ஜைன மதத்தினின்றும் வைதீக (வேத) மதம் வேறு, என்று சொல்லப் படுகின்றது; என்றால் இவ்விரு மதத்தினரும் வித்தியாஸமான ஜாதியார்களல்ல. வாஸ்தவமென்னவெனில், நாம் அடிமைகளாகிவிட்டோம்; ஆகையால் சண்டை செய்து, நமது சச்சரவுகளை, அயலார்கள் தீர்க்க விரும்புகின்றோம். விக்கிரக

முடைப்பவர்கள் ஹிந்துக்களிலு முண்டு, மகம்மதியர் களிலு முண்டு. நமக்கு அறிவு வளர வளர, நம்மினும் மதம் வேறு பட்டிருப்பவர்களோடு சண்டை யிடுதல் அவசியமில்லை என்பதை நாம் நன்கு தெரிந்துக்கொள்ளு வோம்.

படிப்பவர் :—(கோரக்ஷணம்) பசுப்பாது காப்பைப் பற்றி உமது அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

பத்திராதிபர் :—நான் பசுவை வணங்குகிறேன். அதாவது பசுவை அன்புற்ற மரியாதையுடன் நோக்கு கின்றேன். பசு இந்தியாவின் இரக்ஷணி ; ஏனெனில் இந்தியா விவசாய தேசமாதலின், தேச வளமை பசுவின் பேரில் மிகுதியும் சார்ந்திருக்கிறது ; பசு நூற் றுக் கணக்கான வழிகளில் நமக்கு உபயோகமுள்ள ஜந்து ; நமது மகமதிய சகோதரர்களும் இதை ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஆனால், நான் எவ்விதம் பசுவை மரியாதையுடன் நோக்குகிறேனே, அவ்விதமே என் தேசத்தோரை யும் பார்க்கிறேன். ஒரு மனிதன், ஹிந்துவனாலுஞ்சரி, மகம்மதியனானாலுஞ் சரி, பசுவைப் போல அவ்வ ளவு உபயோகமானவன். ஆகையால் ஒரு பசுவைக் காப்பாற்றுவதற்காக, ஒரு மகமதியனிடம் சண்டை போடுவதா, அல்லது அவனைக் கொல்லுவதா? அப்படி ச்செய்யுங்கால் மகம்மதியருக்கும் விரோதியாகின்றேன், பசுவுக்கும் விரோதியாவேன். ஆகையால் பசுவைக் காப்பாற்ற எனக்குத் தெரிந்த ஒரே வழி .யாதெனில், என்னுடைய மகம்மதிய சகோதரனிடம் போய், தேச நன்மைக்காக, என்னுடன் சேர்ந்து பசுவைக் காப்பாற்

றும்படி வேண்டிக்கொள்ளுவேன். அவன் எனக்கு செவிகொடாவிடில், எனது சக்திக்கு மீறின விஷயம் என்று எண்ணி, பசுவை அதன் கதிக்கே விட்டுவிடு வேன். பசுவினிடம் எனக்கு பரிதாபம் மிகுந்துவிட் டால், அதைக்காப்பாற்ற என் உயிரைக் கொடுப்பே னேயல்லாது, எனது சகோதரனைக் கொல்லும் வழி தேடேன். இது நமது மத தர்மமென நான் சொல்லு கிறேன்.

மனிதர்கள் பிடிவாதமுள்ளவர்களாயின், அது கஷ்ட மாகிவிடும். நான் ஒரு பக்கம் இழுத்தால், என் மகமதிய சகோதரன் வேறு வழி இழுப்பான். நான் என்னை உயர் ந்தவன் என்று மதித்துக்கொண்டால், அவனும் தன்னை அப்படியே எண்ணிக் கொள்ளுவான். நான் சாந்தமாய் அவனுக்குத் தலைவணங்கினால், அவன் இன்னும் அதிக சாந்தமாய் அவ்விதம் செய்வான்; அவன் அப்படிச்செய் யாவிடினும், நான் தலை வணங்கினதால் பிசகு செய்ததா கக் கருதப்படமாட்டேன். ஹிந்துக்கள் பிடிவாதங்கொ ண்டவுடனே, பசுக்கள் கொலையானது அதிகமாயிற்று. பசுரக்ஷண சபைகளெல்லாம் பசுக்களைக் கொல்லும் சபைகளாயின, என்பது எனது அபிப்பிராயம். இத்த கைய சபைகளை நாம் வேண்டுவது நமக்கு அவமானம். பசுக்களை காப்பாற்றும் வழியை நாம் மறந்தவுடனே, இத்தகைய சபைகள் நமக்கு வேண்டிவந்தது போ லும். என் சொந்த சகோதரன் ஒரு பசுவைக் கொல்லும் தருவாயில், நான் என்ன செய்வது? நான் அவனைக் கொல்லுவாதா அல்லது அவன் கால்களில் விழுந்து அவனைக்கெஞ்சுவதா? பிந்திய வழியை நான் அனுசரி

க்க வேண்டுமென்று நீர் ஒப்புக்கொண்டால், அவ்வி தமே நான் என்னுடைய மகம்மதிய சகோதரனிடமும் நடந்துக்கொள்ள வேணடும். ஹிந்துக்கள் பசுக்களைக் கொடுமையாய் நடத்தினுல் அப்பொழுது யார் அதை அழியாமற் காப்பாற்றுகிறது? ஹிந்துக்கள் பசுக்களின் கன்றுகளை, இரக்கமில்லாமல், கொம்புகளினுல் அடிக் கும்பொழுது அவர்களுடன் யார் வாதாடுகின்றனர். இது நாம் ஒரு ஜாதியாய் இருப்பதைத் தடுக்கவில்லை.

ஹிந்துக்களுக்குக் கொல்லா விரதத்தில், நம்பிக்கை யிருப்பது உண்மையாயின், மகம்மதியர்கள் அஃது இல் லையெனின், ஹிந்துக்களின் கடமைதான் என்ன? அஹிம் ஸை மதத்தைக்கொண்டவன், வேருரு மனிதனைக் கொல்லலாம் என்று சொல்லப்படவில்லை. அவனுக்கு ஒரே வழிதானுண்டு. ஒரு ஜந்துவைக் காப்பாற்ற, மற்ருென்றைக் கொல்லலாகாது. அவன் நியாயத்தை எடுத்துச் சொல்லலாம்—அத்துடன் அவன் கடமை முற்றிற்று.

ஆனுல் ஒவ்வொரு ஹிந்துவும் அஹிம்ஸையில் நம்பிக் கை கொண்டவனு? விஷயத்தின் அடிக்குச்சென்ருல், ஒருவராவது அந்த மதத்தை அனுஷ்டிப்பவரல்ல; ஏனெ ன்ருல் நாம் உயிரை அவமதிக்கின்ருேம். அம்மதத்தை நாம் அனுஷ்டிப்பதாக சொல்லுகின்ருேம்; ஏனென் ருல் எவ்வித உயிரையும் கொல்லும்பழி நம்மைச் சேரா மலிருக்க விரும்புகின்ருேம். பொதுவாகப் பார்க்கின் அனேக ஹிந்துக்கள் மாமிசம் உண்ணுகின்றனர்; ஆகையினுல் கொல்லா விரதத்தை அனுஷ்டிக்கிருர்களி ல்லை. ஹிந்துக்கள் அஹிம்ஸையில் நம்பிக்கையுற்றவர்கள்,

மகம்மதியர்கள் நம்பிக்கை யற்றவர்கள், என்ற காரணம் கொண்டு, இருவரும் ஒருங்கே ஒற்று வாழ முடியாது என்று சொல்வது பெருத்த அனியாயம்.

இந்த எண்ணங்களெல்லாம் சுயநலமுள்ள, பொய்யான குருக்கள் மார்களினுல், நம்மனதில் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயர்கள் இதற்கு கடைசிவர்ணம் அடித்துவிட்டார்கள். சரித்திரம் எழுதுவதில் அவர்களிடம் ஒரு வித வழக்கமுண்டு. எல்லா ஜனங்களின் நடை, யுடை, பாவனைகள் தெரிந்ததுபோல் பாவனை செய்கிறுர்கள். கடவுள் நமக்கு மிதமான புத்தி கொடுத்திருக்கிறுர்; ஆனுல் அவர்கள் கடவுளின் வேலையை தங்கள் கையிற் கொண்டு, புதிதாய்ச் சோதனைகளெல்லாம் செய்து பார்க்கின்றனர். தங்கள் ஆராய்ச்சிகளை மிகவும் பூஷித்து எழுதி, அவைகளை நம்பும்படி நம்மை மயக்குகின்றனர். அறிவின்மையால், நாம் அவர்களின் கால்களில் விழுகின்றோம்.

விஷயங்களைத் தவறுகக்கொள்ள இஷ்டப்படாதவர், கோரானை வாசித்துப்பார்த்தால், ஹிந்துக்களும் ஒத்துக்கொள்வதான நூற்றுக் கணக்கான வாக்கியங்கள் அகப்படும். மகம்மதியர் ஒத்துக்கொள்ளத்தக்க அனேகவாக்கியங்கள் பகவத்கீதையில் கிடைக்கும். எனக்குத்தெரியாத, அல்லது இஷ்டமில்லாத வாக்கியங்கள் கோரானில் இருக்கிறதற்காக ஒரு மகம்மதியரை நான் வெறுக்கலாமா? சச்சரவுக்கு இருவர் வேண்டும். ஒரு மகம்மதியரிடம் சச்சரவுசெய்ய எனக்கு இஷ்டமில்லாவிடில், அவர் என்னை சண்டைக்கிழுக்க முடியாது; ஒரு மகம்மதியர் வேண்டாமென்றுலும், சண்டைக்

கிழுக்க என்னால் முடியாது. ஆகாயத்தில் அடித்த கை சுளுக்கிக்கொள்ளும். ஒவ்வொருவரும் தன் மதத்தின் ஸாரத்தையறிந்து, அதன்படி நடந்து, பொய்யான குரு மார்கள் தனக்கு உபதேசிக்க இடங்கொடாமலிருந் தால், சச்சரவுக்கு மூலம் ஏற்படாது.

படிப்பவர் :—ஆனால் இவ்விருவரும் சேருவதற்கு ஆங்கிலேயர்கள் இடங்கொடுப்பார்களா ?

பத்திராதிபர் :—உம்முடைய கோழைத்தனத்தினால் இந்தக்கேள்வி பிறக்கிறது. அது நமது அற்ப அறிவை வெளிக்காண்பிக்கின்றது. இரண்டு சகோதரர்கள் சமா தானமாய் வாழ இஷ்டப்பட்டால், அவர்களைப்பிரிக்க மூன்றாவது மனிதனால் ஆகுமா ? அவர்கள் கெட்ட புத்தி மதிகளைக்கேட்டால், அவர்களை மூடர்களெனக் கருதுவோம். நம்மைப்பிரிக்க அவர்களுக்கு இடங் கொடுத்தால், ஹிந்துக்களும் மகமதியர்களும் தங்கள் மடத்தனத்தை குறைகூற வேண்டுமே யொழிய, ஆங்கி லேயர்களைக் குற்றம் சொல்லக்கூடாது. கல்லில் மோதி னால் ஒரு மண்குடம் உடைந்து போகும். ஒரு கல்லிலே இல்லாவிட்டாலும், வேறொரு கல்லில்பட்டு உடைந்து விடும். எட்டவைப்பதனால் ஆபத்திலிருந்து அந்தப் பானையைக் காப்பாற்ற முடியாது; ஆனால் ஒரு கல்லும் உடைக்காதபடி, அதைச் சூளையில்வைத்துச் சுடவே ண்டும். ஆகையால் நம்முடைய ஹிருதயங்களையும் முற் றிலும் சுட்ட களிமண்போல் ஆக்கிக்கொள்ளவேண்டும். அப்பொழுது எல்லா அபாயத்திலும் உறுதியாய் நிற் போம். இது இந்துக்களால் எளிதில் ஆகும். அவர்கள் ஜனத்தொகையில் அதிகம் ; அதிமாகக் கற்றவர்கள்

என்றும் பாவித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் மகம்மதியர்களிடமிருக்கிற நல்லுறவைக் கெடாமல் காத்துக்கொள்ள ஹிந்துக்களாலாகும்.

இவ்விரு ஜாதியாருக்குள்ளும் பரஸ்பர அவநம்பிக்கை இருக்கின்றது. மகமதியர்கள் மார்லி பிரபுவினிடமிருந்து சில பிரத்தியேக தயவுகளை வேண்டுகின்றனர். இதற்கு ஹிந்துக்கள் ஏன் குறுக்கேநிற்க வேண்டும்? ஹிந்துக்கள் தடுக்காது விட்டிருந்தால், ஆங்கிலேயர்கள் அதைப் பார்வையிட் டிருப்பார்கள்; வரவர மகமதியர்கள் ஹிந்துக்களை நம்புவார்கள்; சகோதர பாவம் ஏற்பட்டிருக்கும். நமது சச்சரவுகளை ஆங்கிலேயர்களிடம் கொண்டு போவதற்கு நாம் வெட்கப்படவேண்டும். விட்டுக்கொடுத்தால், ஹிந்துக்களுக்கு நஷ்டமில்லை என்று ஒவ்வொருவரும் தனக்குத்தானே தெரிந்துகொள்ளலாம். பிறருக்குத் தன்னிடம் நம்பிக்கை உண்டாகிய மனிதனுக்கு இந்த உலகத்தில் ஒரு விதத்திலும் ஒருபோதும் நஷ்டமேற்பட்டதில்லை.

இந்துக்களும் மகமதியர்களும் ஒரு போதும் சண்டை போட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று நான் குறிப்பிட வில்லை. ஒன்றாய் வாழும் இரண்டு சகோதரர்கள் அடிக்கடி சண்டை செய்வார்கள். சில சமயங்களில் நம்முடைய மண்டைகள் உடையும். இத்தகைய சங்கதி அவசியமில்லை; ஆனால் எல்லா மனிதர்களும் ஸமத்வ மனதுள்ளவர்களல்ல. கோபத்திலிருக்கும் பொழுது, முட்டாள் தனமாய் அனேக காரியங்கள் செய்கிறோம். இவைகளை நாம் சகித்துக் கொள்ளவேண்டும். ஆனால் நாம் சச்சரவிட்டுக்கொண்டால், வக்கீல் அமர்

த்தி, ஆங்கிலேயரிடத்திலோ அல்லது நியாயஸ்தலங்களு க்கோ, போக வேண்டியதில்லை. இரண்டு மனிதர்கள் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள்? இருவருக்கோ, அல்லது ஒருவருக்கோ மண்டை உடைந்து விடுகிறது; மூன்றும் மனிதன் எப்படி அவர்களுக்குள் நியாயத்தை ப்பிரித்துக் கொடுக்கமுடியும்? சண்டை யிட்டவர்கள் தங்களுக்குக் கேட்டை எதிர்பார்க்கலாம்.

அத்தியாயம் 11

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

வக்கீல்கள்

படிப்பவர் :—இருவர் சண்டை யிட்டுக்கொண்டால் அவர்கள் நியாயஸ்தலத்துக்குப் போகக்கூடாது என்று நீர் சொல்லுகிறீர். இது வியக்கத்தக்கது!

பத்திராதிபர் :—அதை விந்தை என்றாலும், இல்லை யென்றாலும் அது உண்மை. உம்முடைய கேள்வி நம்மை வக்கீல் களிடத்திலும் வைத்தியர்க ளிடத்திலும் கொ ண்டு போய்விடுகின்றது. வக்கீல்கள் இந்தியாவை அடி மைப்படுத்தினார்க ளென்றும், இந்து, மகம்மதிய, வேற் றுமைகளை விருத்தி செய்தார்களென்றும், ஆங்கில அதி காரத்தை ஊர்ச்சிதப்படுத்தினார்கள் என்றும், நான் உறு தியாய் நம்புகிறேன்.

படிப்பவர் :—இந்தப்பழிகளை சுமத்துவது மிக எளிது, ஆனால் அவைகளை ருசுப்படுத்துவது உமக்குக் கஷ்ட மாகிவிடும். வக்கீல்கள் இல்லாவிடின் நமக்கு சுதந்தி

ரத்துக்கு வழி யார் காண்பித்திருப்பார்கள்? ஏழை களை யார் காப்பாற்றியிருப்பார்கள்? யாரால் நியா யம் கிடைத்திருக்கும்? உதாரணமாக காலஞ்சென்ற மனமோகனகோஸ், பணமில்லாமல் எத்தனையோ ஏழைகளின் கட்சியை வாதித்தார். நீர் மிகவும் துதித்த காங்கிரஸின் உயிருக்கும் ஊக்கத்துக்கும் வக்கீல்கள் தான் காரணம். இத்தகைய மதிப்புள்ள வர்க்கத்தினரை நிந்தித்தல், நியாயத்தை அநியாயம் என்று கூறுவது போலிருக்கிறது; வக்கீல்களைத் தாழ்வாய்ப் பேசினதால், அச்சுக்கூட சுதந்திரத்தை நீர் கெட்டவழியில் உபயோகப் படுத்துகின்றீர்.

பத்திராதிபர் :—ஒருகாலத்தில் உம்மைப் போலவே நானும் எண்ணிக்கொண்டிருந்தேன். அவர்கள் ஒரு நல்லகாரியங்கூடச் செய்யவில்லை என்று உம்மிடம் ஸ்தாபிப்பது எனது விருப்பமில்லை. கோஸினுடைய ஞாபகத்தை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். அவர்ஏழைகளுக்கு உதவினார் என்பது உண்மையே. காங்கிரஸ் வக்கீல்களுக்கு சற்றுக் கடமைப் பட்டிருக்கிறது என்பது நம்பத்தக்கது. வக்கீல்களும் மனிதர்கள்தான். ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏதேனும் கொஞ்சம் நல்லகுணமுண்டு. வக்கீல்கள் நன்மை செய்தார்கள் என்ற உதராணங்கள் வெளிவரின், மனிதர்களாக அவர்கள் நன்மை செய்தார்களே யன்றி வக்கீல்களாய்ச் செய்யவில்லை என்று தெரியவரும். நான் உமக்குக்காண்பிக்க வேண்டியதெல்லாம், அந்தத் தொழில் அதர்மத்தைப் போதிக்கின்றது என்பது தான். சிலர்கூட தப்பக்கூடாத மயக்குகளுக்கு உட்பட்டிருக்கின்றது.

ஹிந்துக்களும் மகமதியர்களும் சண்டை போட்டுக் கொண்டார்கள். சாதாரணமான ஒருவன் அதைப்பற்றி எல்லா வற்றையும் மறந்து விடச் சொல்லுவான்; இருவர் பேரிலும் குற்ற மிருக்குமென்று சொல்லி, இனிமேல் சண்டை போடாதேயுங்கள் என்று சொல்லி யனுப்புவான். அவர்கள் வக்கீல்களிடம் போகிறார்கள். தங்கள் கக்ஷிக்காரர்களோடு சேர்ந்து கொண்டு, கட்சிக் காரர்களுக்கு இது வரையிலும் தெரியாத வழிகளையும், வாதங்களையும், கண்டு பிடித்துக் கொடுப்பது வக்கீல் களின் வேலை. அவர்கள் அவ்விதம் செய்யாவிடில், தங்கள் தொழிலைத் தாழ்வு படுத்தினதாகக் கருதப் படுவார்கள். ஆகையால், அனேகமாய், வக்கீல்கள் சண்டைகளை குலைப்பதற்கு பதிலாய், அவைகளை வளர்ப்பார்கள். மேலும் வககீல்கள் பிறரைக் கஷ்டங்களி னின்றும் விடுவிக்க அல்ல. ஆனால் தங்களைப் பணக்கா ரர்களாக்கிக் கொள்ளும் பொருட்டு, அந்தத் தொழிலை மேற்கொள்ளுகின்றனர். செல்வம் சேர்ப்பதற்கு அது ஒரு நல்ல வழி; விரோதங்களை வளர்ப்பதிலேதான் அவர்கள் லாபம் இருக்கின்றது. மனிதர்கள் சண் டையிட்டுக்கொள்ளுகையில் அவர்கள் சந்தோஷப்படு கின்றனர், என்று எனக்குத்தெரியும். குட்டி வக்கீல்கள் இவைகளை உற்பத்திசெய்கின்றனர். அட்டைகளைப் போல, அவர்களுடைய குமாஸ்தாக்கள் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுகின்றனர். வக்கீல்கள் வேலையற்ற மனிதர்கள், சோம்பேறிகள், சுகங்களில் மூழ்கியிருக் கும்பொருட்டு இத்தகைய தொழில்களை எடுத்துக்கொ ள்ளுகிறார்கள். இது உண்மையான வாக்குமூலம்; வேறு

எந்தவிதமும் புகல்வது வெறும்பாசாங்கு. தங்களுடையது கௌரவமுள்ள தொழில் என்று வக்கீல்கள் தாமே கண்டுபிடித்துக்கொண்டனர். தங்களைப்பற்றிய ஸ்துதிகளை எவ்விதம் கட்டிக்கொள்ளுகின்றனரோ, அவ்விதமே சட்டங்களையும் செய்துகொள்ளுகிறார்கள். தங்கள் கட்டணப்பணத்தையும் தாங்களே தீர்மானித்துக் கொள்ளுகின்றனர்; அவர்கள் ஆடம்பரம் செய்வதினின்றும், ஏழை ஜனங்கள் அவர்களைத் தெய்வம் என மதித்துவிடுகிறார்கள்.

சாதாரணக் கூலிகளைக்காட்டிலும் அவர்களுக்கு ஏன் அதிகக்கூலிவேண்டும்? அவர்களின் தேவைகள் ஏன் அதிகமாயிருத்தல் வேண்டும். சாதாரண கூலிக்காரர்களைவிட, தேசத்துக்கு எவ்விதத்தில் அவர்கள் அதிகலாபம் உண்டாக்குகின்றனர். உண்மையாக நன்மை செய்பவர்கள் அதிகக் கூலிக்கு லாயக்கோ? பணத்தின் பொருட்டு தேசத்துக்கு ஏதேனும் அவர்கள் செய்தால், அதை எப்படி நன்மையெனக் கருதலாகும்? ஹிந்து, மகம்மதிய சண்டைகளைப்பற்றி ஏதேனும் தெரிந்தவர்களுக்கு, இவைகளெல்லாம் வக்கீல்கள் தலையிடுவதினாலே விளைகின்றன என்று தெரியும். அவர்களினாலே சில குடும்பங்கள் கெட்டுப்போய்விட்டன. சகோதரர்களை விரோதிகளாக்கிவிட்டார்கள். வக்கீல்களின் ஆதீனத்தில் வந்த ஜமீன்தாரிகளுக்குக் கடன் மூட்டையாய்ச் சுமந்துவிட்டது. அநேகர் தங்களுக்குள்ளதெல்லாம் அபகரிக்கப்பட்டனர். இத்தகைய உதாரணங்கள் எத்தனையோ சொல்லலாம்.

ஆனால் தேசத்துக்கு அவர்கள் இழைத்த பெருத்த

கேடு யாதெனில், அவர்கள் ஆங்கிலேயர்களின் பிடிப்பை வலுப்படுத்திவிட்டனர். நியாயஸ்தலமில்லாமல் ஆங்கிலேயர்கள் அரசாட்சி நடத்துவதற்கு முடியுமென்று நீர் நினைக்கிறீரா? ஜனங்கள் நன்மைக்காக நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று எண்ணுவது தவறாகும். தங்கள் அதிகாரத்தை நீடிக்கச்செய்ய விரும்புகிறவர்கள், நியாயஸ்தல மூலமாய் அவ்விதம் செய்கின்றனர். ஜனங்கள் தங்கள் சண்டைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளுவதென்றால், மூன்றாவன் அவர்களின் பேரில் அதிகாரம் செலுத்தமுடியாது. தங்கள் வழக்குகளைச் சண்டைசெய்தோ, அல்லது தங்களுடைய பந்துக்களைத் தீர்க்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டோ, தீர்த்துக்கொண்டபொழுது, மனிதர்களுக்குஆண்மைத் தனம் குறையவில்லை. நியாயஸ்தலங்களுக்குச் சென்றவுடனே, மனிதர்கள் ஆண்மைத்தனம் குறைந்து, பேடிகளானார்கள். தங்கள் வழக்குகளைச் சண்டைசெய்து தீர்த்துக்கொண்டது அநாகரீகத்துக்கு ஒரு அடையாளந்தான். மூன்றாம் மனிதனை உமக்கும் எனக்கும் மத்தியஸ்தம்செய்ய வேண்டிக்கொண்டால், அந்நாகரிகத்தில் ஏதேனும் குறைவுண்டோ? நிச்சயமாய், மூன்றாம் மனிதன் தீர்ப்பு, எப்பொழுதும் சரியாயிருக்காது. எவன் சரியென்று கக்ஷிக்காரர்களுக்குத்தான் தெரியும். அன்னியனொருவன், நம்முடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு, நமக்கு நியாயம் தீர்க்கமுடியும் என்று, நமது பேதைமையினாலும் அறிவின்மையாலும் நம்புகிறோம்.

முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், வக்கீல்களில்லாமல் நியாயஸ்தலங்களை ஏற்படுத்த

வாவது நடத்தவாவது முடியாது; நியாயஸ்தலங்களின்றி ஆங்கிலேயர்கள் அரசாளமுடியாது. ஆங்கிலேய நியாஸ்தர்கள், ஆங்கில வக்கீல்கள், ஆங்கிலப் போலீஸ்க்காரர்கள்தான் இருந்தார்கள் என்று வைத்துக்கொண்டால், அவர்கள் ஆங்கிலேயர்களைத்தான் ஆளமுடியும். இந்திய நியாயஸ்தர்களும், இந்திய வக்கீல்களும், இல்லாமல், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஒன்றும் செய்ய முடியாது. வக்கீல்கள் எப்படி ஏற்பட்டனர் என்றும், அவர்களுக்கு எப்படி தயவு காண்பித்தார்களென்றும், நீர் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது இந்தத் தொழிலில் எனக்கு ஏற்பட்டிருக்கிற வெறுப்பு உமக்கும் வரும். வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டு விட்டு, வேசித்தொழிலை யொத்த இழிவுள்ளது இத் தொழில், என்று எண்ணுவார்களானால் ஆங்கிலேயர் ஆளுகை ஒருநாளில் சிதறிவிடும். மீன்கள் ஜலத்தை விரும்புவதுபோல, நாம் சச்சரவுகளையும், நியாஸ்தலங்களையும், விரும்புகின்றோம், என்றபழி சுமத்தப்பட்டதற்கு, அவர்கள்தான் மூலகாரணம். வக்கீல்களைப்பற்றி சொன்னவை யெல்லாம் நியாயாதிபதிகளுக்கும் பொருந்தும். அவர்கள் பங்காளிகள். ஒருவர் மற்றவருக்குப் பலம் அளிக்கின்றனர்.

அத்தியாயம் 12

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

வைத்தியர்கள்

படிப்பவர் :—வக்கீல்களைத் தெரிந்துகொண்டேன். அவர்கள் செய்திருக்கக்கூடிய நன்மை அவர்கள் அகஸ்மாத்தாய்ச் செய்திருக்கின்றனர். நிச்சயமாய் அந்தத்தொழில் வெறுக்கத்தக்கதே. நீர், ஏதோ, வைத்தியர்களையும்கூட இழுத்தீரே, அது எப்படி?

பத்திராதிபர் :—உமக்குச்சொன்ன அபிப்பிராயங்கள் நான் அனுஷ்டித்தவை. அவைகள் புதிதல்ல, வக்கீல்களையும் வைத்தியர்களையும்பற்றி மேல்நாட்டு நூலாசிரியர்கள் இன்னும் கடினபதங்களை உபயோகப்படுத்தியிருக்கின்றனர். ஒரு நூலாசிரியர் இந்தப் புதுமுறையாவையும் ஒரு உபாஸ்மரத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார். சட்டம், வைத்தியம் முதலிய பிறர்மேல் ஜீவிக்கும் தொழில்கள், அதனுடைய கிளைகள்; அடிமரத்தின்பேரில் உண்மை மதமாகிய கைக்கோடரியை எரிவதுபோல் வரையப்பட்டிருக்கிறது. அதர்மம் மரத்தின் அடிவேர். இந்த அபிப்பிராயங்கள் என் மனதிலிருந்து மாத்திரம் வருவதில்லை என்றும், அநேகருடைய கூட்டு அனுபவங்களடங்கியன என்றும் நீர் தெரிந்துகொள்ளுவீர். ஒரு காலத்தில் வைத்தியத்தொழிலில் எனக்கு மிகுந்த பிரியமிருந்தது. தேசத்தின்பொருட்டு வைத்தியனுவதற்கும் எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் எனக்கு இனியில்லை. நமக்குள் வைத்தியர்கள் ஏன்

கௌரவமுள்ள அந்தஸ்தில் இருந்ததில்லை என்று இப்பொழுது எனக்குத் தெரிகிறது.

நம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுவதற்கு வைத்தியத்தொழிலையும், ஆங்கிலேயர்கள் நன்றாய் உபயோகித்துக் கொண்டார்கள். இது ராஜீய இலாபத்தின் பொருட்டு. அநேக ஆசியாக்கண்டத்து மன்னர்களிடம் தங்கள் தொழிலை அநேக வைத்தியர்கள் உபயோகப்படுத்திக் கொண்டதாகத் தெரியவருகிறது. வைத்தியர்கள் அநேகமாய் நம்மை நிலை குலைத்துவிட்டனர். பட்டம்பெற்ற வைத்தியர்களைவிட, சாதாரண வைத்தியர்கள் மேல் என்று நான் சில சமயங்களில் எண்ணியிருக்கிறேன். கவனித்துப் பார்ப்போம்; வைத்தியரின் வேலை தேகத்தைக் கவனித்துப் பார்ப்பது அல்லது சரியாய்ச் சொல்லுங்காலத்தில் அதுகூட இல்லை. தேகத்தை வாதிக்கும் வியாதிகளைப் போக்குவதுதான் அவர்களின் வேலை. எப்படி வியாதிகள் உற்பத்தியாகின்றன? நமது கவனக்குறைவினால். நான் அதிகமாய்ச் சாப்பிட்டுவிடுகிறேன், எனக்கு அஜீரணம் வந்துவிடுகிறது; ஒரு வைத்தியரிடம் போகிறேன்; அவர் எனக்கு மருந்து கொடுக்கிறார்; எனக்கு குணமாகிறது; நான் மறுபடியும் அதிகமாய்ச் சாப்பிடுகிறேன்; மறுபடியும் அவர் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளுகிறேன். முதலிலேயே இந்த மாத்திரைகளை உபயோகப் படுத்தாவிட்டால், எனக்குத் தக்க தண்டனையை சகித்திருப்பேன்; நான் மறுபடியும் அதிகமாய் சாப்பிட்டிருக்கமாட்டேன். வைத்தியர் தலையிட்டார்; என்னை நான் சீராட்டிக்கொள்ளு

வதில் ஒத்தாசைசெய்தார். நிச்சயமாய், என் தேகத்துக்கு அதனாலே குணந்தான்; ஆனால் என் மனது பலஹீனப்பட்டுவிட்டது. மருந்து சாப்பிட்டுக்கொண்டேவந்தால், மனது உறுதி கெட்டுப்போய்விடும்.

துன்மார்க்கத்திலே பிரவேசிக்கிறேன், வியாதியை வாங்கிக்கொள்ளுகிறேன்; ஒருவைத்தியர் என்னைசொஸ்தப்படுத்துகிறார்; முடிவு யாதெனில் மறுபடியும் கெட்டவழியில் புகுவேன். வைத்தியர் தலையிடாவிடில், இயற்கை அதனுடைய வேலையைச் செய்திருக்கும்; என் பேரிலே நான் எஜமானத்துவம் அடைந்திருப்பேன்; துர்மார்க்கம் நின்று போயிருக்கும்; நானும் ஆனந்தமடைந்திருப்பேன்.

ஆஸ்பத்திரிகள் பாபத்தை பரப்புவதற்கான ஸ்தலங்கள். மனிதர்கள் தங்கள் தேகங்களைப்பற்றி கவலைக்குறைவா யிருக்கின்றனர்; துன்மார்க்கம் பெருகுகின்றது. இவர்களில் ஐரோப்பிய வைத்தியர்கள் ரொம்ப "மோசம்." மனிததேகத்திலே கவலை கொண்டவர்களைப்போலக் காண்பித்து, வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான ஜந்துக்களை கொல்லுகின்றனர். ஜீவமிருகாங்கச்சேதம் செய்கின்றனர். எந்த மதமும் இதற்கு அனுமதி கொடுப்பதில்லை. நமது தேகங்களின்பொருட்டு அத்தனை உயிர்களைக் கொல்லுவது அவசியமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள்.

இந்த வைத்தியர்கள் நமது தெய்வபக்தியுள்ள சுபாவத்தைக் குலைத்துவிடுகின்றனர். அவர்கள் செய்யும் அநேக மருந்துகளில் கொழுப்பு அல்லது மயக்கமுள்ள லாகிரிவஸ்து சம்பந்தப்பட்டிருக்கிறது. இவை யிரண்

டும் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் விலக்கு, நாகரீகமுள்ளவர்களென பாவித்து, மதசம்பந்தமான விலக்குகளை மூடபக்தியென நினைத்து வேண்டுமென்று நாம் விரும்பினவைகளிலெல்லாம் உபயோகிக்கிறோம். வைத்தியர்கள் இப்படிச்செய்யத் தூண்டுகின்றனர் என்பது உண்மை; அதன் பலனாய் நாம் நம் தன்னடக்கத்தை இழந்து, தைரிய மற்றவர்களாகின்றோம. இந்த நிலைமையில், தேசத்துக்கு ஊழியம்செய்ய நாம் தகுதியற்றவர்கள். ஐரோப்பிய மருந்து முறையைக் கற்பது, நமது அடிமைத்தனத்தை பலப்படுத்திக் கொள்ளுவதாகும்.

வைத்தியத் தொழிலை நாம் ஏன் எடுத்துக்கொள்ளுகிறோம் என்பது நோக்கத்தக்கது. நிச்சயமாய் உலகத்தாருக்கு ஊழியம் செய்யும்பொருட்டு அல்ல. கௌரவங்களும் பணமும் பெறும்பொருட்டு நாம் வைத்தியர்களாகின்றோம். இந்தத் தொழிலாலே உலகத்தாருக்கு உண்மையான ஊழியம் செய்வதற்கு இடமில்லை யென்றும், ஆனல் மனிதர்களுக்குக் கேட்டை விளைவிக்கும் என்றும் காண்பிக்க முயன்றேன். வைத்தியர்கள் தங்கள் அறிவைச் சுட்டிக் காட்டி, அதிகப்பணத்தை வாங்கிக் கொள்ளுகின்றனர். உண்மையிலேயே சில பைசாக்கள் பொறுமான தங்கள் மருந்துகளை ரூபாய்க்கணக்கில் விற்கின்றனர். ஜனங்கள் தங்கள் பேதமையினுலும், சில நோய்களைப் போக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணங்கொண்டும், ஏமாந்துபோகின்றனர். காருண்யக் கோலம் பூண்டுகொள்ளும் டாக்டர்களைவிட, நமக்குத் தெரிந்த நாட்டு வைத்தியர்கள் உயர்ந்தவர்களல்லவா?

அத்தியாயம் 13

எது உண்மையான நாகரீகம்

படிப்பவர் :—இருப்புப்பாதைகளையும், வக்கீல்களை யும், வைத்தியர்களையும் தூஷித்துவிட்டீர். இயந்திரங்க ளெல்லாவற்றையும் தள்ளிவிடுவீர் என எனக்குத் தெரி யும். அப்படியானால் நாகரீகம் என்பது என்ன?

பத்திராதிபர் :—அந்தக்கேள்விக்கு பதில் சொல்லு வது கடினமல்ல. இந்திய நாகரீகம் உலகத்தில் மற்றெ தற்கும் குறைந்ததல்ல என்று நான் நம்புகிறேன். நமது முன்னோர்கள் விதைத்த விதைகளுக்கு எதுவும் சமனா காது. ரோமாபுரி போய்விட்டது ; கிரீசுக்கு அதேகதி தான்; பரோவாக்களின் பலம் சிதறிப்போயிற்று; ஜப் பான் மேனாடுபோலாய்விட்டது; சீனத்தைப்பற்றி ஒன் றும் சொல்லமுடியாது; ஆனால் எதனாலேயோ, இந்தியா இன்னும் அஸ்திபாரத்தில் கெடாமலிருக்கின்றது. ஐரோப்பா ஜனங்கள், தங்கள் பண்டைக்கீர்த்திபெற்ற கிரீஸ், ரோம், தேசத்தவர்களின் நூல்களினின்றும், தங்கள் அறிவைக் கொள்ளுகின்றனர். அவைகளை கற்க முயலுவதில், கிரேக்கர்கள், ரோமர்களுடைய தவறு தல்களை விலக்கிக்கொள்ளலாம் என்று ஐரோப்பியர்கள் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதுதான் அவர்களின் பரிதாபமான நிலை. இதன் மத்தியில், பாரததேவி அசை யாமல் நிற்கின்றாள்; அதுதான் அவளது கீர்த்தி. இந் திய ஜனங்கள் அநாகரீகமுள்ளவர்கள், அறிவிலிகள், மந்தபுத்தியுள்ளவர்கள் என்றும், ஆகையால் அவர்களை ஏதேனும் மாறுதல்களை அங்கீகரிக்கத் தூண்டமுடியா

தென்றும் இந்தியாவின் பேரில் ஒரு பழி சுமத்துவதுண்டு. வாஸ்தவமாகவே இது நமது யோக்கியதையின் பேரில் சுமத்தப்பட்ட குற்றம். சோதித்து அனுபவத்தில் உண்மையெனக்கண்டுகொண்டதை மாற்ற நமக்கு தைரியம் பிறக்காது. அனேகர் தங்கள் புத்திமதியை இந்தியாவின் பேரில் நுழைக்கிறார்கள்; ஆனால் அவள் நிச்சயமாய் இருக்கின்றாள். இதுதான் அவளது சௌந்தரியம்; இதுதான் நமது ஆசைநோக்கத்தின் நங்கூரம்.

கடமையின் வழியை மனிதனுக்குக் காட்டும் நடத்தையின் முறையே நாகரீகம் எனப்படுவது. கடமையைச் செய்தல் என்றாலும், தர்மத்தை அனுஷ்டித்தல் என்றாலும் ஒன்றுதான். தர்மானுஷ்டானம் நமது மனோவிகாரங்களைக் கொன்று, நமது மனத்தின் பேரில் ஆட்சி உண்டாக்கும். அவ்விதம் செய்வதால், நம்மை நாமே அறிந்துகொள்ளுகிறோம். நாகரீகத்துக்குச் சரியான குஜராத்தி வார்த்தைக்கு நன்னடக்கை என்று அருத்தம்.

இந்த நிரூபணம் சரியாயின், அனேக நூலாசிரியர்கள் காண்பித்ததுபோல, இந்தியா பிறரிடமிருந்து ஒன்றும் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை; எது எப்படி இருக்கவேண்டுமோ அப்படியிருக்கின்றது. மனது சஞ்சலமுள்ள பக்ஷியென்பதை நாம் கவனிக்கிறோம். பெறப்பெற அதன் ஆசை அதிகரிக்கின்றது. அப்பொழுதும் திருப்தியடையாமலிருக்கிறது. நமது மனோ விகாரங்களில் நாம் உழல உழல, அவைகள் கட்டுக்கடங்காமற் போய்விடுகின்றன. ஆகையால் நமது முன்னோர்கள், நாம் உழலுவதற்கு ஒரு எல்லை ஏற்படுத்தினார்கள்.

சந்தோஷம் என்பது ஒரு மனோ நிலைமை என்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள். பணக்காரனாயிருந்ததனாலேயே ஒருவன் சந்தோஷமுள்ளவனாகான்; ஏழையானால் துக்கமுள்ளவனுமல்ல. வெகு சமயங்களில் பணக்காரர்கள் துக்கத்திலும், ஏழைகள் சந்தோஷத்திலுமிருப்பார்கள். இலக்ஷக்கணக்கானவர்கள் எப்பொழுதும் ஏழையாயிருப்பார்கள். இதையெல்லாம் தெரிந்துதான், நமது முன்னோர்கள் சுகங்கள்யாவும் கூடாதென்று விலக்கி வைத்திருந்தனர். ஆயிரவருஷங்களுக்கு முன்னிருந்த கலப்பைகளைப்போலவே வைத்துக்கொண்டு, நம்முடைய காலம் தள்ளிவந்தோம். முன்காலத்திலிருந்த குடிசைகளின் மாதிரிகளையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். நமது சொந்தப்படிப்பும் முன்னிருந்ததுபோலவே யிருக்கின்றது. உயிரை வாங்கிவிடும் போட்டி நம்மிடம் இருந்ததில்லை. அவனவன் தன் தொழிலைப் பார்த்துக்கொண்டு, விதித்த கூலியை வாங்கிக்கொண்டிருந்தான். நமக்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கத் தெரியாமலல்ல; இந்த விஷயங்களில் நமது கவனம் சென்றால் அடிமைகளாகி நமது தரும சிந்தனையை இழந்து விடுவோம் என்று நமது முன்னோர்கள் தெரிந்துகொண்டார்கள். நம்முடைய கைகால்களால் செய்யக்கூடியவற்றைத்தான் நாம் செய்யவேண்டுமென்று தகுந்த யோசனையின்பேரில் அவர்கள் தீர்மானித்துவிட்டனர். நமது கைகளையும் கால்களையும் சரியானபடி உபயோகப்படுத்துவதிலேதான் நமது சந்தோஷமும் சௌக்கியமும் இருக்கின்றன என்று அவர்கள் அறிந்தார்கள். பெரிய பட்டணங்கள் மயக்கு என்றும்,

அவைகளில் ஜனங்கள் சந்தோஷமாயிருக்கமாட்டார்கள் என்றும், அவைகளில் திருடர்களும் கொள்ளைக்காரர்களும் துன்மார்க்கமும் தழைத்தோங்கப் பெறும் என்றும், ஏழைகளைப் பணக்காரர்கள் அபகரித்து விடுவார்கள் என்றும், அவர்கள் முடிவுக்கு வந்தார்கள். ஆகையால் அவர்கள் சிறிய கிராமங்களிலேயே திருப்தியடைந்து விட்டனர். மன்னர்களும் அவர்களின் சக்திகளும் தருமவான்களுக்கு அடங்கினவைகள் என்றும் தெரிந்துகொண்டு, உலகமன்னர்கள், ரிஷிகளுக்கும் பக்கிரிகளுக்கும் தாழ்ந்தவர்கள் என்று மதித்தார்கள். இத்தகைய ஏற்பாடு உள்ள ஜனங்கள், கற்பதை விட போதிப்பதற்குத் தகுதியுள்ளவர்கள். இந்தஜாதியாருக்கும், நியாயஸ்தலங்கள், வக்கீல்கள், வைத்தியர்கள் இருந்தார்கள்; ஆனால் அவைகளெல்லாம் எல்லைகளுக்குட் பட்டு இருந்தன. இந்தத் தொழில்களெல்லாம் விசேஷமாய் உயர்ந்தவைகளல்லவென்று ஒவ்வொருவருக்கும் தெரியும்; மேலும் இந்தவக்கீல்களும் வைத்தியர்களும் ஜனங்களை அபகரிக்கவில்லை. அவர்கள் ஜனங்களைச்சார்ந்தவர்க ளென்றல்லாமல், ஜனங்களின் எஜமானர்கள்என்று கருதப்படவில்லை. நீதி பரிபாலனம் நன்றாய்நடந்துவந்தது. நியாயஸ்தலங்களை விலக்கிவைப்பதுதான் பொதுவிதியாயிருந்தது. ஜனங்களை மயக்கி இழுக்கும் குமாஸ்தாக்களில்லை. இந்தக் கேடுகூட முக்கிய பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றியுந் தானிருந்தது. சாமானிய ஜனங்கள் உழுது பயிர்செய்து சுயேச்சையுடன் வாழ்ந்து வந்தனர். உண்மையான சுயராஜ்ஜியத்தை அவர்கள் அனுபவித்தார்கள்.

இந்த சாபக்கேடான புதிய நாகரீகம் எங்கு இன்னும் செல்லவில்லையோ, (புது நாகரீகம் செல்லாத இடத்து) இந்தியா பழைய மாதிரிதா னிருக்கிறது. அந்த பாகத் திலுள்ள ஜனங்கள், உம்முடைய புதிய நோக்கங்களைக் கண்டு நன்றாய்ச் சிரிப்பார்கள். ஆங்கிலேயர் இவர்களை ஆளுவதில்லை ; நீரும் அவர்களை ஒருநாளும் ஆளமுடியாது. யாருக்காக நாம்பேசுகின்றோமோ அவர்களை நமக்குத் தெரியாது; அவர்களுக்கும் நம்மைத் தெரியாது. நீரும் உம்மையொத்த தேசபக்தர்களும், இருப்புப்பாதைகளை இன்றும் தீண்டாத இடங்களுக்குச் சென்று அங்கே ஆறுமாதம் குடியிருக்கும் படியாய் வேண்டிக் கொள்ளுகிறேன். அப்பொழுது நீர் தேசபக்தராவீர். சுயராஜ்ஜியத்தைப்பற்றிப் பேசலாம்.

எதை நான் உண்மையான நாகரீகம் எனக்கருதுகிறேன் என்று உமக்குத்தெரியும். நான் விவரமாய்க் கூறியஸ்திதியை மாற்ற முயல்பவர் தேசவிரோதிகள், பாபிகள்.

படிப்பவர் :—இந்தியா நீர் சொல்லியபடி யிருந்தால் எல்லாம் சரிதான். ஆனல் இந்தியா வேறுவிதமா யிருக்கின்றதே. குழந்தை விதவைகள் நூற்றுக் கணக்காயிருக்கின்றனர் ; இரண்டு வருஷக் குழந்தைகளுக் கெல்லாம் கலியாணமாகிவிடுகிறது; பன்னிரண்டு வயதுள்ள சிறுமிகளெல்லாம் தாய்மார்களாகி விடுகின்றனர். ஸ்திரீகள் அனேக புருஷர்களை மணக்கின்றனர் ; நியோகவழக்கம் நடைபெறுகின்றது ; மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு, சில பெண்கள் வேசிகளாகிறார்கள் ; மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு, ஆடுகளும் குட்டி

களும் கொல்லப்படுகின்றன. இவைகளையும் நீர் கூறின நாகரீகத்தின் அடையாளங்கள் என்று கருதுகின்றீரோ.

பத்திராதிபர் :—தப்பிதம் செய்துவிட்டீர். நீர் காட்டிய குறைகள்குறைகளே. அவைகளைப் புராதன நாகரீகம் என்று எண்ணி எவரும் தப்பிப்போவதில்லை. அவைகள் நாகரீகத்துக்கும் மீறியிருக்கின்றன. இவைகளை நீக்க அப்பொழுது முயற்சி செய்துவந்தார்கள்; இனியும் முயற்சிசெய்வார்கள். நம்மிடம்வந்திருக்கும் புதிய மனோபாவத்தைக்கொண்டு, இந்தக்கேடுகளை நீக்க வழி தேடிக்கொள்ளலாம். ஆனால் புதியநாகரீகத்தின் அடையாளங்கள்என்று நான் கூறினவை யெல்லாம், அதன் பக்தர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்டன. நான் விரித்துரைத்த இந்திய நாகரீகத்தையும் பற்றி அதன் பக்தர்கள் நான் சொல்லியவிதமே கூறியுள்ளார். உலகத்தின் எந்த பாகத்திலும், இந்த நாகரீகத்தைக்கொண்டு எல்லா மனிதர்களும் பக்குவமடைந்ததில்லை. தர்மத்தைப்பரப்புவது இந்திய நாகரீகத்தின் நோக்கம். அதர்மத்தைப் பரப்புவது மேனாட்டு நாகரீகத்தின் நோக்கம். மேனாட்டு நாகரீகத்துக்கு கடவுள் இல்லை; கடவுளினிடம் நம்பிக்கை இந்திய நாகரீகத்தின் அடிப்படை. இவ்விதம் அறிந்து நம்பின பின்னர், தேசபக்தர் ஒவ்வொருவரும், ஒரு குழந்தை தாயின் மார்பில் ஒட்டிக்கொள்ளுவதுபோல, புராதன இந்திய நாகரீகத்தைப் பற்றிக்கொள்ளவேண்டியது கடமையாகும்.

அத்தியாயம் 14

இந்தியா எப்படி விடுதலை அடையக்கூடும்?

படிப்பவர்:—நாகரீகத்தைப்பற்றி உமது அபிப்பிராயங்களை நான் கண்டு கொண்டேன், அதைப் பற்றி நான் யோசிக்கவேண்டும். எல்லாவற்றையும் உடனே நான் கிரகித்துக் கொள்ளமுடியாது. இத்தகைய அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு இந்தியாயின் விடுதலைக்கு என்ன வழி சொல்லுவீர்.

பத்திராதிபர்:—என்னுடைய எண்ணங்கள் உடனே ஒப்புக்கொள்ளப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உம்மைப்போலொத்த படிப்பவர்களிடம் என் எண்ணங்களைச் சொல்லுவது என்னுடைய கடமை. காலத்தை நம்பி பாக்கிவேலையை விட்டுவிடலாம். இந்தியாவின் விடுதலைக்கு வேண்டிய ஸ்திதிகளை ஏற்கனவே சோதித்தோம்; ஆனால் அதை ஜாடையாய்ச்செய்தோம். இப்பொழுது நேராகவே சோதிப்போம். நோயின் மூலத்தை நீக்கினால், நோயும் நீங்கும் என்பது உலகமறிந்த விஷயம். அதுபோல இந்தியாவின் அடிமைத்தனத்தின் காரணத்தைப்போக்கினால், இந்தியா விடுதலையடைந்து விடும்.

படிப்பவர்:—நீர் சொல்லுகிறபடி இந்திய நாகரீகம் எல்லாவற்றிலும் உயர்ந்ததாயிருந்தால் இந்தியாவின் அடிமைத்தனத்திற்கு எவ்விதம் சமாதானம் சொல்லுவீர்?

பத்திராதிபர்:—இந்த நாகரீகம் கேள்விக்கிடமில்லாமலே எல்லாவற்றினும் உயர்ந்தது; ஆனால் எல்லா நாக

நீங்களுக்கும் சோதனையுண்டு என்பது கவனிக்கத்தக்கது. எந்த நாகரீகம் சாசுவதமோ, அது சோதனையை தாங்கி நிற்கும். இந்தியாவின் பிள்ளைகள் கேவலமாகி விட்டபடியால் அதனுடைய நாகரீகம் ஆபத்திலிருக்கிறது. ஆனால் அதன்பலம் அதிர்ச்சியைத் தாங்குவதில் தெரியும். மேலும் இந்தியா முழுதும் இன்னும் தாக்கப்படவில்லை. ஆங்கில நாகரீகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரம், அடிமையாக்கப்பட்டிருக்கின்றனர். நமது சிறிய அடிக்கோலினால் உலகத்தை அளக்கின்றோம். நாம் அடிமைகளானபிறகு, உலக முழுதும் அடிமையாகிவிட்டது என்று எண்ணிவிடுகிறோம். நாம் இழிவான ஸ்திதியிலிருப்பதால் இந்தியா முழுதும் அந்த நிலையிலிருக்கிறது என்று நினைக்கிறோம். உண்மையிலே, அது அப்படியல்ல; நமது அடிமைத்தனத்துக்கு இந்தியா முழுதும் காரணம் என்றாலும் பொருந்தும். இதை ஞாபகம் வைத்துக்கொண்டால், நாம் விடுதலையடைந்தால் இந்தியா விடுதலை பெறுகின்றது என்பது தெளிவு. இந்த எண்ணத்தில் சுயராஜ்ஜிய நிரூபணம் ஒன்று உமக்குக் கிடைத்திருக்கிறது. நம்மை நாமே ஆளக் கற்றுக்கொண்டால், அது சுயராஜ்ஜியம். ஆகையால் சுயராஜ்ஜியம் நமது உள்ளங்கைகளிலிருக்கின்றது. இந்த சுயராஜ்ஜியத்தைக் கனவு என்று கருதாதேயும். இங்கே சும்மாயிருத்தல் என்ற எண்ணமேயில்லை. உமக்கும் எனக்கும் நான் தெளிவுறச்சொல்ல எத்தனிக்கும் ஸ்வராஜ்ஜியம் இன்னதென்று ஒரு தடவை நாம் உணர்ந்தோமானால் நமது ஆயுள் முடியுமட்டும் பிறரையும் அப்படிச் செய்ய

நாம் தூண்டிக்கொண்டேயிருப்போம். ஆனால் இந்த சுயராஜ்ஜியத்தை ஒவ்வொருவரும் தனக்குத்தானே தன் சொந்த அனுபவத்திற்காணவேண்டியது. முழுகிப்போகும் ஒருவன் இன்னொருவனை ஒருநாளும் காப்பாற்றினதில்லை. நாமோ அடிமைகள்; பிறரை விடுவிக்க எண்ணுவது வெறும் பாசாங்கு ஆகும். ஆங்கிலேயர்களை துரத்துவதை நமது முடிவாகக்கொள்ளுதல் அவசியமில்லை என்று உமக்கு இப்பொழுது தெரிந்திருக்கும். ஆங்கிலேயர்கள் இந்தியர்களாகிவிட்டால், நாம் அவர்களை நம்மிடத்தில் வைத்துக் கொள்ளலாம், அவர்களுடைய நாகரிகத்துடனே இந்தியாவில் அவர்கள் இருக்க விரும்பினால், அவர்களுக்கு இடங்கிடைக்காது. இத்தகைய ஸ்திதியை உண்டாக்குவது நமது கைக்குள் இருக்கிறது.

படிப்பவர் :—ஆங்கிலேயர்கள் எப்பொழுதேனும் இந்தியர்கள்போலாவார்கள் என்பது அஸாத்தியம்.

பத்திராதிபர் :—அப்படிச் சொல்லுதல் ஆங்கிலேயர்களுக்கு மானிடச் சுபாவம் இல்லையென்று சொல்லுவதற்குச் சமானம். அவர்கள் இந்தியர்களைப்போல ஆவார்களா அல்லவா என்பது நமக்கு வேண்டியதில்லை. நம்முடைய வீட்டை நாம் சரியாய் வைத்துக்கொண்டால் அதில் வாழத்தகுதியுள்ளவர்கள்தான் தங்குவார்கள்; மற்றவர்கள் தாங்களாகவே விட்டுப் போய்விடுவார்கள். இந்தச் சங்கதிகள் நம்மெல்லோர் அனுபவத்திலும் நடந்திருக்கின்றன.

படிப்பவர் :—ஆனால் இது சரித்திரத்தில் நேர்ந்ததில்லையே.

பத்திராதிபர் :—சரித்திரத்தில் நேராதது இனிமேல் ஒருக்காலும் நேராது என்று எண்ணுவது மனிதனுடைய கௌரவத்தில் நம்பிக்கையற்றோம் என்று வாதிப்பது. நமது புத்திக்கு எட்டியதைச் செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா தேசங்களும் ஒரே நிலையிலிருக்கவில்லை. இந்தியாவின் நிலைமை ஒப்பற்றது. அதன்பலம் அளக்கமுடியாது. ஆகையால் அன்னிய தேசங்களுடைய சரித்திரத்தை நாம் குறிப்பிட அவசியம் ஏற்படவில்லை. மற்றைய நாகரிகங்களெல்லாம் சீர்குலைந்துபோகும், இந்திய நாகரிகம் அனேக இடிகளைத் தாங்கிக்கொண்டு உயிருடன் இருக்கிறது என்ற விஷயத்தை உமக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறேன்.

படிப்பவர் :—இதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. ஆயுதபலத்தினால் ஆங்கிலேயர்களைத் துரத்தவேண்டுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவர்கள் இந்த தேசத்தில் இருக்குமளவும் நமக்கு ஓய்வு இருக்காது. அடிமைகளுக்கு சந்தோஷக்கனவுகூட இல்லை என்று நமது கவிராயர்களில் ஒருவர் சொல்லுகிறார். ஆங்கிலேயர்கள் இருப்பதால், நாளுக்கு நாள் பலம் குறைந்து கொண்டு வருகிறோம். நமது பெருமை போய்விட்டது. நமது ஜனங்கள் வெருட்டப்பட்ட மனிதர்களைப்போல விழிக்கின்றனர். ஆங்கிலேயர்கள் இந்த தேசத்தில் "வெளிர்" நோய் வந்ததுபோல வந்திருக்கின்றனர்; எந்த விதத்திலும் அந்நோயை ஒழிக்கவேண்டும்.

பத்திராதிபர் :—உம்முடைய குழப்பத்தில் நாம் கவனித்துக் கொண்டு வந்தவைகளையெல்லம் மறந்து விட்

டீர். நாம் ஆங்கிலேயர்களைக் கொண்டுவந்தோம் ; நாம் அவர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் அவர்களின் நாகரீகத்தை அனுஷ்டிப்பதினாலேதான் அவர்கள் இங்கே இருப்பதற்கு சாத்தியமாகின்றது என்பதை நீர் ஏன் மறந்து விடுகின்றீர். அவர்களின் பேரில் இருக்கும் உம்முடைய கோபத்தை அவர்களின் நாகரீகத்தின் பேரில் வெருட்ட வேண்டுமென்று வைத்துக்கொள்ளுவோம்; அதை எப்படிச் செய்கிறது?

படிப்பவர் :—இதாலி செய்தது போலச் செய்கிறது. மாஸினி, கரிபால்டியால் முடிந்தகாரியம் நம்மாலும் ஆகும் அவர்கள் மிகப் பெரிய மனிதர்கள் என்பதை நீர் மறுக்கமுடியாது.

அத்தியாயம் 15

இதாலியும் இந்தியாவும்

பத்திராதிபர் :—நீர் இதாலியை உதாரணமாய்க் காட்டியது நன்று. மாஸினி மிகப் பெரிய மகான், கரிபால்டி சுத்தவீரன், (ஒருபெரியதளகர்த்தன்) இருவரும் வணங்கத்தக்கவர்கள் என்று அவர்கள் சரித்திரங்களினும் நாம்வெகுவாகக்கற்றுக்கொள்ளலாம். ஆனால் இதாலியின் நிலைமை இந்தியாவினின்றும் வித்தியாஸப்பட்டது. முதலிலே, மாஸினிக்கும் கரிபால்டிக்குமுள்ள வித்தியாஸம் கவனிக்கத்தக்கது. இதாலியைப்பற்றி மாஸினியின் ஆசை அப்பொழுதும் பலிக்கவில்லை; இன்னும் நிறைவேறவில்லை, ஒவ்வொரு மனிதனும் தன்னை அடக்கியாளக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று மனிதன் கட

மையைப்பற்றிய அவருடைய நூற்களில் மாஸினிகாட்டிய இந்த அபிப்பிராயத்தை கரிபால்டி ஒப்புக்கொள்ளவில்லே. கரிபால்டி ஆயுதங்களேக் கொடுத்தார். அவைகளே ஒவ்வொரு இதாலியனும் வாங்கிக் கொண்டான். இதாலியும் ஆஸ்டிரியாவும் ஒரே நாகரீகமுடையன; இந்தவிதத்தில் அவர்கள் பங்காளிகள். அது பதிலுக்குப்பதில் சங்கதி. இடாலி ஆஸ்திரியாவின்கொடுங்கோன்மையினின்றும் விடுதலேயடையமாத்திரம் கரிபால்டி வேண்டினூர். மந்திரி காவரின் தந்திரங்கள் இதாலிய சரித்திரத்தின் அந்த பாகத்துக்கு அபகீர்த்தி உண்டாக்கி விட்டன, முடிவு என்ன? இதாலியர் தங்கள் தேசத்தை ஆண்டு கொள்ளுகின்றனர், ஆகையால் இதாலியஜாதியார் சுகமாய் இருக்கின்றனர் என்று நீர் நம்பினுல், நீர் இருட்டில் தடவிக்கொண்டிருப்பீர். இடாலி விடுதலே அடையவில்லே யென்று மாஸினி தெளிவாகக் காண்பித்துவிட்டார். அந்த வார்த்தைக்கு விக்டர் எம்மானுவல் ஒரு அர்த்தம் கொடுத்தார்; மாஸினி வேறு அர்த்தம் கொடுத்தார். காவூர், எம்மானுவல், கரிபால்டி இவர்களின் எண்ணப்படி, இடாலி என்பது இடாலி தேசத்தரசனும் அவனேச் சேர்ந்தவர்களும் என்று பொருள் பட்டது. எம்மானுவல் கேவலம் அதன் வேலேக்காரன். மாஸினியின் இதாலி இன்னும் அடிமைஸ்தானத்தில் தங்கியிருக்கின்றது. தேசயுத்தம் என்று சொல்லுங்காலேயிற்கூட இரண்டு எதிரிமன்னர்களுக்குள், இதாலியா ஜனங்களே காலாட்படையாய்க் கொண்ட ஒரு சதுரங்க விளேயாட்டு. அந்த தேசத்தில் தொழிலாளிகள் இன்னும் சுகமடையவில்லே. ஆகையால் அவர்கள் காரணராய்க் கொ

லைசெய்து, கலகத்துக்குக் கிளம்பிவிடுகின்றனர். அவர்களைக் கலகம்செய்ய எப்பொழுதும் எதிர்பார்க்கலாம். ஆஸ்திரியத்துருப்புகள் சென்றபிறகு இதாலி என்ன நிஜமான இலாபத்தைப் பெற்றது. இலாபம் பேருக்கு மாத்திரம் தான். எந்த சீர்திருத்தங்களின் பொருட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ, அவைகள் இன்னும் கொடுக்கப்படவில்லை. பொதுவாய் ஜனங்களின் ஸ்திதி அப்பொழுது இருந்தது போலவேயிருக்கிறது. அத்தகைய நிலைமையை இந்தியாவிலும் கொண்டுவர நீர் இச்சைப்படவில்லை என்று நான் நம்புகிறேன். இந்தியாவின் ஏழைகள் சுகப்படவேண்டுமென்பதுதானே உமது எண்ணம். அதிகாரம் உம்முடைய கைக்கு வரவேண்டுமென்ற ஆசையில்லையே? அப்படியென்றால், நாம் ஒரே ஒரு சங்கதியைத்தான் யோஜிக்கவேண்டும்; ஏழைகளுக்கு எப்படி சுயராஜ்ஜியம் கிடைக்கும்? ஜனங்கள், அனேக இந்திய மன்னர்களின் அரசாட்சியின்கீழ் நசுக்கப்பட்டு வருகின்றனர் என்று நீர் ஒப்புக்கொள்ளுவீர். இந்திய அரசர்கள் இரக்கமின்றி ஜனங்களை நெறிக்கின்றனர். அவர்களுடைய கொடுங்கோன்மை ஆங்கிலேயர்களுடையதைவிட அதிகமாயிருக்கின்றது. இத்தகைய கொடுங்கோன்மையை நீர் இந்தியாவிலே வேண்டினால் நீரும் நானும் ஒருநாளும் ஒருமனப்படமுடியாது. ஆங்கிலேயர்கள் சென்ற உடனே, இந்திய மன்னர்களால் நமது ஜனங்கள் நசுக்குண்டு கிடப்பதை பார்க்கும்படி எனக்கு என் தேசபக்தி போதிக்கவில்லை. எனக்கு பலமிருப்பின் ஆங்கிலேயர்களின் கொடுமையை எதிர்ப்பதுபோலவே,

அவ்வளவு ஆத்திரத்துடன் இந்திய மன்னர்களின் கொடுமையையும் எதிர்ப்பேன். தேசபக்தி என்றால் பொது ஜனக்ஷேமம் என்று எனக்கும் பொருள்படுகின்றது; ஆங்கிலேயர்களின் மூலமாய் பொதுஜனக்ஷேமம் கிடைக்குமேயானால், நான் அவர்களுக்குத் தலைவணங்குவேன். இந்தியாவுக்கு உழைத்துக் கொடுமையை எதிர்த்து, இந்தியாவின் விடுதலைக்காக, ஆங்கிலேயன் தனது ஆயுளை அர்ப்பணம் செய்தால், அந்த ஆங்கிலேயனை இந்தியனாக வெண்ணி உபசரிப்பேன்.

மேலும் ஆயுதம் இருந்தாற்றான் இந்தியா இதாலியைப்போல சண்டையிடமுடியும். இந்தவிஷயத்தை நீர் சற்றுக்கூட கவனிக்கவில்லை. ஆங்கிலேயர்கள் மேன்மையாய் ஆயுதம் தரித்திருக்கின்றனர். அது சற்றேனும் என்னை பயமுறுத்தவில்லை? நாம் அவர்களோடு ஆயுதங்களைக்கொண்டு சண்டை செய்யவேண்டுமானால், இந்தியரில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆயுத பாணிகளாகவேண்டும் என்பது தெளிவு. இந்தச்சங்கதி முடியுமானால், அதற்கு எத்தனை வருஷங்கள்பிடிக்கும்? மேலும் இந்தியாவை இவ்வளவு பரிமாணத்தில் ஆயுதபாணியாக்குதல் அதை ஐரோப்பாவைப்போல் ஆக்குவதாகும். அப்பொழுது, இந்தியாவும் ஐரோப்பாவைப்போலொத்த பரிதாபநிலைக்கு வந்துவிடும். சுருக்கமாக இதற்கு இந்தியா ஐரோப்பிய நாகரீகத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று அர்த்தம். இதுதான் நாம் கோருவதானால் அந்த நாகரீகத்தில் நன்றாய்த் தேர்ச்சியடைந்தவர்களை நமக்குள் வைத்துக்கொள்ளுவது உத்தமமான வேலையாகும். அப்பொழுது நாம் சில உரிமைகளின்பொரு

ட்டு சண்டைபோடுவோம் ; கூடுமானவற்றை அடை வோம் ; அவ்விதமே நாம் நம் காலத்தை கழிப்போம். ஆனால் இந்தியர்கள் ஆயுதம் தரியார்கள் ; அவர்கள் அப்படிச்செய்யாததும் உத்தமமாகும்.

படிப்பவர் :—விஷயங்களை மிதமிஞ்சி எண்ணிக் கொள்ளுகின்றீர். எல்லோரும் ஆயுதம் தரிக்க வேண்டிய அவசியமில்லை. முதலிலே இரகஸியமாய் சில ஆங்கிலேய ர்களைக் கொன்று பயமுண்டாக்குவோம்; பிறகு ஆயு தம் தரித்த சிலர் பகிரங்கமாய்ச் சண்டை செய்வார்கள். இலக்ஷத்துக்குச் சற்றுகூடவோ, குறைவாகவோ மனி தர்களை இழக்க வேண்டியதாயிருக்கும் ; ஆனால் நமது நாட்டை நாம் திரும்பவும்பெறுவோம். நாம் கொள்ளைக் காரச் சண்டையிட்டு, ஆங்கிலேயர்களை முறியடிப்போம்.

பத்திராதிபர்:—அதாவது இந்த புண்ணிய பூமியாகிய பாரத பூமியை அசுத்தமாக்க விரும்புகின்றீர். கொலைசெ ய்தாவது இந்தியாவை விடுவிக்கவேண்டுமென்று எண் ணங்கொள்ள நீர் நடுங்கவில்லையா? நாம் செய்ய வேண்டு வது யாதெனில் நம்மைக்கொன்று கொள்ள வேண்டி யதுதான். பிறரைக் கொல்ல நினைப்பது பேடியின் எண் ணம். கொலைசெய்து யாரை விடுவிப்பீர் என்று எண் ணுகிறீர். ஏழை இந்தியர்கள் அதை விரும்பவில்லை. கேடுகெட்ட புதிய நாகரீகத்தினால் மயக்கங் கொண்ட வர்கள் இப்படி எண்ணுகிறார்கள். கொலைசெய்து அதி காரத்துக்கு வருபவர், இந்தியர்களுக்கு சுகம் உண்டா க்கமுடியாது. திங்கரா முதலியோருடைய செயல்களி னால் இந்தியா இலாபமடைந்தது என்று எண்ணுவோர் ஒரு பெரிய தப்பிதம் செய்கிறார்கள். திங்கரா தேசபக்

தர்; ஆனால் அவர் தேசபக்தி குருட்டுத்தனமானது. கெட்டவழியில் அவர் தேகத்தை அர்ப்பணம்செய்தார்; அதன் முடிவு கடைசியில் கேடாய்த்தான் முடியும்.

படிப்பவர் :—இந்தக்கொலைகளினாலே ஆங்கிலேயர்கள் திகிலடைந்தார்கள் என்றும், பயத்தினாலே மார்லி சீர்திருத்தங்கள் கொடுத்தார் என்றும் நீர் ஒப்புக்கொள்ளுவீர்.

பத்திராதிபர் :—ஆங்கிலேயர்கள் ஒரே சமயத்தில் கோழைத்தனமும் தைரியமும் உள்ள ஜாதியார்; வெடி மருந்து உபயோகப்படுத்தினால், அவர்கள் சீக்கிரம் பயந்துபோய் விடுகிறார்கள் என்று நான் நம்புகிறேன். பயத்தினாலே மார்லிப்பிரபு இந்த சீர்திருத்தங்களைக் கொடுத்திருக்கலாம்; ஆனால் பயத்தினால் கொடுக்கப்பட்டது, அந்த பயமிருக்கிற வரையில் மாத்திரம் தான் தங்கும்.

அத்தியாயம் 16

மிருகபலம்

படிப்பவர் :—பயத்தைக்கொண்டு பெற்றது பயமிருக்கிறவரையில் மாத்திரம்தான் தங்கும் என்பது ஒரு புதியகொள்கை. நிச்சயமாய்க் கொடுக்கப்பட்டது, திரும்பவும் பிடுங்கிக்கொள்ளப்பட மாட்டாதே?

பத்திராதிபர்:—அப்படியல்ல. கலகத்துக்குப்பின்னால், சமாதானம் உண்டாக்கும்பொருட்டு, 1857ஆம்வருஷத்திய விளம்பரம் செய்யப்பட்டது. சமாதானம் ஏற்பட்டு, ஜனங்கள் சாதுவானவுடனே, அந்த விளம்பரத்தின் ஸ்வரம் (தொனி) குறைந்துவிட்டது. தண்டிக்கப்படு

வேன் என்ற பயத்தினால் நான் திருடுவதை நிறுத்தி யிருந்தால், அந்த பயம் என்னை விட்டுவிட்டவுடனே, திரும்பவும் அந்த வேலையை ஆரம்பித்துக்கொள்ளு வேன். இது உலகத்தின் அனுபவம். பலத்தைக்கொ ண்டு காரியங்களைச் செய்விக்க நமக்கு மனிதர்கள் கிடைப்பார்கள் என்று நாம் எண்ணிக்கொண்டுவிட் டோம்; ஆகையால் பலத்தை உபயோகிக்கின்றோம்.

படிப்பவர்:—உமக்கே விரோதமாய் நீர் வாதம்செ ய்கின்றீரே? தங்கள் தேசத்தில் ஆங்கிலேயர்கள் அடை ந்த யாவையும் அவர்கள் மிருகபலம் உபயோகப்படுத் தினதால் அடைந்தார்கள் என்று உமக்குத்தெரியும். அவர்கள் அடைந்தது பயனற்றது என்று நீர் வாதித் திருப்பது எனக்குத்தெரியும்; ஆனால் அது என்னு டைய வாதத்தை பாதிக்காது. அவர்கள் பயனற்றவை களை வேண்டினார்கள்; அவர்கள் அவைகளை அடைந் தார்கள். அவர்கள் கோறினது நிறைவேறிற்று என் பது என்னுடையகக்ஷி, என்ன சாதனங்களை உபயோ கித்துக்கொண்டார்கள் என்பதில் என்ன பாதகம்? நமது நோக்கம் நல்லதாயிருக்கிறபடியால், துராகி ரதவழியினாலேயாவது நாம் ஏன் அதை அடையலா காது? வீட்டிலிருக்கிற திருடனுடன் ஸமாளிக்கவே ண்டினால், வழிகளையா தேடிக்கொண்டிருப்பேன்? எப் படியாவது அவனை வெளியே துரத்துவது என்னுடை யகடமை. மனுப்பண்ணிக்கொண்டு, இதுவரையில் நாம் ஒன்றும் அடைந்ததில்லை. இனிமேலும் அடையப் போவதில்லை என்று நீர் ஒப்புக்கொள்ளுவதாய்த் தோ ன்றுகிறது. நாம் ஏன் மிருகபலத்தை உபயோகப்படு

த்தி, அடையக்கூடாது? நாம் பெற்றதை வைத்துக் கொண்டிருக்க, வேண்டியளவு அதே பலத்தை உபயோகப்படுத்தி பயங்காட்டிக்கொண்டே வருகிறோம். ஒரு குழந்தை தன்காலைத் தீயில் விடாதபடி காத்துக் கொள்ள இந்தபயம் காட்டிக்கொண்டுவருவதில் குற்றமில்லையே? எப்படியேனும் நாம் கோறின முடிவை அடையவேண்டும்.

பத்திராதிபர் :—உம்முடைவாதம் மெச்சதத்தக்கது. இது அனேகரை மயக்கியிருக்கிறது. இதற்குமுன் இதேவிதம் நானும் வாதம் செய்திருக்கிறேன். இப்பொழுது எனக்கு அதிகம் தெரியுமென்று நினைக்கிறேன்; உம்முடைய மயக்கத்தைத் தெளியவைக்க முயல்கின்றேன். ஆங்கிலேயர்கள் தமது விருப்பங்களை மிருகபலமூலமாய் அடையப்பெற்றனர் என்ற காரணத்தைக்கொண்டு, நாமும் அதேபலத்தினால் நம்முடைய நோக்கங்களையும் பூர்த்திசெய்துகொள்ளலாம் என்ற வாதத்தை முதலில் கவனிப்போம். அவர்கள் மிருகபலத்தை உபயோகித்தார்கள் என்பதும் அதேவிதம்செய்ய நமக்கும் சாத்தியமாகும் என்பதும் உண்மைதான்; ஆனால் அப்படிச்செய்தால், அவர்கள் பெற்ற பலனைத்தான் நாமும் பெறுவோம். நமக்கு அது வேண்டாமென்று நீர் ஒப்புக்கொள்ளுவீர். காரணத்துக்கும், காரியத்துக்கும் சம்பந்தமில்லையென்று நீர் எண்ணுவது பெறும்தவறாகும். அந்தத்தவறினால், கடவுளின் பக்தர்கள் என்று கருதப்பட்ட மனிதர்கள்கூட பெருங்குற்றங்களைச் செய்திருக்கின்றனர். உம்முடைய வாதம், கெட்டகொடியை நட்டுவிட்டு அதினின்றும்

ரோஜாமலரை யடையலாம் என்றுரைப்பதுபோல விரு க்கிறது. நான் கடலைக் கடக்கவிரும்பினால், ஒரு கப் பலின் மூலமாய்த்தான் கடக்கமுடியும்; அதற்காக ஒரு வண்டியை உபயோகப்படுத்தினால், வண்டியும் நானும் பாதாளம் செல்லுவோம். கடவுள் எப்படியோ அப்ப டியே பக்தனும் என்ற முதுமொழி கவனிக்கத்தக்கது. அதன் அர்த்தத்தைக் கோணலாக்கிவிட்டு, மனிதர்கள் கெட்டுப்போய்விட்டார்கள். உபாயத்தை ஒரு வித் துக்கும், முடிவை ஒரு மரத்துக்கும் ஒப்பிடலாம். விதைக்கும் மரத்துக்கும் என்ன சம்பந்தமுண்டோ, அதே அழிக்கக்கூடாத சம்பந்தம், உபாயத்துக்கும் முடிவுக்கும் உளது. சைத்தானுக்கு முன்னே நமஸ் காரம்செய்ததால், கடவுள் வணக்கத்தினின்று வரும் பலனை நான் அடையமாட்டேன். "நான் கடவுளை வணங்கவேண்டும். சைத்தான் மூலமாய்ச் சென்றதி னால் தோஷமில்லை," என்று யாரேனும் சொன்னால், அது முழுமூடத்தனமாகும். நாம் விதைவிதைக்கிற படிதான், அறுவடைசெய்வோம். 1833ஆல் ஆங்கி லேயர்கள் துராக்கிரகத்தால், முன்னிலும் அதிகமான சீட்டுச் சுதந்தரம் அடைந்தனர். இராக்ஷத பலத்தை உபயோகப்படுத்தினதனாலே, தங்களுடைய கடமை களை நன்கு தெரிந்துகொண்டனர்? அவர்கள் சீட்டுச் சுதந்திரம் வேண்டினார்கள்; மிருகபலத்தை உபயோ கித்து அதை அடைந்தார்கள். கடமைசெய்ததன் பலனாக அடைந்த சுதந்திரங்கள்தான் உண்மையான வை. இந்தச்சுதந்திரங்களை அவர்கள்பெறவில்லை. ஆகை யால் இங்கிலாந்தில் ஒவ்வொருவரும் தன் பாத்தியங்

களில் இச்சைவைத்து அவைகளைக் கொண்டாடும் வேடிக்கை நம் கண்முன்னே நிற்கிறது; ஆனால் அங்கே ஒருவரும் தன் கடமையைப்பற்றி நினைப்பதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பாத்தியங்களைக் கொண்டாடுகிற இடத்தில், யார் அவைகளை யாருக்குக் கொடுப்பது? அவர்கள் ஒருநாளும் தங்கள் கடமையைச் செலுத்தவில்லை என்று நான் சொன்னதாக நீர் எடுத்துக் கொள்ளக்கூடாது; ஆனால் அவர்கள் தங்களின் சுதந்திரங்களுக்குத் தக்கவாறு கடமையைச் செலுத்துவதில்லை என்று நான் சொல்லுவதாக நீர் வைத்துக்கொள்ளலாம்; ஆகையால் அவர்கள் சுதந்தரங்களுக்கு வேண்டிய தகுதி சம்பாதித்துக் கொள்ளாததினால், அந்த உரிமைகள் யாவும் அவர்களுக்கு சுமைபோலாகிவிட்டன. அதாவது அவர்கள் அடைந்தது, அவர்கள் அனுஷ்டித்த உபாயங்களுக்குச் சரியான பலன். அவர்கள், முடிவுக்கேற்ற வழிகளை உபயோகப்படுத்திக் கொண்டார்கள். உம்முடைய கடிகாரத்தை நான் பிடுங்கிக்கொள்ள ஆசைப்பட்டால், கண்டிப்பாய் அதற்கு சண்டைபோடவேண்டும்; உம்முடைய கடிகாரத்தை வாங்க எண்ணினால், அதன் விலை கொடுக்கவேண்டும். தானமாக வேண்டினால், அதற்கு நான் கெஞ்சவேண்டும். நாம் உபயோகிக்கும் வழிகளுக்குத் தக்கபடி, கடிகாரம் திருட்டு சொத்தாகிவிடும், அல்லது என் சொந்தசொத்தாகும்; அல்லது தானமாகும். ஆகையால், நாம் மூன்றுவித வழிகளின்றும் மூன்றுவித பலன்களைக் காண்கிறோம். வழி ஒரு பொருட்டாகாது என்று இன்னும் நீர் சொல்லுவீரா?

திருடனை வெளியே துரத்தவேண்டுமென்ற உதார ணம் கூறினீரே, அதை எடுத்துக்கொள்ளுவோம். எந்த வழியினாலும் திருடனைத் துரத்தலாம் என்று நீர் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. திருடவந்தது என் தகப்பனாகில், நான் ஒருவித வழி உபயோகப்படுத்துவேன். சிநேகிதனாயின், ஒருவித வழி; அன்னியனாயின், இன்னொருவித வழி. வெள்ளைக்காரனாயிருந்தால், இந்தியத்திருடனிடம் உபயோகப்படுத்துவதைவிட வேறுவித வழியை உபயோகப்படுத்துவேன் என்று ஒருக்கால் நீர் சொல்லுவீர். பலஹீனனாயிருந்தால், சரிசமானமான பலமுள்ளவனிடம் உபயோகப்படுத்தும் வழியைவிட வேறு வகையாயிருக்கும். திருடன் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரைக்கும் ஆயுதபாணியாயிருந்தால், நான் சும்மா நின்றுவிடுவேன். தகப்பனிலிருந்து ஆயுதபாணிவரைக்கும், நமக்கு பலவித வழிகளிருக்கின்றன. திருடன் தகப்பனாயிருப்பினும் சரி, பலமுள்ள ஆயுதபாணியாயிருப்பினும் சரி, ஒருக்கால் தூங்குவதுபோல பாவனை செய்துகொண்டிருந்தாலுமிருப்பேன். இதற்குக்காரணம் யாதெனில், என் தகப்பனாரும் ஆயுதபாணியாயிருக்கலாம்; எந்த பலமாயிருப்பினும் சரி, அதற்கு உள்ளடங்கி, என் சொத்தைக் களவாட விட்டுவிடுவேன். என் தகப்பனாரின் ஆயுதபலம், பரிதாபங்கொண்டு என்னை அப்படிச் செய்துவிடும்; ஆயுதபாணியின் பலத்தினால் எனக்குக் கோபம்வரும்; நாங்கள் பகைவர்களாவோம். இது மிக விநோதமான நிலைமை. இந்த உதாரணங்களினின்றும், ஒவ்வொரு தடவையிலும் உபயோகிக்கவேண்

டிய உபாயங்களைப்பற்றி நமக்குள் ஒற்றுமை ஏற்படாமலிருக்கலாம். இந்தமாதிரி சங்கதிகளில் என்ன செய்யவேண்டும் என்பதை நான் தெளிவாகக் கண்டுகொண்டதுபோலத் தோன்றுகின்றது? ஆனால் வெடிமருந்து உம்மை பயமுறுத்தலாம்; ஆகையால் அதை உம்மிடம் சொல்லத் தயங்குகின்றேன். தற்போதைக்கு ஊஹிக்கும்படி உம்மை விட்டுவிடுகிறேன்; உம்மால் முடியாவிட்டால், ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொருவித வழியை நீர் உபயோகப்படுத்த வேண்டுமென்பது தெளிவு. வழி எவ்விதமிருப்பினும், அதைக்கொண்டு திருடனைத் துரத்த முடியாது என்று தெரிந்துகொண்டிருப்பீர். ஒவ்வொரு தடவைக்கும் தக்க உபாயத்தை நீர் தேடவேண்டும். நீர் இஷ்டப்பட்ட வழியாலே நீர் திருடனைத் துரத்துவது உமது கடமையல்ல என்பது விளங்கும்.

சற்று மேலே செல்லுவோம். அந்த ஆயுதம் தரித்த மனிதன் உம்முடைய சொத்தைத் திருடிவிட்டான். அந்த எண்ணத்தை மனதில் வைத்துக்கொள்ளுகிறீர், உமக்கு கோபம் பொங்குகிறது; உமக்காக அல்ல, உம்முடைய அயலார்களின் நன்மையின்பொருட்டு அந்தப் போக்கிரியைத் தண்டிக்க உத்தேசிக்கிறீர்; ஆயுதம் தரித்த அநேகரை நீர் சேர்த்துக்கொள்ளுகின்றீர்; பலரோடு தாக்கி அவன் வீட்டைப் பிடித்துக்கொள்ள விரும்புகின்றீர்; இது அவனுக்குத் தெரிகிறது. அவன் ஓடிவிடுகின்றான்; அவனுக்கும் கோபம்வருகின்றது. அவன் மற்றைய திருடர்களைச் சேர்த்துக்கொண்டு, பகலிலேயே கொள்ளையடிக்க வருவதாக உமக்கு

சேதி அனுப்புகின்றான். உமக்கு பலமிருக்கிறது, உமக்கு அவனிடம் பயமில்லை; அவன் வரவிற்கு நீர் தயாராயிருக்கின்றீர். இதன் மத்தியிலே, கொள்ளைக்காரன் உம்முடைய அயலார்களை வதைக்கின்றான். அவர்கள் உம்மிடம் முறையிடுகின்றனர். நீர் இவையெல்லாவற்றையும் அவர்களுக்காகத்தான் செய்துகொண்டிருக்கின்றீர் என்றும், உம்முடைய சொந்த சொத்துக்கள் திருட்டுப்போனாலும் பாதகமில்லை என்றும் நீர் பதில்சொல்லுகிறீர். கொள்ளைக்காரன் இதற்குமுன் அவர்களைத் தொந்திரை செய்ததில்லை என்றும், நீர் உம்முடைய விரோதத்தைக் காண்பித்தபிறகுதான் அவன் தன் கொள்ளைகளை ஆரம்பித்தான் என்றும் அவர்கள் பதில் அளிக்கின்றனர். நீர் இரண்டு தீயின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டவர் ஆவீர். நீர் அந்த ஏழைகளுக்கு முற்றிலும் இரங்குகின்றீர், அவர்கள் சொல்லுவதும் உண்மை. நீர் என்ன செய்வது? திருடனை அப்படியே விட்டு விட்டால், நீர் அவமானம் அடைவீர். பாதகமில்லை, வாருங்கள் என்னுடைய பணமெல்லாம் உங்களுடையது, நான் உங்களுக்கு ஆயுதங்கள் கொடுப்பேன்; அவைகளை உபயோகப் படுத்துவதற்கு உங்களுக்கு கற்றுக் கொடுப்பேன். அந்த அயோக்கியனை நீங்கள் உதைக்க வேண்டும். நீங்கள் அவனை சும்மாவிட்டு விடக்கூடாது என்று நீர் அந்த ஏழைகளுக்குச் சொல்லுகிறீர். இப்படிச் சண்டை வளர்ந்து கொண்டு வருகிறது. கொள்ளைக்காரர்கள் தொகையில் அதிகரிக்கின்றனர். உம்முடைய அயலார்கள் வேண்டுமென்றே அசௌகரியத்துக்கு தங்களை உள்ளாக்கிக் கொண்டார்கள்; கொள்

ளைக்காரன் பேரில் பழிவாங்க வேண்டுமென்றதின் பலனாக, உம்முடைய மனச்சக்தியைக் குலைத்துக்கொண்டீர். கொள்ளைக்கும், அடிக்கும் சதாபயப்பட்டுக் கொண்டு வருகிறீர். தைரியத்துக்குப் பதிலாக, பயம் உம்மைப் பற்றிக்கொண்டது. நீர் இதை பொறுத்து யோஜித்துப் பார்த்தால், நான் அதிகமாய் ஒன்றும் சொல்லவில்லை என்று தெரிந்து கொள்ளுவீர். இது ஒரு வழி. இப்பொழுது மற்றதைச் சோதிப்போம். இந்த ஆயுதம் தரித்த கொள்ளைக்காரனை உம்முடைய முட்டாள்தம்பியென்று வைத்துக்கொள்ளும்? தக்கசமயத்தில் அவனோடு வாதாட எண்ணுகின்றீர்; முடிவிலே உம்மைப்போலொத்த மனிதன் என்று முடித்துக் கொள்ளுகின்றீர். அவனைத் திருடத் தூண்டினது எது என்று உமக்குத் தெரியாது. ஆகையால், உம்மால் முடியுமான சமயத்தில், அவன் திருட்டு நோக்கத்தை ஒழித்துவிட நீர் தீர்மானித்துக் கொள்ளுகிறீர். இவ்விதம் நீர் உமக்குள்ளேயே வாதித்துக்கொண்டிருக்கையில், அந்த மனிதன் திருடுவதற்காக மறுபடியும் வருகின்றான். அவன் பேரில் கோபிப்பதற்கு பதிலாக, அவனிடம் இரக்கப்படுகின்றீர், இந்தத்திருட்டுவழக்கம் அவனுடைய ஒரு வியாதி என்று நீர் நினைத்துக்கொள்ளுகிறீர். இதற்குப் பிறகு, உம்முடைய கதவுகளையும் ஜன்னல் களையும் திறந்து வைத்து விடுகிறீர். உம்முடைய படுக்குமிடத்தை மாற்றிக்கொள்ளுகிறீர். அவன் கைக்கு அகப்படக்கூடிய இடத்தில் உம்முடைய சொத்துக்களை வைக்கிறீர். கொள்ளைக்காரன் மறுபடியும் வருகின்றான்; இதெல்லாம் அவனுக்குப் புதிதாகையால், குழப்பம் எய்துகின்றான்; இருந்தாலும் உம்மு

டைய வஸ்துக்களை அவன் எடுத்துக்கொண்டு போய் விடுகின்றான். அவன் மனது கலங்குகின்றது. அவன் உம்மைப்பற்றி கிராமத்தில் விசாரிக்கின்றான். உம்மு டைய தாராள அன்புவாய்ந்த சிந்தையைப் பற்றி கேள்வி ப்படுகின்றான்; அவன் அனுதாபப் படுகின்றான், உம்மு டைய மன்னிப்பை வேண்டி, உம்முடைய சாமான்களை திருப்பிக்கொண்டு வந்து கொடுத்து, திருட்டு வழக்கத் தையும் விட்டுவிடுகின்றான். அவன் உம்முடைய வேலைக் காரனாகின்றான்; நீர் அவனுக்கு கௌரவமுள்ள வேலை சம்பாதித்துக் கொடுக்கின்றீர். இது இரண்டாவது வழி. ஆகையால், வித்தியாஸமான வழிகளினாலே வித்தியாஸ மான பலன்கள் விளைகின்றனஎன்பதை நீர் பார்க்கின்றீர். எல்லா திருடர்களும் மேற் சொன்ன விதம் நடப்பார் கள் என்றும் எல்லோருக்கும் உம்மைப்போல இரக்கமும் பிரியமும் இருக்குமென்று கிரஹிக்க நான் விரும்பவி ல்லை. ஆனால், நியாயமான வழிகள் தான் நியாயமான பலன்களைத் தரும் என்றும் பெரும் பான்மையான தட வைகளில், இரக்கத்தினின்றும் எழும்சக்தி ஆயுதத் தின் பலத்தைவிட வெகுவாய் உயர்ந்தது என்றும் கா ண்பிக்க மாத்திரம் விரும்புகின்றேன். மிருகபலம் உப யோகப்படுத்துவதில் கேடு உண்டு. ஆனால் இரக்கத் தினால், ஒரு கேடுமில்லை.

இப்பொழுது மனுப்பண்ணிக் கொள்ளும் சங்கதி யை எடுத்துக் கொள்ளுவோம். பின்பலமில்லாத மனு பயனற்றது என்பது சச்சரவுக்கு இடமில்லாத சங் கதி. மனுக்களும் உபயோகமுள்ளவை. ஏனென்றால் அவைகளின் மூலமாய் ஜனங்கள் போதிக்கப் படுகின்ற

னர் என்று காலஞ்சென்ற ஜட்ஜி ரானடே சொல்லுவதுண்டு. அவைகள் ஜனங்களுக்கு தங்கள் நிலைமையைப் பற்றிய அறிவுண்டாக்கி, அதிகாரிகளை எச்சரிக்கின்றன. இந்த நோக்கத்தின் படிக்கு, அவைகள் முற்றிலும் பயனற்ற வையல்ல. ஒரு சமானஸ்தனுடைய மனு மரியாதையின் இலக்ஷணம்; அடிமையினிடமிருந்து வரும் மனு அவனுடைய அடிமைத்தனத்துக்கு அடையாளம். பின் பலமுள்ள மனு, சமானஸ்தனிடமிருந்து வரும் மனு, அவன் தேவையை மனு உருவத்தில் வரையும் பொழுது, அது அவன் மேன்மைக் குணத்துக்கு ருசுவாகும் இருவகைச் சக்திகள் மனுக்களுக்கு பின்பலமாயிருக்கலாம். நீர் இதைக் கொடுக்காவிட்டால் உம்மை நாங்கள் தொந்திரை செய்வோம் என்பது ஒரு வகை சக்தி. அது ஆயுதங்களின் வலிமை; அதன் கேடான பலன்களைப் பற்றி ஏற்கனவே நாம் விசாரித்திருக்கிறோம். இரண்டாவது வகை சக்தியை இவ்விதம் சொல்லலாம்: எங்களுடைய வேண்டுகோளுக்கு நீங்கள் இணங்காவிடில், இனி நாங்கள் உம்முடைய மனுதாரர்களாயிருக்கமாட்டோம், நாங்கள் ஆளப்படும் வரையில்தான், நீங்கள் எங்களை ஆளலாம், உங்களிடம் இனிமேல் எங்களுக்கு யாதொரு வேலையுமில்லை." இதிற் குறிப்பிட்ட சக்தியை சத்தியாக்கிரகமென்றும் அல்லது எல்லோரும் அறிந்த பெயரான சாத்வீக எதிர்ப்பு என்றும் அழைக்கலாம். இந்தசக்தி அழியக் கூடாதது. இதைப்பரிபூரணத்துடன் உபயோகிப்பவன் தன் நிலையை அறிந்தவனாவன். "ஒரு எதிரிடைமுப்பத்தாறு நோய்களுக்கு மாற்று" என்ற அர்த்தமுள்ள

பழமொழி நம்மிடமிருக்கிறது. சத்தியாக்கிரஹத்தின் முன்னே ஆயுதசக்தி வலிமையற்றது.

குழந்தை தன் காலைத்தீயில் விடுவதென்ற உமது கடைசி உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். அது உமக்கு ஸாகதமில்லை. உண்மையிலேயே, குழந்தைக்கு நீர் என்னசெய்கின்றீர்? தேகத்தில் வலிமைபெற்று உம்முடைய வலிமையினின்றும் மீறித் தீயில் புகுந்துவிடுகிறது என்று வைத்துக்கொண்டால், நீர் அதைத் தடுக்க முடியாது. உமக்கு முன்னே இரண்டுவழிகள் தானுண்டு —தீயினாற் சாகாமல் தடுக்கும் பொருட்டு நீர் தீயைக் கொல்லவேண்டும், அல்லது உம்முடைய உயிரை நீர் கொடுத்துவிடவேண்டும்; ஏனென்றால் உமது கண்ணின் முன்னிலையிலேயே அது சாவதைப்பார்க்க நீர் இஷ்டப்படமாட்டீர். நீர் அதைக் கொல்லமாட்டீர். நீர் ஹிருதயமுற்றும் இரங்காவிட்டால், குழந்தைக்கு முன்சென்று நீரே தீயில்விழ உம்மாலாகாது. ஆகையால், கதியில்லாமல், அதைத்தீயில் விழவிட்டு விடுகின்றீர். எப்படியோ, நீர் மிருகபலத்தை உபயோகப்படுத்துவதில்லை. முடியுமானால் குழந்தையைத் தீயில்விழாமல் பலாத்காரமாய் தடுக்கும் சக்தி மிருகபலமென்று (இருந்தாலும் அவ்வளவு உயர்ந்ததல்ல) கருதமாட்டீர் என்று எண்ணுகிறேன். அந்த சக்தி வேறு ஜாதி; அது யாது என்று நாம் அறிதல் வேண்டும்.

“குழந்தையைத் தடுப்பதனால், அதன் நலத்தையே நீர் தேடுகின்றீர்; அதன் நலத்தின்பொருட்டே நீர் அதிகாரம் செலுத்துகின்றீர்” என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளும், உம்முடைய உதாரணம் ஆங்கிலேயர்க

ளுக்குப் பொருந்தாது. மிருகபலத்தை உபயோகிக்கையில், முற்றிலும் உம்முடைய (அதாவது உம்முடையதேசத்தின்) நலத்தைக் கோருகின்றீர். இங்கே, இரக்கத்துக்காவது பிரியத்துக்காவது இடமில்லை. ஆங்கிலேயர்களின் செய்கைகள் கெட்டவையானதால், தீயைப் போலிருக்கின்றதென்றும், அறிவின்மையினுல் அவர்கள் செயல்களைச் செய்கின்றனரென்றும், ஆகையால் அவர்கள் குழந்தைகளின் ஸ்தானத்துக்கு இரங்கிவிட்டனரென்றும் இப்படிப்பட்ட குழந்தையை நீர் காப்பாற்ற வேண்டுமென்றும் நீர் சொன்னுல், யாரால் செய்யபட்டபோதிலும், நீர் அந்த தீச்செயல் செய்யப்படுவதற்கு முன்னமேயே சென்று, குழந்தை சங்கதியைப்போல, நீர் உம்மைச் சமர்ப்பணம் செய்து கொள்ளவேண்டியதுதான். இத்தகை அளவிலா இரக்கம் உமக்கு இருக்குமாகில், அதை நீர் நன்ருய் உபயோகப்படுத்தும் பொருட்டு கடவுளை வேண்ண்டிக்கொள்ளுகிறேன.

அத்தியாயம் 17

சாத்வீக எதிர்ப்ப

படிப்பவர்:—ஆத்மசக்தியால் அடைந்த வெற்றியைப் பற்றி ஏதேனும் சரித்திர ருசு இருக்கின்றதா? ஆத்மசக்தியால் உயர்ந்துபோன ஜாதியைப்பற்றியஉதாரணம் இருந்ததில்லை எனவே தோன்றுகிறது. தண்டனையில்லாமல் கெட்டவர்கள் தங்கள் தீச்செயல்களை நிறுத்த மாட்டார்கள் என்று இன்னும் நான் நினைக்கிறேன்.

பத்திராதிபர்:—தேகத்துக்கு அகம் மூலம்போல. இரக்கம் அல்லது பிரியம் மதத்துக்கு மூலகாரணம் என்றும் ஆகையால் நமக்கு உயிருள்ளவரையிலும் நாம் இரக்கத்தை விடக்கூடாது என்றும் கவி துளசிதாஸ் சொல்லியிருக்கிறார். இது சாஸ்திரானுசாரமான உண்மையென எனக்குத் தோன்றுகிறது. இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்காவதில் எனக்கு எவ்வளவு நம்பிக்கை உண்டோ, அவ்வளவு நம்பிக்கை இதில் எனக்கு உண்டு. அன்பின் சக்தி என்றாலும் ஆத்மசக்தி என்றாலும் ஒன்றுதான். அது வேலை செய்வதின் ருசு. நாம் ஒவ்வொரு விதத்திலும் பார்த்திருக்கிறோம். அந்த சக்தி இல்லாவிடின் ஜகமே நசித்துவிடும். ஆனால் நீர் சரித்திர ருசு கேட்கின்றீர். ஆகையால் சரித்திரம் என்பது என்னஎன்று நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அதற்குச் சரியான குஜராத்தி பதத்துக்கு, "என்னவோ நேர்ந்தது" என்று அர்த்தம். சரித்திரத்தின் ருசு அதுவாகில், யதேஷ்டமாய் ருசுக் கொடுக்கமுடியும். ஆனால் அதற்கு அரசர்கள், சக்கரவர்த்திகள் இவர்களின் செயல்கள் என்று அர்த்தமாகில், இத்தகைய சரித்திரத்தில் சாத்வீக எதிர்ப்பைப்பற்றி ருசு இருக்காது. ஈயச்சுரங்கத்தில் வெள்ளிப்பொடிகளை நீர் எதிர்பார்க்கலாகாது. நமக்குத் தெரிந்த அளவிலே, சரித்திரம் என்பது உலக யுத்தங்களின் ஒரு விருத்தாந்தம். சரித்திரம் அதாவது யுத்தங்கள் இல்லாத ஜாதி சுகமானஜாதி என்று ஆங்கிலேயர்களுக்குள் ஒரு பழமொழி யுண்டு. அரசர்கள் எப்படி விளையாடினார்கள், ஒருவருக்கொருவர் எவ்விதம்

விரோதிகளானார்கள். ஒருவரையொருவர் எப்படிக்கொன்றுகொண்டார்கள் என்பதெல்லாம் தவறாமல் சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது; இது மாத்திரமே உலகத்தில் நேர்ந்த சங்கதிகளாயின் அது ஏற்கனவே முடிவடைந்திருக்கும். ஜகத்தின் சரித்திரம் யுத்தங்களிலே ஆரம்பித்திருந்தால், இன்றைக்கு ஒருமனிதனாவது உயிருடன் இருக்கமுடியாது. சண்டைக்கு இழுக்கப்பட்ட ஜனங்கள் நாசமாயினர். உதாரணமாய், ஆஸ்திரேலியா வாசிகளில் ஒருவரேனும், உள்ளே நுழைந்தவர்களால் உயிரோடு வைக்கப்படவில்லை. இந்தச் சுதேச வாசிகள் தங்கள் தற்காப்பின் நிமித்தம் ஆத்ம சக்தியை பிரயோகம் செய்யவில்லை என்பதை கவனியும்; ஆஸ்திரேலியர்களுக்கும் அழிக்கப்பட்டவர்களின் கதியே கிடைக்கும் என்று அறிய அதிக அறிவு வேண்டியதில்லை. "கத்தியை உபயோகிப்பவன், கத்திக்கு இரையாவான்." நீச்சைத் தொழிலாகக்கொண்டவன் தண்ணீரிலேயே மரணமடைவான் என்பது நமது பழமொழி.

உலகத்தில் இத்தனைபேர்கள் இன்னும் உயிரோடு இருக்கும் பிரபாவத்தியினாலே, மிருக பலத்தினாலே உலகம் நிற்கவில்லை யென்றும் ஆத்மசக்தியினால் நிற்கிறதென்றும் தெரிகிறது. உலகத்தில் யுத்தங்கள் இருந்தபோதிலும் உலகத்தார் இன்னும் ஜீவித்திருக்கின்றனர் என்பதே, இந்த சக்தியின் வெற்றிக்கு ஆக்ஷேபிக்கக் கூடாத சாட்சியாகும்.

பதினாயிரக்கணக்கான ஜனங்கள் இந்த சக்தியின் தவறாத பலத்தினாலேதான் உயிருடனிருக்கிறார்கள். தங்கள் தினசரி ஆயுள்களில் அனேக குடும்பங்களிலு

ள்ள சிறிய சண்டைகள், இந்த சக்தியின்முன்னே மறை ந்து விடுகின்றன. நூற்றுக்கணக்கான ஜாதியார் சமா தானத்துடன் வாழ்கின்றனர். சரித்திரம் இந்த உண் மையை கவனிப்பதுமில்லை; அதனாலே முடியவும் முடியாது. ஆத்ம சக்தியின் நிச்சலமானவேலை தடை படுகின்ற இடங்களைத்தான் சரித்திரம் குறித்துக்கொண் டிருக்கும். இரண்டுசகோதரர்கள் சச்சரவு இட்டுக்கொ ள்ளுகின்றனர்; ஒருவனுக்கு அனுதாபமுண்டாகி தன் னிடம் மறைந்துநின்ற அன்பை மறுபடியும் கிளப்பிவிடு கிறான். அவர்கள் மறுபடியும் சமாதானத்துடன் வாழ ஆரம்பிக்கின்றனர்; ஒருவரும் இதைக் கவனிப்பதில்லை. ஆனால் அவ்விரு சகோதரர்களும், வக்கீல்கள் தலையிடுவ தனாலேயோ, வேறு எந்தக்காரணத்தினாலேயோ ஆயுத ங்களைஎடுத்துச் சண்டைசெய்தாலும்சரி, அல்லது வியா ஜ்ஜியத்துக்கு (இதுவும் ஒருவித மிருகபலக்காட்சி) ச்சென்றாலுஞ்சரி; அந்தநடவடிக்கைகளை எல்லாம் உடனே பத்திரிகைகளில் போடுவார்கள்; அயலார்கள் எல்லோரும் இவைகளைப்பற்றிப் பேசுவார்கள்; அனேக மாய் சரித்திரத்துக்குச் சென்றாலும் சென்றுவிடும். குடும்பங்களைப்பற்றியும் வர்க்கங்களைப்பற்றியும் எது உண்மையோ அது ஜாதியைப்பற்றியும் உண்மை. குடு ம்பங்களுக்கு ஒருசட்டமும், ஜாதிகளுக்கு வேருசட் டமும் இருக்கிறதென்று எண்ணுவதற்குக்காரணமில்லை. ஆதலால், பிரகிருதியின் போக்கினது தடையின் விருத் தாந்தமே சரித்திரமாகும். ஆத்மசக்தி சிருஷ்டியை அனு சரித்ததாதலால், சரித்திரத்தில் காணப்படவில்லை.

படிப்பவர்:—நீர் சொல்லுவதிலிருந்து, இவ்வித சா

த்வீக எதிர்ப்பைப்பற்றிய உதாரணங்கள் சரித்திரத்தில் காணமுடியாது என்பது தெளிவு. இந்த சாத்வீக எதிர்ப்பை முழுமையும் அறிந்து கொள்ளுவது அவசியமாகும். ஆகையால் இதை நீர் விஸ்தரித்துப் பேசினால் நலமாயிருக்கும்.

பத்திராதிபர்:—தன்னையே துன்புறுத்திக்கொள்ளுவதால் உரிமைகளை அடையும் வழிக்கு ஸாத்வீக எதிர்ப்பு என்றுபெயர். அது ஆயுதத்தால் எதிர்ப்பதற்கு எதிரிடை. என் மனசாட்சிக்கு விரோதமான விஷயத்தைச் செய்ய நான் மறுதளித்து விட்டால், நான் ஆத்மசக்தியை உபயோகப்படுத்தினவனாவேன். உதாரணமாக, அரசாங்கத்தார், என்னையும் சம்மந்தப் படுத்தக் கூடிய ஒரு சட்டத்தைச் செய்கின்றனர். அது எனக்குப்பிடிக்கவில்லை. துராகிரதச் செயல்களால், நான் அரசாங்காத்தாரை அந்தச்சட்டத்தை ரத்து செய்யும்படி செய்துவிட்டால், தேகபலம் என்று சொல்லப்படுவதை உபயோகப்படுத்தினவனாவேன். சட்டத்துக்குக் கீழ்ப் படியாமல், மீறினதற்கு தண்டனையைப் பெற்றுக்கொண்டால், நான் ஆத்மசக்தியை உபயோகப் படுத்துகிறேன், இதற்கு ஆத்மஸமர்ப்பணம் வேண்டும்.

ஆத்மத்தியாகம் பிறரைக் கொல்லுவதைவிட மிகுதியும் உயர்ந்தது என்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மேலும் இவ்விதசக்தி அநியாயக்காரியத்துக்கு உபயோகப் படுத்தினால், உபயோகப்படுத்தினவனுக்குத்தான் துன்பம். தன்னுடைய தவறுதல்களுக்காகப் பிறரை அவன் துன்பமடையும்படி செய்வதில்லை. பிறகு தவறு என்று தெரிந்த அனேக சங்கதிகளை இது வரை

யிலும் மனிதர்கள் செய்திருக்கிறார்கள். தான் ஒருவிதம், நினைக்கிறான் என்ற காரணத்தைக் கொண்டு, தான் முற்றிலும் சரியென்றாவது அல்லது ஒரு சங்கதி தவறு என்று சொல்லவாவது ஒருவனுக்கும் அதிகாரமில்லை; ஆனால் அது அவனது தீர்ந்த தீர்மானமாயிருக்குமளவும், அது தவறாகும். ஆகையால் தவறு என்று இவனுக்குத் தெரிந்ததைச் செய்யாமல், அதன் பலனை அனுபவிக்க வேண்டுவது சரியாகும். ஆத்மசக்தியின் உபயோகத்துக்கு இது சாவியாகும்.

படிப்பவர்:—ஆகையால் நீர் சட்டங்களைமதிக்க மாட்டீர்—இது சுத்தமான ராஜத்துரோகம். நாம் சட்டத்துக் கடங்கின ஜாதியாரென்று கருதப்பட்டு வருகின்றோம். அமித வாதிகளை விட முன்னே செல்லுகின்றீர். உண்டாக்கப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் சட்டங்கள் கெட்டவைகளாயின், சட்டம் செய்தவர்களை பலத்தை உபயோகப்படுத்தியாவது வெளியேதுறத்தவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

பத்திராதிபர்:—அவர்களைவிட அதிகமாகச் செல்லுகின்றேனோ இல்லையோ, அது எங்களிருவருக்கும் ஒரு பொருட்டாகாது. எதுசரியென்று கண்டுபிடித்து அதன் படி நடக்க வேண்டுகின்றோம். நாம் சட்டத்துக்குக் கட்டுப் பட்ட ஜாதி என்பதன் உண்மையான பொருள் யாதெனில் நாம் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொண்டவர்கள் என்பதே. சில சட்டங்கள் பிடிக்கா விட்டால் சட்டம் செய்தவர்களின் மண்டைகளை நாம் உடைப்பதில்லை; ஆனால் நாம் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் துன்பத்தை அனுபவிக்கின்றோம். நல்லவை யாயி

னும் கெட்டவை யாயினும் சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பது ஒரு விபரீதமான கொள்கை. முன்னுளில் இத்தகைய சங்கதி யொன்று மில்லை. ஜனங்கள் தங்களுக்குப் பிடிக்காத சட்டங்களை அவமதித்து, இவைகளுக்கு மீறி நடந்ததற்காக தண்டனைகளை அனுபவித்தனர். நமது மனச்சாட்சிக்கு விரோதமான சட்டங்களுக்குக் கீழ்படிந்தால், அது நம் ஆண்மைத்தனத்துக்கு மாறுகும். இத்தகைய உபதேசம் மதத்துக்கு விரோதமானது. அதற்கு அடிமைத்தனமென்று பெயர். ஸர்க்கார் நம்மை துணியில்லாமல் போகும்படி சட்டமேயிட்டால், அவ்விதம் நாம் செய்ய வேண்டுமா? நான் ஸத்தியாக்கிரகியாயிருந்தால், அவர்களுடைய சட்டத்துக்கும் எனக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை என்று சொல்லிவிடுவேன். எந்த இழிவான சட்டத்தையும் கவனிக்காத அளவு, நம்மையே மறந்து, அடிமைகளாகி விட்டோம்.

தன் ஆண்மைத்தனத்தை உணர்ந்து கடவுளுக்குமாத்திரம் பயப்படும் மனிதன், வேருெருவருக்கும் பயப்படான். மனிதன் செய்த சட்டங்கள் அவனைக் கட்டுப்படுத்தமாட்டா. அரசாங்கத்தாரும் இத்தகைய சங்கதியை நம்மிடமிருந்து எதிர் பார்க்கவில்லை. நீ இந்த இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறதில்லை; ஆனுல் "இதை நீ செய்யாவிட்டால், நாங்கள் உன்னைத் தண்டிப்போம்" என்று சொல்லுகிருர்கள். நாம் மிகவும் தாழ்வடைந்து விட்டோம்; ஆகையால் சட்டத்திற் சொல்லியபடி யெல்லாம் செய்வது நமது கடமை யென்றும் மதமென்றும் எண்ணிக் கொள்

ளுகிறேம். அநியாயமான சட்டங்களுக்குக் கீழ்படிதல் ஆண்மைத்தனமல்லவென்று மனிதன் உணர்ந்தானேயாகில், எந்த மனிதன் கொடுமையாலும் அவன் அடிமையாகான். இது தான் சுயராஜ்ஜியத்துக்குத் திறவுகோல். பெரும் பான்மையோரின் செயல் சிறு பான்மையோரைக் கட்டுப்படுத்தும் என்று எண்ணுவது அறிவின்மை; கடவுளுக்குச் சம்மதமில்லாத சங்கதி பெரும்பான்மை யோர்களின் செயல்கள் தவறுயிருந்ததையும் சிறு பான்மை யோரின் செயல்கள் சரியாயிருந்ததையும் ருசுப்படுத்துவதற்கு அனேக உதாரணங்கள் கூறலாம். பெரும்பான்மை யோருக்கு விரோதமாய் சிலர் எத்தனம் செய்ததன் காரணமாக சீர் திருத்தங்கள் வந்திருக்கின்றன. கொள்ளைக்காரர்கள் கூட்டத்தில் கொள்ளையைப்பற்றிய அறிவு அவசியமானல், ஒரு பக்தன் அந்த நிபந்தனைக்கு உட்படவேண்டுமா? அநியாயமான சட்டங்களுக்கு மனிதர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்ற அறிவின்மை இருக்குமளவும், அடிமைத்தனமும் இருக்கும். சத்தியாக்கிரகிதான் இந்த அறிவின்மையை ஒழிக்கலாம்.

தேகவலிமையையும் வெடிமருந்தையும் உபயோகப் படுத்துதல் ஸத்தியாக்கிரஹத்துக்கு விரோதமானது. ஏனென்றல் நாம் விரும்பும், ஆனல் அவன் விரும்பாத சக்தியை நமது பகைவன் மேல் உபயோகப் படுத்தவேண்டுகின்றேம் என்று அதற்கு அர்த்தம். இவ்வித சக்தி உபயோகப் படுத்துதல் நியாய மெனில், அவனுக்கும் அவ்வித சக்தியை நம்மிடம் பிரயோகிக்க பாத்தியமுண்டு. ஆகையால் நாம் ஒரு நாளும் ஒரு மனப்படமுடி

யாது. ஏந்திரத்தைச் சுற்றிச் சக்கரமிடும் குருட்டு குதிரையைப்போல், நாம் முன்னே சென்றுகொண்டிருக்கிறோம் என்று வீணாக நாம் எண்ணிக்கொண்டிருக்கலாம். மனச்சாட்சிக்கு விரோதமான சட்டங்களுக்குக் கீழ்ப்படியத் தாங்கள் கட்டுப்பட்டவர்களல்ல என்று நம்புகிறவர்களுக்கு, சத்தியாக்கிரக மருந்துதான் உண்டு. வேறு எந்தவழியும் நாசத்தை யுண்டாக்கும்.

படிப்பவர் :—ஸத்தியாக்கிரகம் பல ஹீனர்களுக்கேற்ற ஆயுதமென்றும், பலமடைந்து விட்டால், அவர்கள் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளலாம் என்றும் நீர் சொன்னதினின்றும் நான் ஊகிக்கிறேன்.

பத்திராதிபர் :—இது சுத்தத்தவறு. சத்தியாக்கிரகம் அதாவது ஆத்ம சக்தி ஒப்பற்றது. அது ஆயுதபலத்திற்கு உயர்ந்தது. அப்படியிருக்க, அதை பலஹீனருடைய ஆயுதம் என்று எப்படி எண்ணலாம். சத்தியாக்கிரகிக்கு வேண்டிய தைரியம், "தேகவலிமை மாத்திரம்" எல்லா மனிதர்களுக்கும் தேகவலிமை இருக்காது. தனக்குச் சரி என்று தோன்றாத சட்டத்துக்கு ஒரு பயங்காளி கீழ்ப்படியாமலிருக்க முடியும் என்று நீர் நம்புகின்றீரா? அமிதவாதிகள், மிருகபலத்துக்குப் பரிந்து பேசுபவர்கள் என்று கருதப்படுகின்றனர். அப்படியானால் சட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று ஏன் அவர்கள் பேசுகின்றனர். அவர்களைக் குற்றங்கூறவில்லை. அவர்கள் வேறொன்றும் சொல்லமுடியாது. ஆங்கிலேயர்களைத் துறத்திவிட்டு அவர்களே அரசாளுகையில், அவர்களுடைய சட்டங்களுக்கு நீரும் நானும் கீழ்ப்படியவேண்டும் என்பார்கள். அது அவர்களின் முறை

க்கு ஒற்றதாகும். பீரங்கியின் வாயில்வைத்து சுட்டெறிந்தாலும், மனச்சான்றுக்கு விரோதமான சட்டத்துக்குக் கீழ்படியமாட்டேன் என்று ஒரு சத்தியாக்கிரஹி சொல்லுவான்.

நீர் என்ன நினைக்கிறீர்? எதற்கு தைரியம் வேண்டியிருக்கிறது. பீரங்கியின் பின்னே நின்று எட்ட இருப்பவர்களைக் கொல்லுவதிலா, அல்லது புன்சிரிப்புள்ள முகத்துடன் பீரங்கியின்முன்னே நின்று கொல்லப்படுவதிலா? எவன் சுத்தவீரன்? சாவை எப்போதும் தனது ஆத்ம நண்பனைக் கருதுபவனா அல்லது பிறர் சாவை தன் கைக்குள் வைத்துக்கொண்டிருப்பவனா? தைரியமும் ஆண்மைத்தனமுமற்ற மனிதன் ஒருபோதும் சத்தியாக்கிரஹியாய் இருத்தல் முடியாது என்பதை நம்பும்.

இதைமாத்திரம் நான் ஒப்புக்கொள்ளுவேன்; தேகத்தில் வலிமையற்றவனும் இந்த எதிர்ப்பை கைக்கொள்ளமுடியும். ஒரு மனிதன் கைக்கொள்ளலாம்; இலக்ஷக்கணக்கான மனிதர்களும் கைக்கொள்ளலாம். ஆண்மக்களும் பெண்மக்களும் ஸத்தியாக்கிரஹிகளாகலாம். அதற்குச் சேனையின் பயிற்சி வேண்டியதில்லை; அதற்காக, கைக்குத்துவேலை பழக்கிக்கொள்ளவேண்டாம். மனதை அடக்கியாளுதல் ஒன்றே அவசியமானது; அதை அடையப்பெற்றால், மனிதன் காட்டுராஜாவைப்போல சுயேச்சையுள்ளவனாகின்றான்; அவனுடைய அன்பான பார்வை, விரோதியை வதக்கிவிடும்.

சாத்வீக எதிர்ப்புக் கத்திக்குப் பக்கங்கள் பல உண்டு. அதை எந்தவிதமாயும் உபயோகப்படுத்தலாம். அது உபயோகப்படுத்துகிறவனையும் வாழ்த்தும்; யாரு

க்கு விரோதமாய் உபயோகப்படுத்தப் படுகின்றதோ, அவனுக்கும் அனுக்கிரகம்செய்யும். இரத்தம் ஒரு துளி சிந்தாமல், வெகுதூரம் செல்லக்கூடிய பலன்களை உண்டாக்கும். அது துருப்பிடிக்காது, அதைத் திருடமுடியாது, ஸத்தியாக்கிரஹிகளுக்குள் போட்டி, சோர்வை உண்டாக்காது. சத்தியாக்கிரகக் கத்திக்கு உறை வேண்டுவதில்லை. இத்தகைய ஆயுதத்தை பலஹீனருடைய ஆயுதமென்று நீர் எண்ணினது விந்தையே.

படிப்பவர்:—ஸாத்வீக எதிர்ப்பு இந்தியாவுக்கு மாத்திரமாயுள்ள ஒரு விசேஷம் என்று நீர் சொல்லியிருக்கிறீர். பீரங்கிகளை இந்தியாவில் உபயோகப்படுத்தினதேயில்லையா ?

பத்திராதிபர் :—இந்தியாவென்றால் அதனுடைய சில மன்னர்கள் என்று நீர் எண்ணிவிட்டீர்போலும். ஆனால் அதன் ஏழைக்குடிகள் என்று எனக்கு அர்த்தம்; அந்த ஏழைகளின்பேரிலேதான், இந்திய மன்னரும் நாமும் நமது வாழ்வுக்கு சார்ந்திருக்கின்றோம்.

மன்னர்கள் அரசர்க்குரிய ஆயுதங்களை எப்போதும் உபயோகப்படுத்துவார்கள். மிருகபலம் உபயோகப்படுத்துவது அவர்களுடன் கூட வளர்ந்தது. அவர்கள் அதிகாரம் செலுத்த வேண்டுகின்றனர். ஆனால் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களுக்கு துப்பாக்கிகள் வேண்டியதில்லை ; உலகத்தில் பெரும்பான்மையோர் அவர்களேயாவர். அவர்கள் “ தேகவலிமை ” யையாவது அல்லது ஆத்ம சக்தியையாவது கற்றுக்கொள்ளவேண்டும். “ தேகவலிமை ” யைக் கற்றுக் கொண்டால், ஆள்பவரும் ஆளப்படுகிறவர்களும்,

அனேகவிதப்பைத்தியம் கொண்டவர்களைப்போல வாகி விடுகிறார்கள். ஆனால் ஆத்மசக்தியைக் கற்றுக்கொண்டால், ஆள்பவர்களின் கட்டளைகள் தங்கள் கத்திகளின் முனைக்கப்பால் செல்லுவதில்லை; ஏனென்றால் ஆண்மையுள்ள மனிதர்கள் அநியாயக் கட்டளைகளை அவமதிக்கின்றனர். குடியானவர்கள் கத்தியினால் ஒருபோதும் அடக்கப்பட்டதில்லை; ஜயிக்கப்படப்போவதுமில்லை. உலகத்தின்உபயோகம் அவர்களுக்குத் தெரியாது; பிறர் அதை உபயோகப்படுத்துவதனால் அவர்கள் பயங் கொள்ளுவதுமில்லை, மரணத்தைத் தன் தலையணையாகக் கொண்ட ஜாதியே பெருமைவாய்ந்தது. சாவுக்கஞ்சாதவர்களுக்கு ஒரு பயமுமில்லை. மிருகபலத்தின் மயக்கத்திலிருப்பவர்களுக்கு, இது அதிகமாய்ச் சொல்லப்பட்ட வார்த்தையன்று. இந்தியாவிலே ஜனங்கள், ஆயுளின் எல்லா அம்சங்களிலும், சத்தியாக்கிருகத்தை உபயோகித்து வந்தனர் என்பது உண்மை. நமக்கு அதிருப்தி உண்டாக்கிவிட்டால், நம்மை ஆள்பவர்களுடன் கூட்டுறவு இல்லை. இதுதான் ஸாத்வீக எதிர்ப்பு.

ஒரு சிறிய சமஸ்தானத்தில், ஒரு அரசனுடைய கட்டளையால் ஜனங்களுக்குக் கோபம் வந்தவிஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. ஜனங்கள் கிராமத்தைக் காலிசெய்ய ஆரம்பித்தார்கள்; அரசன் நடுங்கிப்போய், குடிகளின் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தன் உத்தரவை ரத்து செய்துவிட்டான். இந்தியாவிலே இத்தகைய உதாரணங்கள் அனேகம் காணலாம். ஸத்தியாக்கிரஹம் ஜனங்களின் மூலபலமாயிருக்கிற இடத்

திலேதான் சுயராஜ்ஜியம் சாத்தியமாகும். வேறு எந்த ஆட்சியும் அன்னிய ஆட்சி.

படிப்பவர் :—தேகத்தைப் பயிற்சி செய்யவேண்டியது அவசியமேயில்லை யென்று நீர் சொல்லுகின்றீர் ?

பத்திராதிபர் :—அப்படிப்பட்ட சங்கதியொன்றும் நான் சொல்லமாட்டேன். தேகப்பயிற்சியிருந்தால் ஒழிய, ஸத்தியாக்கிரஹியாய் இருத்தல் கஷ்டம். அதிகக்கொழுப்பினுல் பலஹீனமடைந்த தேகத்தில் வசிக்கும் மனதும் பலமற்றதுதான், மனவுறுதி யில்லாதவிடத்து, ஆத்மசக்திபிருக்காது. குழந்தைக் கலியாணங்களையும் சுகவாழ்வையும் ஒழித்துவிட்டு, நம்முடைய தேகத்தை விருத்தி செய்துகொள்ளவேண்டும். உடைந்துபோன தேகத்தையுடைய ஒருவனை பீரங்கி வாயின் முன்னே நான் போகச்சொன்னுல், என்னைப்பார்த்து எல்லோரும் சிரிப்பார்கள்.

படிப்பவர் :—நீர் சொல்லுவதிலிருந்து, சத்தியாக்கிரஹியாவது ஒரு சிறிய காரியமல்லபோலத் தோன்றுகிறது ; அப்படியாயின், ஒருவன் எப்படி ஸத்தியாக்கிரஹியாகலாம் என்று தெளிவாகச் சொல்லவேண்டுகின்றேன்.

பத்திராதிபர் :—ஸத்தியாக்கிரகியாவது எளிது ; ஆனுலும் கொஞ்சம்கஷ்டம். 14 வயதுள்ள ஒரு பையன் ஸத்தியாக்கிரஹியானது எனக்குத் தெரியும். நோயாளிகளும் அப்படியானது எனக்குத் தெரியும். தேகவலிமையுள்ள சுகத்திலிருக்கிற ஜனங்கள் ஸத்தியாக்கிரஹிகளாக முடியாததும் தெரியும். தேசத்

தொண்டின் நிமித்தம் ஸத்தியாக்கிரஹிகளாக விரும்பு வோருக்கு பரிபூர்ண பரிசுத்த ஹிருதயம் இருத்தல் வேண்டும்; அவர்கள் ஏழ்மை பூணவேண்டும் ; உண்மை யைப் பின்பற்றவேண்டும் ; பயமின்மையை வளர்த்துக் கொள்ளல்வேண்டும்.

பரிசுத்தம் மிக முக்கியமான சாதனங்களில் ஒன்று ; அதில்லாமல் மனது, வேண்டுமென்ற உறுதி பெறுவதி ல்லை. பரிசுத்தமற்ற ஒரு மனிதன் தாதுவையிழந்து, ஆண்மைத்தனம் குறைந்து பயங்காளி யாகின்றான். காமாதி களால் பீடிக்கப்பட்ட மனதுள்ள மனிதனால் பெரு முயற்சிகள் முடியாது. இதை அனேக உதா ரணங்களால் ருசுப்படுத்தலாம். எப்படி என்றால் ஒரு கலியாணமானவன் என்னசெய்கிறது என்பது இயற்கையாய்ப் பிறக்கிற கேள்வி. இருந்தாலும் இந்தக் கேள்வி பிறக்கவேண்டியதில்லை. ஸ்திரீ புருஷர்கள் காம சாந்தி செய்துகொண்ட காலையிலும், அது மிருகத்தன் மையுள்ள சுகந்தான். இது, குலம் நீடிக்கச் செய்வதற் கல்லாமல், வேறு விஷய இன்பத்துக்காகக் கூடாது. ஆனால் ஒரு சத்தியாக்கிரஹி அந்தக் குறைந்த சுகத் தையும் ஒழித்துவிடவேண்டும் ; ஏனென்றால் அவ னுக்கு மக்கட்பேருக்குப் பற்று இருக்காது. ஆகை யால் கலியாணஞ் செய்துகொண்டவனும் பரிசுத்த மாயிருக்கலாம். இந்தவிஷயத்தை விரித்துரைக்க முடி யாது. அனேக கேள்விகள் பிறக்கின்றன—ஒருவன் தன் மனைவியை எவ்விதம் தன்னுடன் கொண்டு போகமுடியும்? அவளுடைய உரிமைகள் என்ன? இதை யொத்த பல கேள்விகள். இன்னும் பெரியகாரியத்தில்

தலையிட்டுக்கொள்ள விரும்புவர்கள் இந்தக் குழப்பத்தினின்றும் வழி தேடவேண்டும்.

பரிசுத்தம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் ஏழ்மைத்தனம். பணத்தாசையும் ஸாத்வீக எதிர்ப்பும் ஒன்றுசேர்ந்து போகமுடியாது. பணமுடையவர்கள் அதை எறிந்துவிட அவசியமில்லை; ஆனால் அதைப்பற்றி அகந்தை யற்றவர்களாயிருத்தல் வேண்டும். சத்தியாக்கிரஹத்தை விட்டு விடுவதைக் காட்டிலும் தங்கள் பொருள் முழுவதையும் அவர்கள் இழக்கத் தயாராயிருக்கவேண்டும்.

நம்முடைய பேச்சின் மத்தியிலே ஸத்தியாக்கிரஹத்தை உண்மையின் சக்தி என்றும் சொன்னேன். என்ன நஷ்டம் வந்த போதிலும், உண்மையைக் கண்டிப்பாய் பின்பற்றவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொல்லலாமா கூடாதா என்ற வாதம் உண்டாகின்றது; ஆனால் பொய் சொல்லுவது நியாயம் என்று சொல்ல இஷ்டப் பட்டவர்களுக்குத் தான் இந்தக் கேள்விகள் தோன்றும். ஒவ்வொரு தடவையிலும் உண்மை சொல்ல விரும்புவோருக்கு இந்த மனக் கலக்கம் (ஸந்தேகம்) தோன்றுவதில்லை, அந்தஸ்திதிக்குவரும், ஒரு தவறான நிலையினின்றும் அவர்களுக்கு விமோசன முண்டு.

தைரியமில்லாமல், ஸத்தியாக்கிரகம் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. சொத்துக்களைப் பற்றியோ தவறான கௌரவத்தைக்கொண்டோ, தங்கள் பந்துக்களைப்பற்றியோ, அரசாங்கத்தினாலோ, தேகப்பழுதினாலோ, அல்லது சாவைக் கொண்டோ, அருவருக்கும்

பயத்தினின்றும் விடுபட்டவர்கள் தான் ஸத்தியாக்கிர ஹத்தைப் பின்பற்ற முடியும்.

அவைகள் கடின முள்ளவை என்று எண்ணங் கொண்டு இந்த அனுஷ்டானங்களை விடுத்தலாகாது. நிஷ்காரணமாய் வரக்கூடிய கஷ்டங்களையும் துன்பங் களையும் மனிதன் தாங்கக்கூடிய அளவு அவனுக்கு மனவுறுதி இயற்கையிலேயே இருக்கின்றது. தேச ஊழி யம் செய்ய இஷ்டப் படாதவர்களுக்கும் இந்தக் குணங் கள் இருப்பது நலம். ஆயுதங்களை உபயோகிக்கப் பழக் கிக்கொள்ளுபவர்களுக்கும் ஏறக்குறைய இந்தக் குணங் களும் வேண்டு மென்பதில் ஒருவரும் தப்பிதம் செய்ய வேண்டியதில்லை. இச்சைப்பட்ட மாத்திரத்தில் ஒரு வனும் வீரனுகி விடுவதில்லை. வீரனுக விரும்புபவன் பரி சுத்தனுயிருக்க வேண்டும்; ஏழ்மை தனது பங்கு என்று திருப்தி யடையவேண்டும். தைரியமில்லாத வீரனை நினைக்கக்கூட முடியாது. அவன் உண்மைபேச வேண்டுவதில்லை என்று எண்ணக்கூடும்; ஆனுல் பயனின் கூட உண்மையும் வரும் ஒருவன் நிஜத்தை விடுத்தானு கில், அவன் எதற்கோ பயந்து அவ்விதம் செய்கின்றுன். ஆகையால் மேற் சொன்ன நான்கு குணங்களும் ஒருவ ரையும் பயமுறுத்த வேண்டியதில்லை. ஸத்தியாக்கிரஹி க்கு வேண்டாத இன்னுமனேக உபயோகமற்ற குணங் கள் "தேகவலிமை" மனிதனுக்கு வேண்டுமென்பது இங்கு கவனிக்கதக்கது. ஒரு ராணுவக்காரனுக்கு வேண் டிய மேல் முயற்ச்சி யெல்லாம் அவனுடைய தைரிய க்குறைவினுல் என்று நீர் தெரிந்து கொள்வீர். அவன் தைரிய உரு எனின், அந்த நிமிஷமே கத்தி அவன்

கையினின்றும் நழுவிவிடும். அதனுடைய ஆதரவு அவனுக்கு வேண்டாம். பகைமையினின்றும் விடுபவனுக்குக் கத்தி வேண்டாம். தடிதாங்கிய ஒரு மனிதன் சிங்கத்தின் முன்னேவர, உடனே அவன் தற்காப்பின் நிமித்தம் தன் ஆயுதத்தை உயர்த்தினான். தன்னிடம் தடிகூட இல்லாத பொழுது, அவன் தைரியத்தைப்பற்றிப் பிதற்றிக் கொண்டிருந்ததாகக் கண்டு கொண்டான். உடனே அவன் தடியைக் கீழே எறிந்தான்; அவன் பயத்தினின்றும் விடுபட்டான்.

அத்தியாயம் 18

கல்வி

படிப்பவர் :—நமது ஆராய்ச்சி முழுதிலும் நீர், கல்வியின் அவசியத்தை ருசுப்படுத்தவில்லையே; கல்வி நமக்கு இல்லாமையைப் பற்றி நாம் எப்பொழுதும் முறையிடுகின்றோம். நம் தேசத்தில் கட்டாயப் படிப்பைப் பற்றிய ஒரு இயக்கத்தை நாம் காண்கின்றோம். கெய்க்கவார் மகாராஜா தன் ராஜ்ஜியத்தில் கட்டாயக்கல்வி ஏற்படுத்தியுள்ளார். எல்லோரும் அதையே நோக்கிக்கொண்டிருக்கின்றனர். அதற்காக நாம் அந்த மகாராஜாவை வாழ்த்துகின்றோம். அப்படியானால், இந்த முயற்சியெல்லாம் பயனற்றதா ?

பத்திராதிபர் :—நமது நாகரீகம் மேன்மையுற்றது என்று நாம் கருதினால், நீர் கூறிய முயற்சியின் பெரும் பாகம் பயனற்றதென்று நான் வருத்தத்துடன் சொல்லுகிறேன். இந்த முயற்சியும், உழைத்துக்கொண்டு வரும்

மகாராஜாவுடையவும், மற்றுமுள்ள மேன்மையுள்ள தலைவர்களுடையவும் ஹிருதயம் சுத்தமே. ஆகையால் அவர்கள் நம்முடைய ஸ்துதிக்குத் தகுதியுடையவர்களே. ஆனால் அவர்களின் முயற்சியினின்றும் எழும் பலனை நம்மிடத்திலிருந்து நாம் மறைத்துக்கொள்ள முடியாது.

கல்வியின் அர்த்தம் யாது? அது எழுத்துக்களின் அறிவு என்று பொருள்படின் அது கருவியாகும்; ஒரு கருவியை நல்ல வழியிலும் உபயோகப்படுத்தலாம், தீயவழியிலும் உபயோகப் படுத்தலாம். நோயாளியைக் குணப்படுத்தக் கூடிய கத்தியைக் கொண்டே அவன் உயிரையும் வாங்கிவிடலாம்; அப்படியே எழுத்தின் அறிவும் உபயோகமாகும். அனேகர் அதைத்தீய வழியில் உபயோகிக்கின்றதை நாம் நிதமும் பார்க்கின்றோம்; ஒரு சிலரே அதைநல் வழியில் உபயோகிக்கின்றனர்; இது சரியான வாக்குமூலமாயின், அதினின்றும் நன்மையை விட அதிகத்தீமை விளைந்திருக்கிறது என்று ருசுப்படுத்தி விட்டோம்.

கல்வியின் சாதாரண அர்த்தம் எழுத்தின் அறிவு. சிறுவர்களுக்குஎழுதப், படிக்க, கணக்குப்போடக்கற்பிப்பது பிரதமப்படிப்பு ஆகும். ஒரு குடியானவன் யோக்கியதையுடன் தன் வயிறுவளர்க்கிறான். அவனுக்கு உலகத்தைப் பற்றிய சாமானிய அனுபவமுண்டு. தன் தாய் தந்தையர்கள், மனைவி, மக்கள் கிராமத்தார்களிடம், தான் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது அவனுக்கு சாதாரணமாய்த் தெரியும்; நீதி நியாங்கள் அவனுக்குத் தெரியும்; அவைகளை அவன் அனுஷ்டிக்கின்றான், ஆனால் அவனுக்குத் தன் பெயர் எழுதத்தெரியாது. அவனுக்கு

எழுதப்படிக்கச் சொல்லிக்கொடுத்ததனால் நீர் அவனை என்னசெய்ய உத்தேசிக்கின்றீர். அவனுடைய சுகத்துக்கு ஒருதுளி அதிகம் சேர்ப்பீரா? அல்லது அவனுடைய குடிசையிலும், நிலைமையிலும் அவன் அதிருப்தி கொள்ளும்படிசெய்வது உமது உத்தேசமா? அப்படிச் செய்ய எண்ணங்கொண்டாலும், இத்தகைய படிப்பு அவனுக்கு வேண்டியதில்லை. மேல்நாட்டு எண்ண வெள்ளப்பெருக்கால் தள்ளப்பட்டு, இலாப நஷ்டங்களைக் கவனியாமல் நாம் ஜனங்களுக்கு இவ்வகைப் படிப்புக் கொடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்து விடுகிறோம்.

இப்பொழுது மேல் படிப்பை எடுத்துக்கொள்ளுவோம். நான், பூகோள சாஸ்திரம், வானசாஸ்திரம், பீஜ கணிதம், க்ஷேத்திரகணிதம், முதலியன கற்றுக் கொண்டேன். அதனால் பயன் என்ன? எனக்காவது என் பக்கத்திலிருப்பவர்களுக்காவது நான் எவ்விதம் பயன் பட்டேன்? இவைகளை நான் ஏன் கற்றுக் கொண்டேன். ஹக்ஸிலி சாஸ்திரி கல்வியை இவ்விதம் நிர்த்தாரணம் செய்திருக்கின்றனர் :—ஒருவருக்கு கீழ்குறிக்கும் இலக்ஷணங்கள் இருப்பின் அவர் ஸர்வ விஷய ஞானமடைந்ததாக நான் எண்ணுவேன்—பாலியப் பயிற்சியினின்றும், ஒருவன் தேகம் அவனுடைய மனதின் படிக்கு நடக்கத்தயாராயிருக்கவேண்டும். ஒரு இயந்திரத்தைப்போல எல்லாவேலையையும் சந்தோஷத்துடனும் எளிதிலும்செய்யவேண்டும்—அவன் புத்தி, தெளிவாயும், பக்ஷபாதமில்லாமலும், சமபலமுள்ள பாகங்களையுடைய எஞ்சினைப் போல வேலைசெய்தல்வேண்டும். அவன்மனது இயற்கையின் மூலாதாரமுள்ள உண்மைகளைப்பற்றிய அறிவின்

களஞ்சிய மாயிருத்தல்வேண்டும்—மனசாட்சியின் வேலையாளான திடசித்தத்தைக்கண்டு அவனுடைய காமாதிகள் ஓட்டமெடுக்கவேண்டும்—அற்பத்தனத்தை யெல்லாம் வெறுத்து பிறரையும் தன்னைப்போல மதிக்கவேண்டும். இவனைத்தான் ஸர்வவிஷய ஞானமுள்ளவன் என நான் கருதுவேன் ; ஏனென்றால் அவர் இயற்கைக்கு ஒத்துவிட்டார். பராசக்தியை தனக்கு வேண்டுமளவு உபயோகப்படுத்திக் கொள்ளுவார் ; பராசக்தியும் இவரை உபயோகப்படுத்திக் கொள்ளுவாள். இது உண்மைக் கல்வியாயின், என்னுடைய புலன்களையடக்க, மேற்சொன்ன சாஸ்த்திரங்களை நான் ஒருபோதும் உபயோகப்படுத்த முடியவில்லை என்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். ஆகையால் பிரதமப் படிப்பை எடுத்துக் கொண்டாலுஞ்சரி, உயர்தரப் படிப்பை எடுத்துக் கொண்டாலுஞ் சரி, அது முக்கிய சங்கதிக்கு உபயோகப் படுவதில்லை. அது நம்மை மனிதர்களாக்குவதில்லை. நம்முடைய கடமையைச் செலுத்தவும் நம்மை பலப்படுத்துவதில்லை.

படிப்பவர் :—அப்படியானால் நான் உம்மை வேறொருகேள்வி கேட்கவேண்டும். இந்தச் சங்கதிகளை யெல்லாம் என்னுடம் சொல்ல உம்மை எது பலப்படுத்திற்று. உயர்தரப் படிப்பு நீர் அடையப் பெறாவிட்டால் நீர் சொன்னவற்றையெல்லாம் விவரித்துச் சொல்ல எப்படி உம்மால் ஆகும்.

பத்திராதிபர் :—நீர் நன்றாய்ப் பேசினீர். ஆனால் எனது பதில் சுலபமானது. பிரதம அல்லது உயர்தரப் படிப்பு நான் பெற்றிருக்காவிடில் எனது வாணாள் வீணா

ளாய்ப் போயிருக்கும் என்று ஒரு நிமிஷமேனும் நம்புவ தில்லை. பேசுவதினால் நான் உழைக்கிறேன் என்று கருது வதில்லை. ஆனால் தொண்டு செய்ய வேண்டுகின்றேன்; அந்த இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுவதில், நான் பெற்ற கல்வியை உபயோகப் படுத்திக் கொள்ளு கின்றேன். நான் நன்றாய் உபயோகப்படுத்தினால், அப் பொழுதும் அது ஏழைகளுக்கல்ல ; உம்மைப் போ லொத்தவர்களுக்குத் தான் உபயோகப் படுத்தலாம்; இது என்கட்சியை பலப் படுத்துகின்றது? நீரும் நா னும் தவறான கல்வியின் விஷத்துக்குள்ளகப் பட்டுவிட் டோம். அதன் கேடானபலன்களி னின்றும் நான் விடு பட்டதாகக் கொண்டாடுகிறேன்; என்னுடைய அனுப வத்தின் நயத்தை உமக்குக் கொடுகின்றேன்; அப்படிச் செய்வதில் இந்தக் கல்வியின் "ஊழல்" எடுத்துக்காட்டு கின்றேன்.

மேலும் எழுத்தின் அறிவு ஒரு விதத்திலும் வேண் டியதில்லை என்று நான் கண்டித்துப் பேசவில்லை. அதை ப்பற்றி மிகவும் கொண்டாடக் கூடாது என்பதைத் தான் நான் காண்பித்தேன். அது நமது காமதேனு வல்ல. அதனிடத்திலே அதற்கு வேலையுண்டு. நமது புலன்களை அடக்கி, நமது தர்மசாஸ்திரத்தை உறுதி யான அஸ்திபாரத்தின் மேல் வைத்து விட்டால் அத ற்கு வேலையுண்டு. அப்பொழுது அந்தப் படிப்பு வேண் டுமென்றால், அதை நல்ல உபயோகத்துக்குக் கொண்டு வரலாம். ஒரு நகையைப் போல, நம்மிடத்தில் அது ஏறிக்கொள்ளலாம். ஆகையால் இந்தப் படிப்பைக்கட்டா யமாக்க வேண்டு மென்பதில்லை. நமது புராதன முறை

போதும். ஒருவன் நடத்தையை ஒழுங்கு படுத்துவது தான் அதன் முதல் வேலை; அதுதான் பிரதமக் கல்வி. அந்த அஸ்தி பாரத்தின் பேரில் கட்டப்பட்ட கட்டடம் நீடித்திருக்கும்.

படிப்பவர் :—சுயராஜ்ஜியம் பெருவதற்கு ஆங்கிலப் படிப்பு பயனற்றது என்று நீர் கருதுவதாக நான் நினைத்துக் கொள்ளட்டுமா?

பத்திராதிபர் :—ஆமாம், இல்லை என்பது இரண்டும் என்னுடைய பதில். ஏழைகளுக்கு ஆங்கிலப் படிப்புக் கொடுப்பது அவர்களை அடிமை யாக்குவதாகும். படிப்புக்காக மெக்காலே போட்ட அஸ்திபாரம் நம்மை அடிமையாக்கி விட்டது. அவருக்கு இத்தகைய எண்ணமிருந்ததாக நான் குறிப்பிடவில்லை; ஆனால் இம்முடிவு தான் அதன் பலன். சுயராஜ்ஜியத்தைப் பற்றி அன்னிய பாஷையில் நாம் பேச வேண்டியிருப்பது துக்ககரமான விஷயமல்லவா?

ஐரோப்பியர்கள் தள்ளின முறைகள் நமக்குள் பழக்கப் பட்டுவரும் முறைகள் என்று கவனிக்கத்தக்கது. அவர்களின் பண்டிதர்கள் அடிக்கடி மாறுதல்களைச் செய்கின்றனர். அவர்கள் தள்ளிவிட்ட முறைகளை அறிவின்மையால் நாம் பிடித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பாகமும், அவரவர்கள் தங்கள் ஸ்திதியை விருத்திசெய்ய முயற்சி செய்கின்றன. வேல்ஸ் இங்கிலாந்தில் ஒரு சிறிய பாகம். வெல்ஸுக்காரர்களுக்குள் வெல்ஸ்பாஷையை உயிர்கொடுத்து எழுப்ப பிரயத்தனங்கள் நடந்துவருகின்றன. வெல்ஸ் குழந்தைகள் வெல்ஸ் பாஷை பேச வேண்டுமென்ற இயக்கத்தை தலைமைபூண்டு நடத்

திவருகின்றார்கள். நமது நிலைமை என்ன? நாம் ஒருவருக்கொருவர் தவறான ஆங்கிலத்தில் வர்த்தமானம் எழுதிக்கொள்ளுகிறோம். நம்முடைய எம். ஏக்களும் இந்தத் தவறுகளினின்று நீங்கியவர்களல்ல. நமது முக்கிய எண்ணங்களையெல்லாம் ஆங்கிலத்தில் வெளியிடுகின்றோம். காங்கிரஸ் மகாநாட்டின் நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன. நமது முக்கியப் பத்திரிகைகளெல்லாம் ஆங்கிலத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த நிலைமை வெகுகாலத்துக்கு நீடித்திருந்தால், நமது சந்ததிகள்—நம்மை கண்டித்துச் சபிப்பார்கள். என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம்.

ஆங்கிலப் படிப்பு அடையப் பெற்றதால் நாம் நமது ஜாதியாரை அடிமைப்படுத்தி விட்டோம் என்பது கவனிக்கத் தக்கது. கொடுமையும் சூதும் அதிகரித்துவிட்டன. ஆங்கிலங் கற்றவர்கள் ஜனங்களை ஏமாற்றி பயமுறுத்துவதில் தயங்குவதில்லை. இப்பொழுது ஏதேனும் நாம் ஜனங்களுக்குச் செய்தால், அவர்களுக்குச் சேர வேண்டிய கடனில் ஒரு சிறிய பகுதியைத் தான் செலுத்துகின்றோம்.

நியாயஸ்தலத்துக்குச் சென்றால் நான் ஆங்கில பாஷையை உபயோகப் படுத்த வேண்டியிருப்பது மிகவும் துன்பம்தரக்கூடிய சங்கதியல்லவா? நான் பாரிஸ்டர் ஆகிவிட்டால் என் தாய் பாஷையை நான் பேசலாகாது, வேறொருவர் என் சொந்த பாஷையினின்று தர்ஜமா செய்யவேண்டும். இது வியசனிக்கத்தக்கதல்லவா; இது முற்றிலும் அபத்தமானதல்லவா? இது அடிமைத்தனத்தின் குறியல்லவா? இதற்காக ஆங்கிலேயர்களைக் குற்

றம் கூறுவதா அல்லது என்னையா? ஆங்கிலம் கற்ற நாம் தான் இந்தியாவை அடிமைப் படுத்தினோம். நம்முடைய ஜாதியாரின் சாபம் ஆங்கிலேயர்களின் பேரில் விழாது; நம்பேரிலேதான் விழும். உம்முடைய கடைசிக் கேள்விக்கு பதில் ஆமாம் இல்லையென்று சொன்னேனே. ஆமாம் என்பதற்குச் சமாதானம் சொல்லிவிட்டேன், இல்லை என்பதற்கு இப்பொழுது சொல்லுகிறேன். நாகரிக வியாதியினால் மிகுதியும் பீடிக்கப்பட்டிருக்கிறோம்: ஆகையால் ஆங்கிலப் படிப்பின்றி முற்றிலும் வாழமுடியாது. ஏற்கனவே அதை அடையப்பெற்றவர்கள், எங்கெங்கு அவசியமோ அங்குமட்டுமே அதை நல்ல உபயோகத்துக்குக் கொண்டு வரலாம். ஆங்கிலேயர்களுடன் நமக்கிருக்கும் வேலைக்கும் நம்முடைய ஜனங்களோடு அந்த பாஷையிலே தான் பேச முடியும் என்ற சமயங்களிலும், ஆங்கிலேயர்களே தங்கள் நாகரீகத்திலே எவ்வளவு வெறுப்படைந்து விட்டார்கள் என்று தெரிந்து கொள்ளுவதற்கும் நாம் ஆங்கில பாஷை கற்றுக் கொள்ளலாம், அல்லது உபயோகப் படுத்தலாம். ஆங்கிலம் கற்றவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தருமநியாயத்தைத் தங்கள் தாய் பாஷையில் உபதேசிக்க வேண்டும்; அவர்களுக்கு வேறொரு இந்திய பாஷையும் கற்றுக் கொடுக்க வேண்டும். வயதான பிறகு, முடிவில் நமக்கு இது தேவையில்லை என்ற நோக்கத்துடன் அவர்கள் ஆங்கிலம் கற்றுக் கொள்ளலாம். அதனால் பணம்தேடும் நோக்கத்தை ஒழித்து விடவேண்டும். இவ்வளவு குறைந்த அளவில் ஆங்கிலம் கற்றுக் கொள்ளுவதிற்கூட, எதைக் கற்றுக்கொள்ளுவது

எதைக்கற்றுக்கொள்ளக் கூடாது என்பதைக் கவனிக்க வேண்டும். எந்தசாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். ஆங்கிலப்பட்டங்களை கவனிப்பதை நாம் நிறுத்திவிட்டவுடனே, நம்மை ஆள்பவர்கள் தங்கள் காதுகளைத் துடைத்துக்கொள்ள ஆரம்பித்து விடுவார்கள் என்பது உமக்கு வெகு எளிதில் தெரியும்.

படிப்பவர்:—பிறகு, எந்தக்கல்வி நாம் கொடுப்பது?

பத்திராதிபர்:--இது மேலே கவனிக்கத்தக்கது; இருந்தாலும் நாம் விரிவாக கவனிப்போம். நமது பாஷைகளெல்லாவற்றையும் நாம் விருத்தி செய்ய வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். எந்தெந்த விஷயங்களை அவைகளின் மூலமாய்க் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதை இங்கே விரித்துரைக்க வேண்டுவதில்லை. பிரயோஜனமுள்ள ஆங்கிலப் புஸ்தகங்களை இந்தியபாஷைகளில் மொழி பெயர்க்க வேண்டும். அனேக சாத்திரங்களை கற்றுக்கொள்ளும் பாசாங்கை ஒழித்து விடவேண்டும். தரும நியாயத்தைப் புகட்டும் படிப்பை முதலில் நாம் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு படிப்புள்ள இந்தியனும், ஹிந்துவாயிருந்தால், தன் தாய் பாஷையுடன் சமிஸ்கிருதமும், மகம்மதியராயிருந்தால் அராபியும், பார்ஸியாயிருந்தால் பார்ஸீக பாஷையும் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லோருக்கும் ஹிந்தி தெரிய வேண்டும்; சில ஹிந்துக்களுக்கு அராபி தெரிதல்வேண்டும்; சில மகம்மதியரும் பார்ஸீகளும் ஸமிஸ்கிருதம் கற்றுக் கொள்ள வேண்டும். அனேக வடக்கத்தியார்களும் மேற்கத்தியார்களும் தமிழ் அறிதல் வேண்டும், இந்தியா

வுக்கு பொதுபாஷை ஹிந்தி; அதை நாகரம் அல்லது பார்ஸீக எழுத்துகளில் எழுதலாம். ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் நெருங்கின சம்பந்தம் இருக்கும் பொருட்டு இரண்டு எழுத்துக்களையும் தெரிந்துக்கொள்ளுதல் அவசியம். இது நாம் செய்யக் கூடுமானால், வெகு விரைவில் ஆங்கில பாஷையை இந்தியாவில் அதிருக்கும் இடத்தினின்றும் துறத்திவிடலாம். அடிமைகளாகிய நமக்கு இதெல்லாம் அவசியம்; நம்முடைய அடிமைத்தனத்தினால் நமது ஜாதியார் அடிமைப் பட்டனர்; நம்முடைய விடுதலையினால் அவர்களும் விடுதலை பெறுவார்கள்.

படிப்பவர் :—மதசம்பந்தமான கல்வியைப் பற்றிய விஷயம் மிகக்கடினமானது.

பத்திராதிபர் :—எனினும் மதாபிமானம் இல்லாமல் நம்மால் முடியாது. இந்தியா ஒரு போதும் கடவுளற்று இருக்காது. அந்த நாஸ்திகம் இந்த தேசத்தில் செழிக்காது. அந்த வேலை மிகவும் கஷ்டம். "மதக்கல்வி" யைப்பற்றி நினைக்கும் பொழுது என் தலை சுற்ற ஆரம்பிக்கின்றது. நமக்கு மதத்தை போதிப்பவர்கள் சூதுள்ளவர்கள், சுயநயமுள்ளவர்கள் அவர்களின் கிட்ட அணுகவேண்டும். முல்லாக்களும் தஸ்தூர்களும், பிராமணர்களும் தங்கள் கைகளிற் மதச்சாவியை வைத்துக் கொண்டிருக்கின்றனர்; ஆனால் அவர்களுக்கு நல்லறிவு இல்லாவிட்டால், ஆங்கிலக் கல்வியினால் நாம் அடைந்த ஊக்கத்தை "மதக்கல்வி"யில் பிரயோகிக்கவேண்டும். இது கடினமானதல்ல சமுத்திரத்தின் கரை மாத்திரம் தோஷ மடைந்திருக்கிறது;

அந்தக் கரையிலிருப்பவர்களை மாத்திரம் சுத்தப்படுத்த வேண்டியது, இந்த ஜாப்தாவில் வரும் நாமும் நம்மையே சுத்தப் படுத்திக் கொள்ளலாம்; ஏனென்றால் நான் சொன்னதெல்லாம் ஏழை ஜனங்களுக்குப் பொருந்தாது. இந்தியாவை அதன் பூர்வநிலைமைக்குக்கொண்டுவரும் பொருட்டு அந்த நிலைக்கு நாம் வரவேண்டும். நமது நாகரீகத்தில் முற்போக்கு இருக்கலாம், தடங்கலிருக்கலாம், சீர்திருத்தமிருக்கலாம்; ஆனால் ஒரு முயற்சி அவசியமாகும், அது, ஐரோப்பிய நாகரீகத்தை ஒழிப்பதேயாகும் ; மற்றதெல்லாம் தானாகவரும்.

அத்தியாயம் 19

இயந்திரங்கள்

படிப்பவர் :—ஐரோப்பிய நாகரீகத்தை ஒழிக்கவேண்டுமென்று பேசுகையில், நமக்கு இயந்திரங்களே வேண்டாமென்றும் சொல்லுவீர் போலத் தோன்றுகின்றதே.

பத்திராதிபர் :—இந்தக் கேள்வி கேட்டதனால் நான் அடைத்திருந்த புண்ணை மறுபடியும் அவிழ்த்துவிட்டீர். ஸ்ரீ தத்தரால் எழுதப்பட்ட இந்தியாவின் செல்வநிலை சாஸ்திர சம்பந்தமான சரித்திரத்தை நான் வாசிக்கையில் கண்ணீர் விட்டேன். அதை மறுபடியும் நினைத்தால், என் மனது துயரமடைகின்றது. இந்தியாவை ஏழையா

க்கினது இயந்திரங்கள். மான்செஸ்டர் இந்தியாவிலே விளைத்த கேட்டை அளப்பது, தான் அனேகமாய் அழிந்து விட்டன.

ஆனால் நாம் செய்த தவறுக்கு மான்செஸ்டரை எவ்விதம் கூறைகூறலாமோ. நாம் மான்செஸ்டர் துணியைக் கட்டிக்கொண்டோம்; அதனாலே தான் மான்செஸ்டர் அதை உற்பத்திசெய்தது. வங்காளத்தின் தைரியத்தைப் பற்றி நான் வாசித்த பொழுது நான் மகிழ்வடைந்தேன் அந்த மாகாணத்தில் துணிஇயந்திரசாலைகள் இல்லை. ஆகையால், பழைய நெசவுத் தொழிலைத் திருபவும் கொண்டுவர அவர்களால் முடிந்தது. பம்பாயின் இயந்திர சாலையின் வேலையை அதரிக்கிறது என்பது உண்மையே. வங்காளம் இயந்திரங்களாற் செய்யப்பட்ட சரக்குகளை யெல்லாம் வாங்குவதில்லை என்று விளம்பரப் படுத்தி யிருந்தால், மிக்க நலமயாயிருந்திருக்கும்.

இயந்திரங்கள் ஐரோப்பாவைப் பாழாக்க எத்தனித்துவிட்டது. நாசம், ஆங்கிலேயக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கிறது. இயந்திரங்கள் புதிய நாகரீகத்தின் முக்கிய அடையாளம். அது ஒரு பெரும் பாவத்தின் சின்னம்.

பம்பாய்த் தொழிற் சாலை வேலைக்காரர்கள் அடிமைகளாகி விட்டனர். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஸ்திரீகளின் நிலைமை கோரமானது. இயந்திரங்கள் இல்லாத பொழுது இந்த ஸ்திரீகள் பட்டினி கிடக்கவில்லை. இயந்தரப் பித்து நமது தேசத்தில் வளருமாகில் இது சுகமற்ற தேசமாகும். பாபம் என்று கருதப்படலாம்;

இருந்தாலும் இந்தியாவிலே தொழிற்சாலைகளைப் பெருக்குவதைக்காட்டிலும், மான்செஸ்டருக்கு நமது பணத்தை அனுப்பி மெல்லிய மான்செஸ்டர் துணிகளைக் கட்டிக் கொள்ளுவது நலமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மான்செஸ்டர் துணியை உபயோகப்படுத்துவதினால் நமது பணத்தை மாத்திரம் நஷ்டமாக்குகிறோம். ஆனால் இந்தியாவிலே மான்செஸ்டரை உண்டுபண்ணிவரின் நமது இரத்தத்தை இழந்து, நமது பணத்தைக் காப்பாற்றுகிறோம்; ஏனென்றால் நமது ஆத்மா அழிந்து விடும்; இதற்கு தொழிற் சாலை கூலிக்காரர்களே ஏற்ற சாட்சிகள்: தொழிற் சாலைகளினால் பணம் சேர்த்தவர்கள் மற்றைய பணக்காரர்களைவிட நல்லவர்களாயிருக்க முடியாது. இந்தியா தேசத்து ராக்பல்லர் ஆமெரிக்கா ராக்பல்லரைவிட நல்லவர் என்று எண்ணுவது அறிவின்மையாகும்; ஏழை இந்தியா, விடுதலை அடையக்கூடும்; ஆனால் அதர்மத்தால் செல்வமடைந்த இந்தியாவுக்கு விமோசனம் கிடைப்பது கடினமானது. பணக்காரர்கள் ஆங்கிலேயரின் ஆளுகையை ஆதரிக்கின்றனர் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது தான். அது ஸ்திரமாயிருந்தால், அவர்களுக்கு இலாபம். பணம் ஒருவனை திக்கற்றவனாய்ச் செய்து விடுகின்றது. இதை யொத்த தீங்குள்ளது, காம நோய். இரண்டும் விஷம். பாம்பின்கடி, இவைகளிரண்டையும் விட குறைந்தவிஷம்; ஏனென்றால் பாம்பின்விஷம் தேகத்தைக் கெடுக்கும்; ஆனால் மற்றயன உடல், மனது, ஆத்மா மூன்றையும் கொன்றுவிடும். ஆகையால் தொ

ழிற் சாலைகள் வளருவதனால், நாம் சந்தோஷம் அடை யவேண்டியதில்லை.

படிப்பவர்:—இயந்திர சாலைகளை யெல்லாம் மூடிவிட வேண்டுமா ?

பத்திராதிபர் :—அது கஷ்டமானது. ஸ்திரமடைந்த ஒரு விஷயத்தை ஒழிப்பது அவ்வளவு எளிதான காரிய மல்ல, ஒரு விஷயத்தைத் தொடங்காமலிருப்பது, உய ர்ந்த ஞானம் என்று நாம் சொல்லுகிறோம். தொழிற் சாலைக்காரர்களை நாம் தூஷிக்கக்கூடாது ; ஆனால் அவர் களிடம் இரக்கப்படலாம். இயந்திர சாலைகளை அவர்கள் விட்டுவிட நாம் எதிர்பார்ப்பது அதிகம் ; ஆனால் அவை களைப் பெருக்காமலிருக்கும்படி அவர்களை நாம் வேண் டிக்கொள்ளலாம். அவர்கள் நல்லவர்களாயிருந்தால், வரவர தொழிலைக் குறுக்கிக் கொண்டேவருவார்கள். ஆயிரக்கணக்கான வீடுகளில் புராதனமான கைநெசவு த்தறிகளை அவர்கள் ஸ்தாபிக்கக்கூடும் ; இப்படி கையி னால் நூற்கப்பட்ட துணியை அவர்கள் வாங்கிக்கொள் ளலாம். தொழிற் சாலைக்காரர்கள் இதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும், ஜனங்கள் இயந்திரங்களால் செய் யப்பட்ட துணிகளை உபயோகிக்காமல் நிறுத்திவிட லாம்.

படிப்பவர் :—இதுவரையிலும் நீர் இயந்திரத்தில் செய்யப்பட்ட துணியைப்பற்றி பேசினீர் ; ஆனால் இயந்திரத்தால் செய்யப்பட்ட சரக்குகள் அனேகமிருக் கின்றன. அவைகளை நாம் இறக்குமதி செய்யவேண்டும் அல்லது நம்முடைய தேசத்துக்குள் இயந்திரங்களைப் புக விடவேண்டும்.

பத்திராதிபர் :—நமது சுவாமிகள் (விக்கிரகங்கள்) கூட ஜர்மனியில் செய்யப்படுகின்றன. தீக்குச்சிகளையும், குண்டூசிகளையும் கண்ணாடி சாமான்களையும் பற்றிப்பேசுவதிலே என்ன பிரயோஜனம்?

என்னுடைய பதில் ஒன்றே ஒன்றுதான். இந்தச் சரக்குகள் இந்தியாவிலே பிரவேசிக்குமுன், இந்தியா என்னசெய்து கொண்டிருந்தது அதேதான் இன்றைக்கும் செய்யப்படவேண்டும். இயந்திரமில்லாமல் குண்டூசிகள் செய்யமுடியாதவரையில், குண்டூசிகள் இல்லாமல் காலம்கழிப்போம். கண்ணாடிமயக்கு நமக்குவேண்டாம்; வீட்டுப் பருத்தியைக்கொண்டு பழையபடி, வத்தி செய்து, கையாற் செய்த மண்ணகல்களை விளக்குகளாக உபயோகப்படுத்துவோம். அப்படிச் செய்தால் நம்முடைய கண்களைக் காப்பாற்றிக்கொள்ளுவோம், பணத்தையும் மீக்கலாம்; சுதேசித்தொழிலை ஆதரிப்போம் அப்படியே சுயராஜ்ஜியம் பெறுவோம்.

ஜனசமூகம் எல்லோரும் ஒருகாலத்தில் இவைகளை எல்லாம் செய்வார்கள் என்றும் உடனே பலர் இயந்திரச்சரக்குகளை விட்டுவிடுவார்கள் என்றும் எண்ணமுடியாது, எண்ணம் உறுதியானல், எதைவிட்டுவிடலாம் என்று கண்டு கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாய் உபயோகிக்காமல் நிறுத்திவிடலாம், சிலர் செய்வதை, பலர் அனுசரிக்கலாம், கணக்கு சொன்ன தென்னை மரத்தைப்போல இந்தஇயக்கம் வளரும் தலைவர்கள் செய்வதை, ஜனங்கள் சந்தோஷமாய்ச் செய்வார்கள். இந்தவிஷயம் தொந்திரவுள்ளது மல்ல; கடினமுள்ளதுமல்ல, பிறரை நம்முடன் கூடக் கூட்டி

க்கொண்டு போகும் வரையில், நீரும் நானும் காத்திருக்கவேண்டியதில்லை. அதைச் செய்யாதவர்கள் நஷ்ட மடைவார்கள். உண்மை யென்று தெரிந்தும், செய்யாதவர்கள் பயங்காளிகள் என்ற பெயருக்கு தகுதியுள்ளவர்கள்.

படிப்பவர் :—டிராம்வண்டிகளையும் மின்சாரத்தையும் பற்றி என்ன?

பத்திராதிபர்:—இந்தக்கேள்வி மிகவும் பிந்திப்போயிற்று. அதற்குப் பொருள் இல்லை. இருப்புப்பாதைகள் இல்லாமலிருக்க வேண்டுமானால், டிராம் வண்டிகளின்றியும் இருக்கவேண்டும், ஒன்றுமுதல் நூறு பாம்புகள் இருக்கக்கூடிய புற்றைப் போலுள்ளது இயந்திரங்கள். இயந்திரங்கள் உள்ள இடத்தில், பெரிய நகர்கள் உண்டு. பெருத்த நகர் களிருக்கிற பிரதேசத்தில், டிராம்வண்டிகளும் இருப்புப்பாதைகளும் இருக்கிறன. அங்கே, ஒருவன் மின்சாரவெளிச்சத்தைத்தான் காணக்கூடும். இங்கிலீஷ் கிராமங்களில் இந்த சங்கதிகளில் ஒன்றேனுமில்லை. இயற்கையாயில்லாத, போக்கு வரவுக்குரிய சாதனங்கள் அதிகறிக்கின்றவிடத்தில் ஜனங்களின் தேகசௌக்கியம் கெட்டுவிடுகின்றதுஎன்று உண்மையான வைத்தியர்கள் சொல்லுகின்றனர், "ஒரு ஐரோப்பிய பட்டணத்தில் பணப்பஞ்சம் ஏற்பட்டபொழுது, டிாம்வே வரும்படி, வக்கீல் வரும்படி வைத்தியர்களின் வருமானம் எல்லாம் குறைந்துவிட்டன ; ஜனங்கள் சௌக்கியமாயிருந்தார்கள் என்று" எனக்கு ஞாபகமிருக்கிறது. இயந்திர சம்பந்தமாய் ஒரு நல்ல வார்த்தை கூட என்னால் சொல்லமுடிவவில்லை. அவை

களின் தீங்குகளை எடுத்துரைக்க பல புத்தகம் எழுதலாம்.

படிப்பவர் :—நீர் சொல்லிக்கொண்டு வருவதெல்லாம் இயந்திரத்தினுல் அச்சிடப்படுவது. நல்லதா, கெடுதலா ?

பத்திராதிபர் :—சில சமயங்களில் விஷத்தினுல் விஷத்தை மாற்ற உபயோகப்படுகின்றது என்பதை நிரூபிக்கின்ற உதாரணங்களில் இது ஒன்று. எனினும் இது இயந்திரத்தைப்பற்றிய நல்ல அம்சமில்லை. அது சாகும்பொழுது, இயந்திரம் பின்வருமாறு நமக்கு சொல்லுவதுபோலிருக்கின்றது. "ஜாக்கிரதையுடன் என்னை விலக்கிவை ; என்னுல் உனக்கு ஒரு பிரயோஜனமுமில்லை; அச்சிடுவதினுல் உண்டாகும் பலன் இயந்திரப்பித்துக் கொண்டவர்களுக்குத்தான் பிரயோஜனப்படும்." ஆகையால் முக்கியமான சங்கதியை மறந்து விடாதேயும். இயந்திரங்கள் கெட்டவை என்று உணருவது அவசியமாகும். வரவர அது இல்லாமலே நம்மால் இருக்க முடியும். நாம் கோறினபலனை உடனே தரக்கக்கூடிய சாதனத்தை பராசக்தி நமக்கு அளிக்கவில்லை. இயந்திரங்களை ஒரு அருள் என வரவேற்காமல், அதைத் தீங்கு என மதிக்கவேண்டும் ; முடிவிலே அது போய்விடும்.

அத்தியாயம் 20
முடிவு

படிப்பவர் :—உம்முடைய நோக்கங்களிலிருந்து நீர் மூன்ருவது கக்ஷி உண்டாக்குவீர் என்று நான் தெரிந்து கொள்ளுகிறேன். நீர் மிதவாதியுமல்ல அமிதவாதியு மல்ல.

பத்திராதிபர் :—அது தவறு. நான் மூன்ருவது கக்ஷியைப் பற்றி எண்ணவே இல்லை. நாம் எல்லோரும் ஒரேவகையில் எண்ணுவதில்லை. எல்லா மிதவாதிகளும் ஒரேவித நோக்கங் கொண்டவர்கள் என்று நம்மால் சொல்ல இயலாது. தொண்டு புரிதலைமாத்திரம் தொழி லாகக் கொண்டவர்களுக்கு கக்ஷி எதற்கு? மிதவாதிகளு க்கும் அமிதவாதிகளுக்கும் நான் உழைப்பேன். எந்த இடத்திலாவது அவர்களிடமிருந்து நான் வித்தியாசப் பட்டால் என் நிலையை அவர்களுடன் மரியாதையாகச் சொல்லி என்னுடைய தொண்டைப் புரிவேன்.

படிப்பவர் :—அப்படியாயின் அவ்விரு கக்ஷியார்களு க்கும் நீர் என்ன சொல்லுவீர்?

பத்திராதிபர் :—நான் அமித வாதிகளுக்குச் சொல் லுவதாவது. உங்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்று எனக்குத் தெரியும். அது நீங்கள் கேட்டதனுலே மட் டும் கிடைக்காது. ஒவ்வொருவரும் அதை தனக்குத் தானே வாங்கிக்கொள்ள வேண்டும். பிறரால் எனக்குக் கிடைப்பது ஸ்வாராஜ்யமல்ல. அது பரராஜ்யம். ஆகை யால், ஆங்கிலேயர்களைத் துறத்துவதனுலே நீங்கள் ஸ்வ ராஜ்யம் பெற்று விட்டீர்கள் என்று சொல்வது சரியா

காது. ஸ்வராஜ்யத்தின் உண்மையான சுபாவத்தை ஏற்கனவே நான் விரித்துரைத்திருக்கின்றேன். இதை நீங்கள் ஒருபோதும் ஆயுத பலத்தால் அடைய முடியாது. ஆகையால் நீங்கள் அதை ஆத்ம சக்தியால் மாத்திரமே அடைய வேண்டும். உம்முடைய முடிவை அடைய எந்தஸ்திதியிலும் துராக்கிருதச்செயல் அவசியமென்று நீங்கள் எண்ணக்கூடாது.

நான் மிதவாதிகளுக்குச் சொல்லுவதாவது. வெறும் மனுபண்ணிக் கொள்ளுதல் கௌரவக் குறைவாகும். நாம் அதனுல் நமது தாழ்வை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆங்கில ஆளுகை இல்லாமல் முடியாது என்று சொல்லுவது கடவுளை மறுப்பதாகும். கடவுளைத் தவிற எந்த வஸ்துவும் இல்லாமல் எவரும் இருக்கமுடியாது என்று நாம் சொல்லக்கூடாது. மேலும் தற் காலத்திற்கு மாத்திரம் ஆங்கிலேயர்கள் இருப்பது அவசியம் என்று சொல்வது அவர்களை கர்வமுள்ளவர்களாகச்செய்து விடும் என்று அதிசாமான்யமாய் நமக்குத் தெரியவேண்டும்.

ஆங்கிலேயர்கள் மூட்டை முடிச்சுடன் இந்தியாவைவிட்டுச் சென்றுல் அது இந்தியாவை விதவையாக்கிவிடும் என்று எண்ணலாகாது. அவர்கள் கட்டாயத்தின்கீழ் சமாதானத்துடன் வாழவேண்டி இருப்பவர்கள். அவர்கள் சண்டை செய்யலாம். கொதிப்பை அடக்குவதில் பிரயோஜனமில்லை. அதற்கு வழிவிடவேண்டும். நாம் சமாதானத்துடன் வாழ்வதற்கு முன் சண்டைசெய்ய வேண்டிருந்தால் அப்படிச் செய்வது நலம். பலஹீன மானவர்களைக் காப்பாற்ற ஒரு மூன்றும் மனிதன் வேண்டிய தில்லை பாது காப்பு

என்று சொல்லப்பட்ட இதுதான் நம்மை நிலை குலைத்து விட்டது. இத்தகைய பாதுகாப்பு பலமற்றவர்களை இன்னுமதிகமாய் பல மிழக்கச்செய்யும். இதை நாம் உணர்ந்தா லொழிய நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்காது. ஒரு ஆங்கிலப்பாதிரியின் எண்ணத்தை மொழிபெயர்த்துச் சொல்லுகின்றேன். அவர் சொன்னதாவது ஸ்வராஜ்யத்தின் கீழ் உள்ள அராஜகம் ஒழுங்குள்ள அன்னிய ஆளுகையை விட உயர்ந்தது, ஆனால் ஸ்வராஜ்யத்திற்கு அவர் கொடுத்த அர்த்தமும் என்னுடையதும் வேறு. ஆங்கில ஆளுகையின், அல்லது இந்திய ஆளுகையின் கொடுமை நமக்கு வேண்டாம் என்று நாம் கற்றுக்கொண்டு பிறருக்கும் சொல்லவேண்டும். இந்த எண்ணம் நிறை வேற்றப் படுமாகில் மிதவாதிகளும் அமிதவாதிகளும் சேர்ந்து கொள்ளுவார்கள். பிறகு ஒருவர் மற்றவரைக் கண்டு பயப்படவாவது நம்பாமலிருக்கவாவது சமயம் நேராது.

படிப்பவர் :—பிறகு, நீர் ஆங்கிலேயர்களுக்கு என்ன சொல்லுவீர் ?

பத்திராதிபர்:—அவர்களுக்கு மரியாதையுடன் நான் சொல்லுவதாவது நீங்கள் என்னை ஆள்பவர்கள் என்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நீங்கள் இந்தியாவைக் கத்திமுனையால் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா அல்லது என்னுடைய சம்மதத்தின் பேரில் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா என்ற கேள்வியைப் பற்றி வாதம் செய்யவேண்டியதில்லை. நீங்கள் இந்த தேசத்திலே இருப்பதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை; ஆனால் நீங்கள் எங்களை ஆண்டபோதிலும்' நீங்கள் ஜனங்க

ளின் வேலைக்காரர்களாய் இங்கு தங்கவேண்டும். உங்கள் இஷ்டப்படி செய்ய வேண்டியவர்கள் நாங்களல்ல; ஆனால் எங்களிஷ்டப்படி செய்ய வேண்டியவர்கள் நீங்கள். இந்த நாட்டிலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டு போன பொருளை நீங்கள் வைத்துக் கொள்ளலாம்; ஆனால் இனி நீங்கள் அப்படிச் செய்யலாகாது. உங்களுக்கிஷ்டமிருந்தால், இந்தியாவைக் காப்பது உங்களுடைய வேலையாகும். எங்களிடமிருந்து வியாபார லாபமடையலாம் என்ற எண்ணத்தை நீங்கள்விட்டு விடவேண்டும். நீங்கள் ஆதரிக்கும் நாகரீகம், நாகரீகத்திற்கு மாறானதுஎன்று எண்ணுகின்றோம். எங்களுடைய நாகரீகம் உங்களுடையதை விட வெகு உயர்ந்ததென்று நாங்கள் கருதுகின்றோம். இந்த உண்மையை நீங்கள் உணர்ந்துகொண்டால் அது உங்களுக்கு நன்மையாகும். இதை உணராவிட்டால் நாங்களிருப்பதுபோல் எங்கள் தேசத்தில் நீங்களுமிருக்கவேண்டும். எங்களுடைய மதங்களுக்கு விரோதமாய் நீங்கள் ஒன்றும் செய்யக்கூடாது. ஹிந்துக்களின் நிமித்தம் நீங்கள் மாட்டிறைச்சியை விலக்கிவைப்பதும், மகம்மதியர்களுக்காக பன்றியிறைச்சியை விலக்கி வைப்பதும் உங்கள் கடமையாகும். இது வரையிலும் நாங்கள் ஒன்றும் சொன்னதில்லை; ஏனென்றால் நாங்கள் பயப்பட்டுக் கொண்டிருந்தோம்; ஆனால் உங்களுடைய நடத்தையால் எங்கள் மனதைப் புண்படுத்தவில்லை என்று நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை. சுயநயத்தாலோ, அல்லது பயத்தினாலோ, எங்களுடைய எண்ணங்களை வெளி விட வில்லை. ஆனால் இப்பொழுது தைரிய

மாய்ப் பேசுவது எங்கள் கடமை எனக்கொண் டோம். உங்களுடைய பள்ளிக்கூடங்களும் நியாயஸ்தல ங்களும் பயனற்றவை யென்று நாங்கள் எண்ணுகின் ரும். எங்களுடைய புராதனப் பள்ளிக் கூடங்களும் நியாயஸ்தலங்களும் திரும்பவும் ஏற்படவேண்டுமென்று நாங்கள் விரும்புகின்ரும். இந்தியாவின் பொதுபாஷை ஹிந்தியே யொழிய ஆங்கிலமல்ல. ஆகையால் நீங்கள் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். எங்களுடைய தேச பாஷையில் தான் உங்களிடம் இனிமேல் பேசு வோம்.

இருப்புப் பாதைகளிலும் ராணுவத்திலும் நீங்கள் பணம் செலவழிப்பதை நாங்கள் சகிக்கமாட்டோம். அவைகளுக்கு இடமே இல்லை. உங்களுக்கு ருஷி யாவிடத்தில் பயமிருக்கலாம்; எங்களுக்கு இல்லை. அது வந்தால் நாங்கள் அதைப் பார்த்துக் கொள்ளுகிரும். நீங்கள் எங்களோடிருந்தால் நாம் இருவரும் பார்த்துக் கொள்ளலாம். எங்களுக்கு ஐரோப்பியத் துணி யொன் றும் வேண்டியதில்லை. எங்கள் வீட்டிலேயேசெய்த சரக் குகளைக்கொண்டு நாங்கள் நிர்வகித்துக்கொள்வோம். நீங் கள் ஒரு கண்ணை மான்செஸ்டர் பேரிலும் மற்றொரு கண்ணை இந்தியா பேரிலும் வைக்கவேண்டியதில்லை. நம் மிருவர் லாபமும் ஒன்ருயிருப்பின் நாம் சேர்ந்துழைக்க லாம். இது உங்களிடம் கர்வத்திஞல் சொல்லப்பட்டத ன்று. உங்களிடம் ராணுவபலம் மிகுதியும் இருக்கின் றது. உங்களுடைய கடற்படை ஒப்பற்றது. உங்கள் வழியிலேயே உங்களுடன் உங்களைப்போல் நாங்கள் சண்டைசெய்ய இஷ்டப்பட்டால் அது எங்களால் முடி

யாதகாரியம். ஆனால் மேற்சொன்ன விண்ணப்பங்களை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிடில் இனி நாங்கள் ஆளப்படப் போவதில்லை. உங்களுக்கு இஷ்டமிருந்தால் எங்களைத் துண்டுதுண்டாக வெட்டலாம். பீரங்கிவாயில் வைத்து எங்களை சுட்டெரியலாம். எங்களுடைய மனப்பாங்குக்கு நீங்கள் விரோதமாய் நடந்தால் உங்களுக்கு நாங்கள் உதவிபுரிய மாட்டோம். எங்களுடைய உதவியின்றி நீங்கள் மேலே ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது என்று எங்களுக்குத் தெரியும்.

உங்களுடைய அதிகாரத்தின் மயக்கத்தில் இதெல்லாவற்றைப்பற்றியும் நீங்கள் சிரித்தாலும் சிரிக்கலாம். உங்களுடைய மயக்கத்தை உடனே போக்க எங்களுக்கு முடியாமலிருக்கலாம். ஆனால் எங்களுக்கு ஆண்மைத்தன மிருப்பின் உங்களுடைய மயக்கம் சுயநாசமுள்ளதென்றும், எங்கள் பொருட்டு சிரித்தசிரிப்பு மூளையின் பிறழ்ச்சி என்றும் நீங்கள் சீக்கிரம் தெரிந்துக் கொள்வீர்கள். நீங்கள் கடவுளிடத்தில் பற்றுள்ள ஜாதியார் என்று முற்றிலும் நாங்கள் நம்புகின்றோம். மதங்களுக்கு தாய் பூமியான தேசத்தில் நாம் வசிக்கின்றோம். நாமிருவரும் எப்படி ஒன்று/சேர்ந்தோம் என்பதை கவனிக்க வேண்டியதில்லை. ஆனால் நம்முடைய சம்மந்தத்தை நல்வழியில் உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.

இந்திய அதிகாரிகளாக வந்திருக்கும் ஆங்கிலேயர்கள் இங்கிலீஷ் ஜாதியாருள் நல்லமாதிரி உள்ளவர்கள் அல்ல; பாதி ஆங்கிலேயர்களாக நடிக்கும் நாங்களும் எங்கள் ஜாதிக்கு தக்கமாதிரிகளல்ல. நீங்கள் செய்த யாவற்றையும் ஆங்கில ஜாதியார்கள் அறிவார்களானால்

உங்களுடைய செயல்களில் பெரும்பான்மையை எதிர்த்து நிற்பார்கள். இந்தியரின் பெரும்பான்மையோர்களுக்கு உங்களிடம் வேலை இருந்ததில்லை. நீங்கள் உங்கள் நாகரீகத்தை விட்டுவிட்டு உங்களுடைய வேதங்களை ஆராய்ச்சி செய்தால் நாங்கள் கேட்பது நியாயமென்று நீங்கள் தெரிந்து கொள்ளுவீர்கள். நாங்கள் வேண்டுவனவற்றை முற்றிலும் கொடுத்தால் மாத்திரம் நீங்கள் இந்தியாவில் இருக்கலாம். இந்த நிபந்தனைகளுக்கு நீங்கள் உட்பட்டிருந்தால் உங்களிடமிருந்து நாங்கள் அநேக விஷயங்களைக் கற்றுக் கொள்ளுவோம், நீங்கள் எங்களிடமிருந்து அநேகம் கற்றுக்கொள்ளலாம். அப்படிச்செய்தால் நம்மிருவருக்கும் லாபமுண்டாகி உலகமும் லாபமடையும். நம்முடைய சம்மந்தத்தின் மூலம் மதசம்மந்தமான க்ஷேத்திரத்தில் வேறொன்றினால் மாத்திரமே அது நடக்கும்.

படிப்பவர் :—நம்முடைய ஜாதியாருக்கு நீர் என்ன சொல்லுவீர் ?

பத்திராதிபர் :—ஜாதியார் யார் ?

படிப்பவர் :—நீரும் நானும் எண்ணிக்கொண்டிருக்கும் அவர்கள்; அதாவது ஐரோப்பிய நாகரீகத்தினால் பீடிக்கப்பட்டவர்களும் சுயராஜ்ஜியம் அடைய ஆவலுள்ளவர்களாயிருப்பவர்களும்.

பத்திராதிபர்:-அவர்களுக்கு நான் சொல்லுவது உண்மையான தேசபக்தியுள்ள இந்தியர்கள்தான், பயப்படாமல் மேற் சொன்ன ரீதியில் ஆங்கிலேயர்களுடன் பேசக்கூடும். இந்திய நாகரீகம் உயர்ந்ததென்றும் ஐரோப்பிய நாகரீகம் ஒன்பது நாள் ஆச்சரியம் என்றும் மனப்

பூர்வகமாய் நம்புகிறவர்களும் தான் அத்தகைய தேச பக்தி உடையவர்களாய்க் கருதப்படுவார்கள். இத்தகைய நிலையற்ற நாகரீகங்கள் தோன்றி யழிந்திருக்கின்றன; இன்னும் தங்களுக்குள்ளேயே தோன்றியழியும் ஆத்மசக்தியின் அனுபவமடைந்து, மிருக பலத்தின் முன்னே நடுங்காமல், எந்த சந்தர்ப்பத்திலும் மிருக பலத்தை உபயோகிக்க இஷ்டப்படாதவனே இந்திய நாகரீகம் உயர்ந்ததெனக் கொள்ளுவான். ஏற்கனவே விஷம் உண்டதால் இந்தப் பரிதாபமான நிலைக்கு வந்ததை நொந்து அதிருப்தியடை பவனுக்குத்தான் தேசபக்தி ஊறும்.

இத்தகைய இந்தியன் ஒருவனிருப்பினுஞ்சரி, அவன் மேற் சொன்ன வகையில் தைரியமாய் ஆங்கிலேயர்களிடம் பேசினுல் ஆங்கிலேயர்கள் அவனுக்குச் செவிகொடுத்துத்தான் தீரவேண்டும்.

இவைகளெல்லாம் கேவலம் நமது தேவைகளல்ல; ஆனுல் அவை நமது மனோநிலைமையைக் காண்பிக்கின்றது. கேட்டதினுல் மட்டும் நமக்கு ஒன்றும் கிடைக்காது. நாம் வேண்டுவனவற்றை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்; அந்த முயற்சிக்குத் தக்க பலம் வேண்டும்; அந்த பலம் :

(1) ஆங்கில பாஷையை அடிக்கடியில்லாமல் அரிதாய் உபயோகப் படுத்துபவனுக்கு வரும்.

(2) வக்கீலாயிருந்தால் தன் தொழிலை விட்டு விட்டு கை நெசவுத் தறியை எடுத்துக் கொள்ளுபவருக்கு வரும்.

(3) வக்கீலாயிருந்தால் தன்னுடைய அறிவைத்

தனது ஜனங்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும், விஷயங்களை விளக்கிக் காட்டுவதில் உபயோகப் படுத்துபவனுக்கு வரும்.

(4) வக்கீலாயிருப்பின் கட்சிகளின் சண்டைகளிற் தலையிடாமல், நியாயஸ்தலங்களுக்குப் போவதை ஒழித்துத் தன்னுடைய அனுபவத்தைக்கொண்டு பிறரையும் போகாமல் தூண்டுபவற்கு வரும்.

(5) வக்கீலாயிருப்பின் அவர் தொழிலை விட்டுவிடுவதினால் நியாயாதிபதியாயிருக்க மறுதளித்து விட்டவருக்கு, வரும்.

(6) வைத்தியராயின் மருந்தை விட்டுவிட்டு தேகத்தை சீர்ப்படுத்துவதைக் காட்டிலும் ஆத்மாவை சீர்ப்படுத்துதல் அவசியம் என்று அறிந்து கொண்டவருக்கு வரும்.

(7) வைத்தியராயின் எந்த மதத்தினராயினுஞ்சரி ஐரோப்பிய வைத்தியர்கள் பழக்கப்படுத்திக்கொண்ட ஜீவமிருகாங்கச் சேதத்தின் மூலமாய் வியாதிகள் குணமடைவதைக் காட்டிலும், தேகங்கள் நோய்கொண்டிருப்பது நலம் என்று அறிந்துகொண்டவருக்கு வரும்.

(8) வைத்தியராயிருந்தாலும் கைநெசவுத் தறியை எடுத்துக் கொண்டால்; நோயாளிகள் அவரிடம், நோயின் காரணத்தைச் சொல்லப், பயனற்ற மருந்தைக் கொடுத்து, அவர்களைத் திருப்தி செய்வதைக் காட்டிலும், காரணத்தை நீக்க அவர்களுக்கு அவர் புத்திகூறினால்; மருந்து சாப்பிடாததனால் ஒருக்கால் நோயாளி இறப்பினும் உலகத்துக்கு நஷ்டமில்லையென்றும், உண்மையிலேயே அவனிடம் இரக்கங்கொண்டவராவர் என்று தெரிந்து கொண்டவருக்கு வரும்.

(9) பணக்காரனாயிருப்பினும் பணத்தை இலக்ஷியம் செய்யாமல், தன் மனதில் உள்ளதை வெளியே சொல்லி, ஒருவருக்கும் பயப்படாதவனுக்கு, வரும்.

(10) பணக்காரனாயின் கைநெசவுத் தறிகளை ஸ்தாபித்து அந்த நெசவுத் துணிகளைத் தானே கட்டிக்கொள்ளுவதால் பிறரையும் கைத்தறித் துணிகளை உபயோகிக்கத் தூண்டுபவனுக்கு, வரும்.

(11) மற்றைய இந்தியனைப் போல இது அனுதாபத்துக்கும், துக்கத்துக்கும், பிராயச்சித்தத்துக்கும் காலமென்று அறிந்தவனுக்கு, வரும்.

(12) மற்றைய இந்தியனைப் போல ஆங்கிலேயர்களைக் குறைகூறுவது பயனற்றது, என்றும் அதேகாரணத்தினால் அவர்கள் இங்கு தங்கி யிருக்கிறார்களென்றும், நாம் நம்மைச் சீர்திருத்திக் கொண்டால் ஒருக்கால் அவர்கள் போய்விடுவார்கள், அல்லது அவர்களுடைய இயற்கைக்குணத்தை மாற்றிக்கொள்ளுவார்கள் என்று அறிந்தவனுக்கு, வரும்.

(13) மற்றையவர்களைப் போலக், கஷ்ட சமயத்தில் யாதொரு கொண்டாட்டமும் கூடாதென்றும் நாம் தாழ்ந்த நிலையிலிருக்கையில், சிறையில் இருப்பது அல்லது தேசப்பிரஷ்டமாவது மிக்க நலம் என்று உணர்ந்தவருக்கு, வரும்.

(14) மற்றவரைப் போல ஜனங்களுக் குழைப்பதற்காக கைதுசெய்யப்படாமல் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று நினைப்பது அறிவின்மை என்று அறிந்தவருக்கு, வரும்.

(15) மற்றைய வரைப் போல, உயர்ந்ததென்றும்

நாம் நினைப்பவற்றைச் சரியாய்ச் சொல்லி, வந்தபலன்களை அனுபவித்தல் நமது கடமை யென்றும் அப்பொழுதுதான் நம்முடைய பேச்சு பிறர் மனதில் பதிவுபடும் என்பதையும் தைரியத்துடன் ஏற்படும் பலனை எதிர்கொண்டவருக்கு, வரும்.

(16) மற்றையவரைப் போல கஷ்டப்பட்டால் தான் நாம் விடுதலை யடையலாம் என்று அறிந்தவருக்கு, வரும்.

(17) மற்றையவரைப் போல ஐரோப்பிய நாகரீகத்தை ஆதரிக்கும் பாபத்துக்கு அந்தமான்தீவுக்கு அனுப்பப்படும் தீபாந்தர சிக்ஷையும் போதுமான பிராயச்சித்தம் அல்லவென்றும் சாத்வீக எதிர்ப்பில் இன்னும் அதிகக்கஷ்டப் படவேண்டு மென்றும் அறிந்தவருக்கு, வரும்.

(18) மற்றையவரைப் போல ஒரு ஜாதியும் கஷ்டப்படாமல் உயரவில்லை யென்றும், யுத்தத்திலும்கூட, உண்மையான ருசு, சகிக்கும் சக்தி யொழிய பிறரைக் கொல்லுதல் அல்ல வென்றும், சாத்வீக எதிர்ப்பில் இன்னும் அதிகக் கஷ்டப் படவேண்டு மென்றும் அறிந்தவருக்கு; வரும்.

(19) மற்றையவரைப் போல, மற்றவர்கள் ஒரு விஷயத்தைச்செய்தால் நானும் செய்வேன் என்று சொல்லுவது வீண்சாக்கு, என்றும் நாம் சரியென்று எண்ணுவதை, நாம் செய்ய வேண்டுமென்றும், மற்றவர்கள் அதைப்பார்த்து செய்வார்களென்றும், ஒரு ருசியான பதார்த்தத்தைக் காணில் அதைப் பிறர் ருசிபார்க்கு மட்டும் நான் தாமதிப்பதில்லையென்றும்; தேசத்திற்காக

முயற்சிசெய்து அதற்காக வருந்துவது பக்ஷணம் போன்றது என்றும் கட்டாயத்தினுல் கஷ்டப்படுவது கஷ்டமல்லவென்றும் தெரிந்தவர்க்கு, வரும்.

படிப்பவர் :—இது பெரிய ஜாப்தா. எப்பொழுது இதை எல்லோரும் நிறைவேற்றுவார்கள்?

பத்திராதிபர் :—நீர் தப்பிதம் பண்ணுகின்றீர்; உமக்கும் எனக்கும் பிறரிடம் காரியமில்லை. ஒவ்வொருவரும் தன் கடமையைச் செய்தால், எனக்குழைத்துக் கொண்டால், பிறருக்கு என்னுல் உழைக்க முடியும். உம்மை விட்டுப் பிரிவதற்கு முன் நான் பின்வருவனவற்றை மறுபடியும் எடுத்து சொல்லுகின்றேன்.

(1) உண்மையான சுயஆட்சி, தன்னை அடக்கி ஆளுதல் ஆகும்.

(2) அதற்கு வழி சாத்வீக எதிர்ப்பு? அதாவது ஆத்ம சக்தி அல்லது சத்தியாக்கிரகம்.

(3) இந்த பலத்தை உபயோகப் படுத்தும் பொருட்டு எல்லா வகைகளிலும் சுதேசியத்தை அனுஷ்டித்தல் வேண்டும்.

(4) ஆங்கிலேயர்கள் இருக்கக் கூடாது என்றல்ல, பிரதிக்குப்பிரதி செய்யவேண்டு மென்றல்ல, நமது கடமையைச் செய்யவேண்டு மென்றதனுலே நாம் செய்யவேண்டு வனவற்றைச் செய்யவேண்டும். ஆங்கிலேயர்கள் உப்புவரியை நீக்கி, நமது பணத்தை திரும்பவும் கொடுத்து, உயர்ந்த பதவிகளை இந்தியர்களுக்குக் கொடுத்து, ஆங்கிலத்துருப்புகளை எடுத்துவிட்டாலும், இயந்திரசாலைகளிற் செய்யப்பட்ட சரக்குகளை உபயோகப்படுத்தமாட்டோம்? ஆங்கில பாஷையையும், இன்

னும் அவர்களுடைய அனேக கைத்தொழில் சரக்கு களையும் உபயோகப்படுத்திக் கொள்ளமாட்டோம். இந்த விஷயங்கள் அவைகளின் சுபாவத்தினாலேயே தீங்கிழைப்பவை. ஆகையால் அவைகள் நமக்கு வேண்டாம். எனக்கு ஆங்கிலேயர்களிடம் விரோதமில்லை. ஆனால் அவர்களின் நாகரிகத்தின் மீது விரோதமுண்டு.

ஸ்வராஜ்ஜியம் என்ற பதத்தை, அதன் உண்மைப் பொருளை அறியாது உபயோகப்படுத்தி வந்தோம் என்பது எனது அபிப்பிராயம். நான் அதைத்தெரிந்து கொண்டபடி, அதை விளக்கிச்சொல்ல முயன்றேன்? என்னுடைய வாழ்வை அதை அடைவதற்கென்றே சமர்ப்பணம்செய்துவிட்டேன் என்பதற்கு எனது மனச்சாட்சி அத்தாட்சி கூறுகின்றது.

இந்தியாவும் சுய ஆட்சியும்

தேசராஜீய சரித்திர நூல்

"இந்தியாவும் சுய ஆட்சியும்" என்ற புத்தகம் சுமார் 360 பக்கங்கள் கொண்டது. இப்புத்தகத்திற்கு, திருமயிலை முனீந்திரராகிய டாக்டர் சுப்பிரமணிய ஐயர் ஓர் அரிய முகவுரை எழுதியிருக்கின்றனர். இந்தியா, பண்டைக்காலத்து அடைந்திருந்த பெருமையும், ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபார விஷயமாக எங்ஙனம் வந்தனரென்பதும், அன்னார் கைத்தொழில் சம்பந்தமாக அநுசரித்துவந்த முறையினால் இந்தியாபடும்துன்பமும், இந்தியாவைப்பற்றிப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவ்வப்பொழுது கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையும், சுய ஆட்சிக்கிளர்ச்சி இந்தியாவில் தோன்றிய விதமும், 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி மிஸ்டர் மாண்டேகு பார்லிமெண்டில் வெளிப்படுத்திய அறிக்கையைப்பற்றியும், 1918-ம் வருஷ இறுதியில் நடந்த டில்லிக் காங்கிரஸ் நடவடிக்கைகளும், பிறவும் விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன. ஆங்கில மறியாத் தமிழர் ஒவ்வொருவரும், இவ்வரிய நூலை வாசிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். இந்திய அரசியல் விஷயங்கள் யாவும் இந்த ஒரு நூலில் அழகாகத் தொகுத்துக் காட்டியிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நூலை வெளிப்படுத்தியவருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றதென்று நாம் கூறுவது மிகையாகாது. இந்நூல் உயர்ந்த கடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபாய் 1-8--0."—தேச பக்தன் மதிப்புரை.

கணேஷ் கம்பெனி, 39, தம்பு செட்டி தெரு, சென்னை

மகாத்மா காந்தியின்
சிறைச்சாலை யனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமானத் தவச்சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ்சலியாது ஸாத்விக எதிர்ப்பையே சாதனமாகக்கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ 0—8—0.

ஒத்துழையாமை ஏன்?

இப்பொழுது தேசமெங்கும் தெய்வீக ஆவேசத்துடன் வேரூன்றிவரும் ஒத்துழையாமை இயக்கத்தின் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய் ஒரு கோர்வையாக அறியவிரும்புவோருக்கு உற்ற நூல். ஒத்துழையாமையே சுயராஜ்ய வாழ்வுக்கும் சுய மதிப்புக்கும் ஒப்பற்ற சாதனம் என்பதும், அதன் உள்ளுறை தத்துவங்கள் இன்னவென்பதும், செம்பாகமான தமிழ் நடையில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. ஒத்துழையாமை விஷயமாக மகாத்மா காந்தி செய்துள்ள அரிய பிரசங்கங்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை ரூ 0—8—0.

பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கைவளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக்கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வுற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக்காணலாம். ராஜீயவிஷயத்தில் உயர்நிலைமையெய்துமுன், செல்வநிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டுமென்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ 1—0—0.

கணேஷ் கம்பெனி, 39, தம்பு செட்டி தெரு, சென்னை

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தனுள் ஒன்ருகவிளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழையநூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகனுகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழாரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் கைதொழு தேத்துவரென்பதையும், முன்னர் செய்த இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்குமென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம்மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந்நூற்குச் சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர். ந. பலராமையர் அவர்கள் இயற்றியது. 1—0—0.

கணேஷ் கம்பெனி, 39, தம்பு செட்டி தெரு, சென்னை

உ சிவமயம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]